மதமும்
சம்மதம்

விலை $1.00

6வது இதழ்

நவம்பர் 1995



ரஷ்யாவில் மாஸ்கோ நகரில் கிருஷ்ண பக்தர்கள் கீர்த்தனம் பாடும் காட்சி! (இந்துமதம் உலகம் பூராகவும் தானாக வளர்ந்து வருகிறது!)

மதம் வெளியீடு

வாசகர்களுக்கு வணக்கங்கள் பல. நீங்கள் ஆவலோடு எதிர்பார்க்கும் உங்கள் மதம் சஞ்சிகை தாமதத்தோடு இம்முறை வெளிவருவதையிட்டு வருந்துவதோடு, அடுத்து வரும் இதழ்கள் உரிய நேரங்களில் வெளிவர எல்லாம் வல்லவனை, எங்கும் நிறைந்தவனை வேண்டுவோமாக,

இம்முறை சிறுவர்க்கான பகுதி (சிறுவர் சத் சங்கம்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் எதிர்காலமும், இனத்தின் எதிர்காலமும், நாட்டின் எதிர்காலமும் சிறுவர்களிலே தங்கியுள்ளது. எமது பிள்ளைகள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் வளர்ச்சி பெற்று வாழ்வதற்கு இளமையிலேயே அவர்களுக்கு நல்ல நெறிகளைப் புகட்ட வேண்டும், நல்ல உணர்வுகளை வளர்க்க வேண்டும்.

" இளமையில் கல் " என்பது மாபெரும் தத்துவம். அத்தோடு கனடாவில் வளரும் பிள்ளைகள் பெரும்பாலும் கெட்டுப்போவதற்குரிய காரணம், பொதுப்பாடசாலைகளில் சமயக் கல்வி இல்லை, அதோடு சட்டங்களைக் காட்டி பெற்றோரை மிரட்டி தாம்நினைத்த பாட்டுக்குக் கெட்டுப் போகிறார்கள். இதனால் பிள்ளைகளின் எதிர்காலம் சீரழிவான வழிக்குத் தள்ளப்பட்டுவிடுகிறது. இதிலிருந்து பிள்ளைகளைக் காப்பாற்றி, சிறந்தவர்களாக வாழ வழிவகுப்பது பெற்றாரின் கடமை.

பிள்ளைகளின் நல்வாழ்வுக்கு பெற்றாரின் ஒத்துழைப்பு மிக மிக முக்கியம்!

. முக்கியமாக மதஅறிவு பிள்ளைகளுக்கு போதிக்கப்பட வேண்டும். அதனால் அவர்கள் நல்லவர்களாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும், நல்ல குடும்பத்தை அமைத்து மகிழ்வோடு வாழ்வார்கள். பிள்ளைகளுக்கு பணம் மட்டும் போதுமா? எதிர்காலத்தில் சீரும் சிறப்போடும் வாழவேண்டுமல்லவா? அவர்களது எதிர்காலத்தை உருவாக்குவது பெற்றோர்தான். ஒவ்வொரு பிள்ளையிடமும் அளப்பரிய சக்தி இருக்கிறது அதை வெளிப்பட வைப்பது ஆன்மீகம்.

ஆன்மீக நெறிகளை சிறுவயதிலேயே பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்க்கவேண்டும். நல்ல நினைவுகளும், நல்ல சிந்தனைகளையும் இளம் நெஞ்சங்களில் பதியவைப்பதால், பதியப்பட்ட நல்ல நினைவுகளால் அவர்களுக்கு நல்லகுணங்கள் வாய்க்கப்பெற்று, நல்லவர்களாகவும் பொறுப்புள்ளவர்களாகவும் வளர்வதால், நல்லோர்களின் நல்லாசிகள் பெற்று எதிர்காலத்திலே சிறந்த கல்விமான்களாகவும், செல்வந்தர்களாகவும், புகழோடும் வாழுவார்கள்.

நமது பிள்ளைகளின் உயர்வைமட்டும் சிந்தித்தால் போதுமா? எமது இனம் முன்னேற்றம் கண்டால்தான் நாம் பிற இனத்தவர் முன்னால் தலை நிமிர்ந்து முழுமனிதராக வாழமுடியும். இனத்துக்காக, மொழிக்காக, ஏதும் செய்யமுடியாவிட்டால் கூட பரவாயில்லை. ஆனால் இந்த உண்மையை மனதார யார் ஏற்றுக்கொள்கிறார்களோ அவர்கள் அடிமைநிலை அற்ற முழுமனிதராகும் தகுதிபடைத்தவர்கள்.

யாரெல்லாம் தனதுஇனத்தை, தனது மொழியை, தனது மதத்தை புறக்கணித்து விட்டு அன்னியதைத் தழுவுகிறார்களோ அவர்கள் அறியாமையால் அடிமைத்தனத்துக்கு வழிதேடிச் செல்கிறார்கள். நல்லதை அறிந்து நலம்பெற வாழ்வோம். மதம் வாசகர்களுக்கு நன்றிகளும் நல்லாசிகளும் பலப் பல உரித்தாகட்டும்.

ஆசிரியர் : ***உங்கள் அடியார்***

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் "

CANADA GNANA MANTRAM

421 Jane St, P.O Box # 25002

Toronto Ontario M6S 3Z0

Tel: (416) 7697747

தமிழ் ஈழத்துப் பெரியார்

தமிழ் ஈழத்தின் தன்நிகரற்ற சமயப் பணியாளர்

தெய்வநிலை அடைந்துவிட்ட அமரர்,

ஆத்மஜோதி நா. முத்தையா

இந்து மத சஞ்சிகையான ஆத்மஜோதியை பல ஆண்டுகளாக வெளியிட்டு வந்தவரும் ஈழத்து இந்துசமயப் பேரவையின் தலைவரும், கைதடி அனாதைச் சிறுவர் இல்லத்தை நடாத்திவந்தவரும், இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, கனடா, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் தனது சமயப் பணிகளை ஆற்றி இறுதியில் கனடாவில் மொன்றியால் நகரிலே 1995 ஆவணிப் பௌர்ணமி நாளன்று மொன்றியால் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறும் வேளை சடஉடலை நீத்து அமர நிலை எய்தினார்.

வாழ்நாள் பூராவும் இறை உணர்வு, இன உணர்வு, மொழியுணர்வுடன் தொண்டாற்றி, தனக்கென ஒருதுணை தேடாது பிரமச்சாரியாகவே வாழ்ந்து தமிழ் மக்களுக்காகவும், அனாதைப் பிள்ளைகளுக்காகவும் தனது வாழ் நாளை அர்ப்பணித்த மாமனிதர். அவரது வாழ்வு கர்மயோகத்தைப் பிரதிபலிக்கின்றது. என் பயன் பணி செய்து கிடப்பதே என விவேகானந்தரின் கூற்றுப்போல், பெரியாரும் தன்னை பணிக்காகவே அர்ப்பணித்து உயர்வடைந்தார். அவரது பிரசங்கங்களிலே நாம் எல்லோரும் திருவடி யாத்திரைக்காரர் என்று அடிக்கடி கூறுவார்.

ஆமாம் நாமெல்லோரும் தெரிந்தோ தெரியாமலோ இறைவனின் திருவடியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறோம். எல்லா ஜீவன்களும் முக்தியை நோக்கி நகருகின்றன, பல பிறவிகள், அதன் அனுபவங்கள், இதனால் பெறப்படும் அறிவு, அது உணர்வுகளில் ஊறி, ஞானமாகி, வாழ்வு நிலையாமை என்பதையும், இன்பமும் துன்பமும் பந்தங்களில் கட்டவைத்து பிறவிகளை ஏற்படுத்துகிறது என்பதை அறிந்து விடுபடும் ஞான உணர்வைப் பெற்று இறுதியில் ஜீவன் முக்தர்களாக பரிணமிக்கும் போது விடுதலையாகிய முக்தி (இறைவன் திருவடி) கிட்டுகிறது.

நமது இலக்காகிய திருவடியாத்திரையை சுலபமாக்குவதற்காகத்தான் மேன்மை அடைந்த மகான்கள் நமக்கு உபதேசங்களை தருகிறார்கள். அதற்கான வழிகளைக் காட்டுகிறார்கள். அந்த உயர்ந்த நிலைக்குச் செல்லும் வழிகளை எமது மக்களுக்கு உணர்த்துவதற்காகத்தான் பெரியார் ஆத்மஜோதி அவர்கள் தமது வாழ்வையே சமயப் பணிக்காகத் தியாகம் செய்தார்.



கலியுகத்திலே யாகம், தவம், யோகம் இவை எல்லாவற்றையும் விட பஜனை, பிரார்த்தனை, நாம சங்கீர்த்தனம்தான் சிறந்தது. அவரது பணியிலே தமிழ் ஈழத்திலே வீட்டுப் பிரார்த்தனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், பாதயாத்திரைகளை அறியாத மக்களுக்கு அவற்றை அறிமுகம் செய்து, திறம்பட நடாத்தி, அதைத் தொடர்ந்தும் நடாத்தவழிசெய்தார். பல சமய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். இறுதியாக அவரால் எழுதப்பட்ட தரிசனம் எனும் நூல் அவர் தரிசித்த பத்து மகான்களைப்பற்றிய நூலாகும் இந்நூல் வாசிக்கும் போது நம்மை உயர்ந்த

நிலைக்கு இட்டுச்செல்லும் சிறந்த நூலாயுள்ளது.

அவரிடம் சிறந்த நாவன்மை, சிறந்த எழுத்து வன்மை, சிறந்த செயலாற்றும் வன்மையும் கொண்டவராக விளங்கினார். அவரது இழப்பு ஈழத்தமிழர்அனைவருக்குமே பெரும் இழப்பாகும். இளமையிலே அவர் கொண்ட வைராக்கியம்தான் அவரைப் புகழோடும், உயர்வோடும் வாழவைத்தது. உயர்வுக்கு அத்திவாரம் இளமைதான். இளமையிலே நல்ல சிந்தனை உதயமாக வேண்டும். உலகிலே உயர்ந்த மக்கள், மகான்கள் எல்லோரும் இளமையில் நல்ல சிந்தனை, நல்ல உணர்வுகள் கொண்டவர்களாக இருந்ததனால் தான் உயர்வடைந்தார்கள்.

சுவாமி விவேகானந்தர் சிறிய பையனாக இருக்கும் போது உண்மையை அறிய வேண்டும், பிறருக்கு உதவவேண்டும், நல்லவனாகவும், வல்லவனாகவும் வாழவேண்டும் எனும் உணர்வு நிரம்பி இருந்ததனால் 30வது வயதிலே அமெரிக்காவுக்கு விஜயம் செய்து உலகப் புகழ் பெற்று விளங்கினார், அவரது ஆங்கில அறிவைக் கண்டு அமெரிக்க மக்கள் அதிசயப்பட்டார்கள். ஆனால் அவரோ தான் ஒரு இந்தியன், தான் ஒரு இந்து என்பதில் பெருமைப்படுகிறேன் எனக் கூறினார்.

பெரியார் ஆத்மஜோதி ஐயாவும் எமது இனம் முன்னேற்றம் காணவேண்டும், சிறுவர்களின் எதிர்காலம் சிறக்க வேண்டும் என விரும்பினார். வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழ்ப் பிள்ளைகள் தமிழை மறந்துவாழும் நிலை கண்டு வேதனைப்பட்டார். ஊமைத்தமிழர்களாகவும், செவிட்டுத்தமிழர்களாகவும் வளர்க்காதீர்கள் என பெற்றோர்களை கேட்டுக்கொண்டார்.

இளமையிலேதான் பிள்ளைகளுக்கு நல்ல அறிவையும், நல்ல உணர்வுகளையும், வளர்க்கவேண்டும். எனும் உண்மையை அடிக்கடி வலியுறுத்துவார். வெளிநாட்டில் வாழ்ந்தாலும் நாம் நிலைதடுமாறக் கூடாது. பிள்ளைகளின் எதிர்காலமும், இளம் குடும்பங்களின் வாழ்வும் மோகத்தினாலும், அறிவீனத்தாலும் சீர்கெடுகின்றது. இந்த நிலை நீங்க பெரியார் ஆத்மஜோதி ஐயா கூறிய நல்ல போதனைகளை உணர்விலே ஊறவிட்டு அதன்வழி நடக்க வேண்டும்.

தாய்மார்களே உங்களால் நல்ல பிள்ளைகளை உருவாக்க முடியும்! உயர்ந்தவர்களை உருவாக்கமுடியும்! மகான்களை உருவாக்கமுடியும்! எமது பெரியார் அவர்கள் பலநல்ல கதைகளை க்கூறி உண்மைகளைப் புரிய வைப்பார்.

ஒருதடவை நாரதர் கிருஷ்ண பரமாத்மாவை காணச்சென்றார். அப்போ பகவான் ஒரு கலசத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார். நாரதர் கேட்டார், பிரபு கலசத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்களே அப்படி அதற்குள் என்ன இருக்கிறது என வினாவினார். அடியார்களின் பெருமையை அவர்களது பாத தூளிகளைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேன் என்றார் பகவன். அடியார்கள் அப்படிப் பெருமைவாய்ந்தவர்களா? என நாரதர் வியந்தார்(நாரதருக்கு தான் ஒரு சிறந்த அடியார் என்பது தெரியாது). அப்போ பகவான், நாரதரே அடியார்களது பெருமையை அறியவேண்டும் என்றால் இன்ன இடத்தில் ஓர் நாய் குட்டி போடும் அந்த நாய்க்குட்டி உனக்குப் பதில் சொல்லும் என்றார். உடனே நாரதர் நாய் இருக்கும் இடம் நோக்கி சென்றார். அந்த நாய், குட்டி போட்டவுடன் குட்டி நாரதரைப் பார்த்தது, நாரதரைப்பார்த்தவுடன் நாய்க்குட்டி இறந்து விட்டது.

உடனே நாரதர் பயத்துடன் பகவானிடம் சென்று கண்ணா நீங்கள் என்னைக் கொலைகாரனாக்கி விட்டீர்களே, என்றார். இல்லை, இல்லை இன்ன இடத்தில் பசு ஒன்று கன்று ஈனும், அந்தப் பசுக்கன்று உனக்குப் பதில் சொல்லும் என்றார் பகவான். உடனே நாரதர் பசு இருக்கும் இடத்துக்குச் சென்றார். பசு கன்று போட்டது, கன்று எழுந்து நடக்கும்போது நாரதரைப் பார்த்தது, பார்த்தவுடனே கன்று இறந்துவிட்டது, நாரதர் மீண்டும் பயத்துடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் சென்றார். அனைத்தும் அறிந்த பகவான் கேட்டார் என்ன நாரதா பதில் கிடைத்ததா? என்று, கோவிந்தா! மதுசூதனா! மாதவா! நான் இரண்டாவது கொலைக்கு ஆளாகிவிட்டேனே என்று வருத்தத்துடன் தெரிவித்தார்.

நாரதா நீ வருந்தாதே, இன்ன அரண்மகைக்குச் செல் அங்கு ஓர் அரசகுமாரன் பிறப்பான், அவன் உனக்குப் பதில் சொல்வான் என்றார். உடனே நாரதர் பகவன் கூறிய அரண்மனைக்குச் சென்றார். அங்கே மகாராணி அழகிய ஆண்குழந்தையைப் பெற்றாள். குழந்தையை பொன்தட்டிலே வைத்து நாரதருக்குக் காண்பித்தார்கள், குழந்தை நாரதரைப் பார்த்து என்னைத் தெரிகிறதா சுவாமி? எனக் கேட்டது, நாரதர் ஆச்சரியத்துடன் குழந்தாய் நீ இப்போதுதான் பிறந்தாய், உடனே பேசுகிறாய் என்னைத் தெரியுமா என்றும் நீ கேட்கின்றாய், உண்மையில் நீ யார் என்று கேட்டார். சுவாமி நான் நாய்க்குட்டியாகப் பிறந்த போது உங்கள் பார்வைபட்டதால் பசுவாகப் பிறந்தேன்

பசுவாகப் பிறந்த போது இறைவன் கருணையால் உங்களை மீண்டும் காணும் வாய்ப்பினைப் பெற்றேன், அதன் பயனாக நான் இப்போது அரசகுமாரனாகப் பிறந்துள்ளேன் என்றான் குழந்தை அரசகுமாரன். அப்போ தான் கிருஷ்ண பரமாத்மாவிடம் கேட்ட கேள்விக்குப் பதிலை விளங்கிக் கொண்டார் நாரதர். அப்போ பகவானைப் புகழ்ந்து பாடி அவ்விடம் விட்டகன்றார். இக் கதையை பெரியார் ஆத்மஜோதி ஐயா பல இடங்களில் கூறுவார்.

அவரைப்போன்ற பெரியார்களையும், மகான் களையும், தூய்மையான துறவிகளையும் காண்பதனாலும், அவர்களோடு உறவாடுவதாலும், அவர்கள் குணங்களைப் பற்றிப் பேசுவதாலும் எமக்கு பெருநன்மைகள் எற்படும். "நீங்கள் பிறருக்குக் கொடுப்பதாக இருந்தால் அது உங்களிடம் இருக்க வேண்டும்" என பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவார். ஆன்மீக ஞானம் உள்ளவர்களால் தான் ஆன்மீகத்தை அளிக்கமுடியும். ஆன்மீக அறிவு வேறு, ஆன்மீக ஞானம் வேறு, ஞானம் என்பது உள்ளத்து உணர்வுகளிலே ஆன்மீக உணர்வுகள் ஊறப்பட்டு, அந்த உணர்வுகளால் ஊறப்பட்ட மனம் புனிதமாகி ஆன்மாவுடன் லயமாகிறது, இப்படிப்பட்ட மனம் உள்ளவர்கள் ஆன்மீகத்திலே உயர்ந்தவர்கள். அப்படிப்பட்ட ஆன்மீகச் சுரங்கத்திலே இருந்து வெளிப்படுகின்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் தத்துவங்களாக, ஞான உணர்வுகளாக வெளிப்படுகின்றது.

பெரியார் ஆத்மஜோதி ஐயாவைப் போன்று பலர் உருவாக வேண்டும். அவரைப் போன்று பிறர் நலத்துக்காக சேவையாற்ற பலர் முன்வரவேண்டும். வேண்டாத ஆபாசப் படங்கள், வாழ்க்கைக்கு உதவாத பப்படங்களைப் பார்த்து நேரத்தை வீணடிப்பதால் என்ன லாபம்? நாம் யாருக்காக வாழ்கிறோம்? நாம் நமக்காகத் தான் வாழ்கிறோம். ஆனால் பிறரோடு சேர்ந்து முன்னேற்றம் அடையும்போது நமது தனிப்பட்ட வளர்ச்சி கூட அதிகமாகும். நாம் நமக்குள்ளே கூட்டுறவை வளர்க்க வேண்டும்.

ஒன்றுபடத் தெரியாவிட்டால் கூட நம்மைப் படைத்தவர் தான் எல்லோரையும் படைத்துள்ளார் என்பதை புரிந்து கொண்டு, எல்லோரையும் நேசித்து பெரியாரின் போதனைகளை நினைவில் கொண்டு மங்களமாய் வாழ்வோமாக!

சோதிடத்தின் உண்மைகளில்............

பிரயாணம் செய்வதற்கு சிறந்த நாட்கள்

திங்க ளொடு சனியிரண்டுங் கிழக்கேயாகா
தெற்கு முகம் போக வென்றால் வியாழமாகா
தங்குகின்ற விடமிருந்து மேற்கே போக
தம்பியடா வெள்ளி ரவி ஆகாதாகா
அங்கெனவே வடக்குமுகம் பிரயாணந்தான்
அப்பனே செவ்வாயும் புதனுமாகா
இங்கிவைகள் சிவனார்கைச் சூலமாகும்
ஏற்க நாள் போக வென்றால் சூசங்களே.

யாத்திரை, ஊர் பிரயாணம் செல்லுபவர்கள் சனி, திங்கள்கிழமைகளில் கிழக்குப்பக்கம் போகக்கூடாது.

வியாழக்கிழமைகளில் தெற்கே போகலாகாது.

வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை தினங் களில் மேற்கே போகலாகாது.

செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை தினங்களில் வடக்கே போகக்கூடாது.

அந்தந்த இடங்கள் அந்தந்தக் கிழமைகளில் வாரசூலையாகும். அப்படி அவசியமாகப் போகவேண்டியிருந்தால் சூரியோதயத்தில் வடக்கிலும், சூரியன் உச்சியில் வரும் மத்தியானத்தில் கிழக்கிலும், சூரியன் அஸ்தமயமான சாயங்கால வேளையில் தெற்கிலும், நடுராத்திரியில் மேற்கு முகமாகவும் போகலாம். இதனால் கெடுதலில்லை. அந்தந்த சமயங்களில் அந்தந்த ஸ்தானத்தில் வார சூலை கிடையாது.

பரஸ்தானம்

பரஸ்தானம் என்பதற்கு வேறு இடத்தில் தங்குதல் என்று பொருள். அதாவது, நாம் ஒரு குறிப்பிட்ட நாளில் வெளியூருக்குப் பிரயாணம் தொடங்க வேண்டும். ஆனால் அந்தக் குறிப்பிட்ட நாள் வாரசூலை, யோகினி, தாராபலம் சந்திரபலம் இல்லாத நாளாக இருக்கின்றது. பிரயாணமோ அவசியம் செய்தாகவேண்டும்.

மற்றொரு விதம்: இந் நாட்களில் விமானங்கள், ரயில்கள், பஸ்கள் இவைகள் மூலம் தூரப் பிரயாணம் செய்யவேண்டு மானால் நாம் நினைத்தபோது டிக்கெட்டுக் கிடைப்பதில்லை. ஆகவே, முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவேண்டும். ஆனால் டிக்கட்டுக் கிடைத்து நாம் பிரயாணம் செய்யவேண்டிய நாளோ வாரசூலை, யோகினி முதலிய தோஷங்கள் நிறை

(60 ம் பக்கம் பார்க்க)

தப்பு வழியையும் மூடபக்தியையும் பற்றிப் பலர் பேசிக்கொண்டு வித்யா கர்வமடைகின்றனர். ஆனால் உண்மையான பக்தன் தனக்கு ஈசுவரன் எப்போதும் உதவிபுரிவதைக் காண்பான். அவன் சிலகாலம் வரையில் தப்பு வழியில் போயிருந்தாலும் பாதகமில்லை. அவனுக்கு என்ன வேண்டுமென்பதை ஈசுவரன் அறிகிறான். கடைசியில் அவ் ஈசுவரன் பக்தனுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்துவைக்கிறான்.

- பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசம்

இராஜ யோகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

பிராணாயாமப் பயிற்சி

இராஜயோகம் பயிற்சி முறையைக் கொண்ட விஞ்ஞானமே. இந்த யோகத்தை சிறிதளவு பயின்றாலும் அது வீண் போவதில்லை. இதை பிரயாசையுடன் பழகி வருபவர்கள் மேலும் மேலும் நன்மை அடைவார்கள். இந்த யோகத்தைக் கற்றவர்களின் மனது உறுதி அடைகிறது. சந்தேகங்கள் தெளிவடைகிறது.

நமது மனம் வெளியே உள்ள தோற்றங்களையும், அசை வுகளையும் தான் நோக்கப் பழக்கப்பட்டுள்ளன. ஆனால் நமது உடலுக்குள்ளே நடைபெறும் மிக நுண்ணிய அசைவுகளை உணர்வதில்லை. இவற்றை உணர்ந்தால் அடக்கி ஆளவும்முடியும்.உடலில் உள்ள நரம்பு மண்டலங்கள் உடலின் சகல உறுப்புகளையும் இயங்கச் செய்கின்றன. உடலுக்கு ஊட்டத்தையும் சக்தியையும் கொடுக்கின்றன. ஆனால் நாம் அதனை உணர்வதில்லை. அவற்றை நாம் பயிலலாம் என யோகிகள் கூறுகிறார்கள். இது முடியுமா? சுவாசப்பைகளின் இயக்கத்தை ஒழுங்கு படுத்துவதன் மூலம் சில மாதங்கள் நன்கு பயின்றால் உடலில் உள்ள நுட்பமான இயக்கங்களை அடக்கி ஆளலாம்.

இனி பயிற்சி முறையைப் பார்ப்போம் முக்கியமாக நோய்வாய்ப் பட்டுள்ள நேரங்களில் பிராணயாமப் பயிற்சி செய்யக்கூடாது. பயிற்சி செய்ய உகந்த நேரம் அதிகாலை, நண்பகல். மாலை ஆகிய மூன்று வேளைகளும் உகந்தது. நண்பகல் செய்ய முடியாவிடில் காலையும் மாலையும் உகந்தது.

பிராணாயாமத்தின் முதல் படி நாடிசுத்தி எனப்படும். இதை ஒரு மாதமோ சில மாதங்களோ செய்து வர வேண்டும். நீங்கள் பயிற்சி செய்வதற்கு தூய்மையான தனியான அறையை தெரிவு செய்ய வேண்டும் அங்கே தினமும் வாசனையான தூபமிட்டு வரவேண்டும். தனி அறை வசதிப்படாதவர்கள் இருக்கை அறையின் மூலை ஒன்றை தெரிவு செய்யலாம்.முடிந்த வரை அந்த இடத்தில் யாரும் போகாதபடி பார்க்க வேண்டும் அப்படி இருந்தால் பயிற்சி விரைவில்கைகூடும். முடிந்தவரை முயற்சி செய்தல் நல்லது.

ஆசனம் முக்கியம் என்பதை முன்பே பார்த்தோம். உங்களுக்கு சுலபமான ஆசனத்தை தேர்ந்தெடுக்கலாம். ஆசனம் அமைக்கும்போது மார்பு தலை கழுத்து நேராக இருக்க வேண்டும் வளையக்கூடாது. முதுகுத்தண்டு வளையாமல் இருந்து பழக வேண்டும். பத்மாசனமோ, பத்திராசனமோ

அல்லது ஆசனம் போட முடியாதவர்கள் சப்பாணமாக அல்லது கதிரையில் அமர்ந்து கொண்டு செய்யலாம். ஆனால் முதுகுத்தண்டு கழுத்து தலை நேராக எப்பொழுதும் இருக்கவேண்டும்.

ஆசனத்தில் அமர்ந்தபடி கிழக்கு அலலது வடக்கு முகமாகப் பார்க்கவேண்டும். வலது கைப்பெருவிரலால் வலது நாசியை அடைத்துக்கொண்டு இடது நாசி வழியாக உங்களால் முடிந்தவரை மெதுவாக மூச்சுக்காற்றை உள்ளே இழுக்கவும். இழுத்தவு டன் வலது கை மோதிரவிரலால் இடது நாசயை அடைத்துக்கொண்டு வலது நாசிப் பெரு விரலை விலக்கி வலது நாசியால் முடிந்தவரை மூச்சுக்காற்றை நன்றாக வெளியே விடவும். உள்ளே உள்ள காற்றை வெளியேற்றிய பின் வலது நாசியால் மெதுவாக முடிந்தவரை காற்றை உள்ளே இழுத்து நிரப்பவும். நிரப்பியவுடன் வலது நாசியை வலது பெருவிரலால் அடைத்துக்கொண்டு மோதிர விரலை விலக்கி இடது நாசியால் உள்ளே உள்ள காற்றை வெளியே மெதுவாக விடவும், காற்று வெளியேறியதும் மீண்டும் அதே வழியாக இடது நாசி வழியாக உள்ளே நிரப்பவும். இடது நாசியை அடைத்துக்கொண்டு வலது நாசியால் மெதுவாக வெளிவிடவும். இப்படி மாற்றி மாற்றி ஆரம்பத்தில் ஓரிரு வாரங்கள் ஐந்து தடவைகள் செய்யலாம். பின்பு ஒவ்வொன்றாக அதிகரித்து பத்து பதினைந்து தடவைகள் செயயலாம். மூச்சுக்காற்றை உள்ளே இழுக்கும் பொழுதும் வெளியே விடும் பொழுதும் "ஓம்" எனும் மந்திரத்தை மனதில் உச்சரிக்கவும். அப்போ உள்ளே செல்லும் காற்றும் வெளிவிடும் காற்றும் புனிதமடைகிறது.

நாடி சுத்தி செய்து வரும்போது உடலில் உள்ள நரம்புகளும் மூலக்கூறுகளும் ஒழுங்குபடுத்தப் படுகிறது. உடலில் புத்துணர்வு ஏற்படுவதை உணர்வீர்கள். விடாமல் தினமும் பயிற்சியைக் கடைப் பிடிப்பவர்களுக்கு நோய் எதிர்ப்புச்சக்தி, நினைவாற்றல், உற்சாகம் ஏற்படும்.


யோகத்தின் உயர்நிலை அடைவதற்கு மனத்தூய்மை மிகவும் உதவுகிறது. யாருடனும் கோபம் கொள்ளக்கூடாது. எப்போதும் பிறரை நேசிக்க வேண்டும். அன்பு செலுத்த வேண்டும் பிறர் குறைகளைப் பற்றி பேசவோ நினைக்க வோகூடாது.

உணவுக் கட்டுப்பாடு முன்னேற்றத்தை துரிதப்படுத்துகிறது. பலர் மாமிச உணவை சத்து மிகுந்ததெனவும் அது உடலுக்கு பலத்தை கொடுக்கிறது எனவும்விஞ்ஞான மருத்துவ அறிக்கைகளைக் காட்டி கூறுவார்கள், இது தவறு. உண்மையில் தாவர உணவுகளில் தான் சிறப்பான சத்துக்களும் நோய்களை எதிர்க்கும் சக்தியும், மனதை தூய்மை நிலைக்கு உயர்த்தும் தன்மையும் இருக்கிறது. மாமிச உணவுடன் தாமச உணர்வான விலங்கு உணர்வும் சேர்த்து உண்ணப்படுகிறது. இதனால் காம உணர்வு அதிகரித்து மனமும் உடலும் பலவீனப்படுகிறது. உணவில் உயர்ந்ததும் நாகரீகமானதும் தாவர உணவு என்பதை விஞ்ஞானிகளும் ஒப்புக்கொண்டுவிட்டனர்.

தாவர உணவு உட்கொள்பவர்கள் யோகம் பயின்று உயர்வு காணும் காலத்தைவிட மாமிசம் உண்பவர்களுக்கு பல மடங்கு காலம் தேவைப்படுகிறது.

குண்டலினி சக்தி

பிரணாயமம் பயில்வதன் முக்கிய நோக்கம் குண்டலினி சக்தியை எழுப்புவதே. குண்டலினி சக்தி எழுப்பப் படும்போது எமது உடல் உறுதியாகவும் பலத்துடன் தயாராகவும் இருக்கவேண்டும் பிரணாயமப் பயிற்சி எமது உடலில் உள்ள நரம்புகளையும் மூலக் கூறுகளையும் ஒழுங்குபடுத்துவதோடு குண்டலினியையும்



எழும்ப வைக்கிறது.

மேலே உள்ள படத்தில் கீழிருந்து நெற்றி வரை ஆறு சக்கரங்கள் உள்ளன. தலை உச்சி யில் இருப்பது ஆயிரம் தாமரை இதழ்களோடு கூடிய சகஸ்ராரம்.

முதல் சக்கரமாகிய மூலாதாரம்

முதுகுத்தண்டின் அடிப்பாகத்தில் முக்கோண வடிவில் அமைந்துள்ளது.இதில் மாபெரும் சக்தி பாம்பு போன்று சுருண்டு படுத்து உறங்கிக் கொண்டிருக்கிறது. இதனை தலை உச்சிவரையும் எழுப்புவதுதான் யோகத்தின் நோக்கம். இந்தக் குண்டலினித்தாயானவள் தான் காளி, பராசக்தி, மகாலட்சுமி அன்னை சரஸ்வதி. எதுவெல்லாம் பிராணசக்தியாக, மின்சாரசக்தியாக, அமுக்கசக்தியாக, காந்தசக்தியாக ஈர்ப்புச்சக்தியாக இந்தப் பிரபஞ்சத்தில் உள்ளதோ இவற்றின் மூலமான ஆதி நாயகியே நம் ஒவ்வொருவரின் மூலாதாரத்தில் பாம்புபோன்று சுருண்டு கிடக்கின்றாள். அவளைத்தட்டி எழுப்ப வேண்டும்.

குண்டலினி மூலாதாரத்திலிருந்து மேலே இருக்கும் சக்கரங்கள் ஒவ்வொன்றாகத் தாண்டும்போது புதுப்புது அனுபவங்களும் ஆற்றல்களும் ஏற்படுகின்றது.தலை உச்சியில் உள்ள சகஸ்ராரத்திற்கு சென்றதும் சிவபக்தர்களுக்கு சிவனின் நடனமும் பிரம்ம நிலையும் அதாவது சமாதிநிலை கை கூடுகிறது. இது நான் எனும் நிலையற்று தானும் பிரம்மமும் வேறல்ல எனும் நிலைக்கு இட்டுச் செல்லுகிறது.

குண்டலினி 6வது சக்கரமாகிய ஆஜ்ன சக்கரத்தை அடையும் போது 8வகை யான அட்டமாசித்திகளும் 32 வகையான சிறு சித்திகளும் ஏற்படுகின்றது இந்த சித்திகளால் செய்யப்படும் காரியங்களை சாதாரண மக்கள் அற்புதம் என்பார்கள். இதனைத் திருநாவுக்கரசர், மணிவாசகர், யேசுநாதர், சாயிபாபாபோன்ற பெரிய மகான்கள் செய்யும் போது அதனால் பாதிப்பில்லை, ஏனேனில் இவர்கள் தூய்மையே உருவானவர்கள், சித்தி கள் மீது பற்று அற்றவர்கள். தமக்காக எதை யும் அவர்கள் செய்வதில்லை.

சாதரண மக்கள் இதைக்கண்டு ஏமாறுவார்கள். பலர் சாமி வேடம் போட்டு ஏமாற்றுவார்கள். சித்திகளைக் கண்டு ஏமாறாமல் இருப்பவர்களும், ஏமாற்றாமல் இருப்பவர்களும் தான் ஆன்மீக முன்னேற்றம் காணமுடியும்.

" வெறும் சித்திகளுக்காக இந்த வித்தையைக் கற்று மக்களை ஏமாற்ற நினைப்பவர்கள் அழிவுற்றுப்போவார்கள்"

5வது சக்கரமாகிய விசுத்த சக்கரத்தை ஆகாச தத்துவமாக கொள்ளபடு கிறது. அதன் நிறமும் சுத்தமான நீலநிற மாகும். இச்சக்கரம் தொண்டையின் அடிப்பாக த்தில் அமைந்துள்ளது. இச் சக்கரம் வரை குண்டலினி எழும்பும்போது இதன் 16 இதழ் தாமரை இதழ்களும் விரிகிறது. இதை 16 யோகநாடிகள் எனக் கூறப்படுகிறது. இச் சக்க ரத்தில் மனதை ஒன்றுபட வைத்து தாரணை செய்வதில் சித்தி பெறுபவர்களுக்கு பிரளய காலத்திலும் அழிவில்லை என்று கூறப்படுகிறது இந்நிலையில் உயர்ந்த சித்தி பெறப்படுகிறது. இச்சக்கரத்தை தியானம் பண்ணிவரும் யோகி களுக்கு நான்கு வேதங்களின் முழு அறிவும் பெறப்படுகிறது.அதோடு கடந்தகாலம், நிகழ் காலம், வருங்காலத்தைப் பற்றிய அறிவு பெறப்பட்டு திரிகால ஞானியாக முடிகிறது.

4வது சக்கரமாகிய அனாகத சக்கரம் இருதய ஸ்தானத்திலிருந்து இருதயத்தை கட்டுப்படுத்துகிறது. இச் சக்கரம் வாயு தத்துவமாகிய வாயுமண்டலம் எனப்படுகிறது. இங்கு குண்ட லினி எழுப்பப்படும் போதும் இதில் மனம் ஒன்றி தியானம் பண்ணும் போதும் சித்திகள் வாய்க்கப் பெறும்.புக்கரி சித்தி, கேசரி சித்தி, காயா சித்தி போன்றன. (காற்றில் பறப்பது, சுவர் ஊடாக செல்வது) மனம் இசசக்கரத்தில் உயர்ந்து இயங் கும் போது சுத்த சத்துவ குணம் மேலிடும்.

3வது சக்கரமாகிய மணிபூரகம். இச்சக்கர இயக்கம் மேல் உடலை இயக்க காரணமாகும். பிரதான மையமாகும் இது நெஞ்சு க்கும், தொப்புளுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இசசக்கரத்தில் மனதைக் குவித்து தாரணை செய்யும்போது யோகி பாதாள சித்தியைப் பெறுகிறார். மறைந்து கிடக்கும் புதையல்களைக் கண்டுபிடிக்க முடிகிறது. சகல வியாதிகளிலிருந்தும் விடுபட முடிகிறது. அக்கினி பயம் போகிறது. எரியும் நெருப்பில் அவரைப் போட்டாலும் எதுவும் ஆகாமல் உயிரோடு மீள முடியும்.

2வது சக்கரமாகிய சுவாதிஸ் டானம் தொப்புள் அமைந்துள்ள பகுதியில் உள்ளது. இந்நிலையம் வயிறு, கிட்னி போன்ற பகுதிகளின் இயக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது. இது நீர் மண்டலம் எனப்படுகிறது. இச்சக்கரத்தில் மனதை தாரணை செய்யும் போது யோகியிடம் நீரின்மேல் உள்ள பயம் விலகுகிறது. நினைத்தபோது உயிரை விடும் ஆற்றல் கிடைக்கிறது. காம, குரோத, லோப, மோக கட்டுக்களில் இருந்து விடுவிக்கப்படுகிறார். எல்லா உணர்வுகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றல்

முதல் சக்கரமாகிய மூலாதாரம் முதுகெலும்பின் அடிப்பாகத்தில் முக்கோண வடிவில் அமைந்துள்ளது. இச்சக்கரத்தில் பாம்பு போன்ற வடிவில் குண்டலினி சக்தியானவள் நம் எல்லோருள்ளும் முடங்கிக்கிடக்கிறாள். அவளை எழுப்பும் முயற்சி தான் யோகம்.

முள்ளந்தண்டின் நடுவே துளைபொருந்திய நாளம் முள்ளந்தண்டின் அடியிலிருந்து உச்சி வரை அமைந்துள்ளது. இதை சுளுமுனை நாடி எனக்கூறப்படுகிறது. மேலே கூறப்பட்ட ஐந்து சக்கரங்களும் சுளுமுனை நாடியில் தான் ஒவ்வொரு மையங்களில் உள்ளன. மூலாதாரம் அடிப்பாகத்திலும், சகஸ்ராரம் தலை உச்சியாகிய சுளுமுனை நாடியின் நுணிப்பாகத்திலும் அமைந்துள்ளன. இதைவிட இடகலை, பிங்கலை எனும் இரண்டு நாடிகள் எமது நாசிப்பகுதியிலிருந்து மூலாதாரம் வரை எட்டு வளைவதைப் போல் பின்னலாக வளைந்து மூலாதாரம் வரை செல்கின்றன. இவ்விரண்டும் உணர்வுகளை உள் எடுப்பதும் எதிர்ச் செயல் புரிவதுமாகிய கர்மேந்திரிய, ஞானேந்திரிய இயக்கங்களுக்கு முக்கிய காரணியாக உள்ளன. இடை பிங்கலை சுளுமுனை ஆகிய மூன்று நாடிகளும் மூலாதாரத்தில் சங்கமிக்கின்றன. இதை திரிவேணி எனக் கூறப்படுகிறது. அதாவது கங்கை, யமுனை, சரஸ்வதி இம் மூன்று புனித நதிகளும் இணையும் இடமே திரிவேணி.

இட கலை நாடி இடது நாசி வழியாகவும் பிங்கலை நாடி வலது நாசி வழியாகவும் செயல்ப்பாட்டை புரிகிறது. இந்த நாடிகள் சாதாரண மக்களுக்கு ஒருவீதமே செயல்படுகின்றன. இவற்றை செயல்பட வைப்பதும், பயன்பெறுவதும் தக்க பயிற்சியின் மூலம் முடியும். எல்லோருக்கும் முக்கோண வடிவாகிய மூலாதாரத்தின் மேல் முனை மூடிக்கிடக்கிறது மூடப்பட்ட முனையிலிருந்து சுருளுமுனை நாடி செல்கிறது. மூலாதாரத்தின் மேல் சுருளுமுனைக்குச் செல்லும் அடைபட்ட துவாரத்தை தக்க பயிற்சியின் மூலம் திறக்க வைக்கும்போது குண்டலினி அத்துவாரத்தின் ஊடாக மேல் எழுகிறது.

பிராணாயாமப் பயிற்சி குண்டலினியை எழவைக்கும் சிறந்த பயிற்சிமுறை யாகும். நாடிசுத்தியை ஒருசில மாதங்கள் ஒழுங்காகப் பழகியவர்கள் பிராணாயமத்தை செய்ய ஆரம்பிக்கலாம். **தொடரும்**


அன்ரனி பிறதர்ஸ்

ANTONY BROTHERS

- ☆ இலங்கை, இந்திய, கனேடிய உணவுப்பொருட்கள்
- ☆ உடன் மீன், இறைச்சி, பழவகைகள், உடன் மரக்கறி வகைகள்
- ☆ தமிழ் வீடியோக்கள்
- ☆ FAX, PHOTO COPY, LOTTERY, TTC TICKETS
- ☆ அன்பளிப்புப் பொருட்கள்
- ☆ சஞ்சிகைகள்
- ☆ முத்திரைகள்
- ☆ சிகரட் இன்னும் பல

TeL: (416) 588-0733
Fax: (416) 516-3903

1472 Queen St. West
(Queen / Lansdowne
Toronto



ANTONY BROTHERS FASHION HOUSE

- ☆ Gift Gallery
- ☆ Kitchen Aids
- ☆ Cyrtaubs
- ☆ Bathroom Sets
- ☆Telephones
- ☆ Decoratives
- ☆ Clocks
- ☆Touch Lamps
- ☆ Video/Audio Cassettes
- ☆Singapore Clothes
- ☆ Fax / Photo Copy Service

1484 Queen St. West ((Queen / Lansdowne) Toronto

Tel: (416) 588-3447 Fax: (416) 588-0310

புனித அந்தோனியார் - மக்கள்புனிதர்

1195 - 1231

(இவ்வாண்டான 1995 எண்ணூறாவது ஆண்டு)

பண்டிதர் ம.செ.அலெக்சாந்தர் (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர்)



புனித அந்தோனியாரை எல்லா மக்களும் எஞ்ஞான்றும் எந்நாட்டிலும் நாடிச்செல்வதற்கான காரணம், அவர் சுகவிஷேஷத்தை (BIBLE) பூரண விசுவாசத்தோடும் மன உறுதியோடும் எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் பூரண விளக்கம் அளித்தமை ஆகும் என, பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் கூறுகிறார்.

எந்த நாட்டிலும் அந்தோனியார் கோயில்களில் ஏராளம் பக்தர்கள் சென்று வழிபடுவதைக் காணலாம். எந்தக்கத்தோலிக்க தேவாலயத்திற்குச்சென்றாலும், அவை சிறிதோ, பெரிதோ அங்கு நிட்சயமாக புனித அந்தோனியாரின் திருவுருவமோ அன்றேல் படமோ இருப்பதைக் காணலாம். யாழ்ப்பாணத்திலே பாஷையூர் அந்தோனியார் கோவில், மானிப்பாய் அந்தோனியார் கோவில் மற்றும் கொச்சிக்கடை அந்தோனியார் கோயில், கொட்டாஞ்சேனை அந்தோனியார் கோயில், போன்ற கோயில்களிலும், கனடா ரொரன்ரோ புளோர் அன் டபறின் வீதியில் உள்ள அந்தோனியார் கோயவிலிலும் காணும் பக்தர்கள், பரவசமாய் முழந்தாழிட்டு கோவில் முகப்பிலே இருந்து பீடம் வரை முழந்தாழில் நடந்து நேர்த்தி செலுத்தி வணங்குவதைக் காணலாம். இவர்கள் எல்லோரும் கத்தோலிக்கர்களா! கத்தோலிக்கர்களுக்கு மட்டுமா அந்தோனியார் அருள் புரிகிறார். உள்ளத்தூய்மையுடன், பூரண நம்பிக்கையோடு புனித அந்தோனியாரை நாடிவரும் எம்மதத்தவருக்கும் அஞ்சேல் என அபயமளித்து அருள்புரிவதை பல்வேறு மதத்தவர்களான அந்தோனியார் பக்தர்களிடமிருந்து அறியலாம்.

அந்தோனியாரின் பிறப்பு:--

போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரிலே 1195 ம் ஆண்டு ஆவணி மாதம் 15 ம் திகதி அந்தோனியார் பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தார். அன்று இயேசுவின் தாயான தேவமாதாவின் விண்ணேற்பு விழாக்கொண்டாடும் நாளாகும். அவர் பிறந்த எட்டாம் நாள் ஞானஸ்நானம் அளிக்கப்பட்ட போது பெற்றோரால் இடப்பட்ட பெயர் பெனான்டோ ஆகும்.

அவரது பெற்றோரின் (வழி நடத்தல்) ஏழைகட்கு இரங்கும்மான்பு, அந்தோனியாரையும் பிறர்மாட்டு இரக்கமுடையவர் ஆக்கியது. இவர் சிறுவயது முதலே இறைபக்தி மிகுந்தவராயும், தேவஅன்னையின் மேல் மிகுந்த பக்தி உடையவராயும் காணப்பட்டார். அந்தோனியார் 15 ம் வயதிலேயே மிகுந்த புத்திசாலியாக விளங்கினார். இவர் பெரிய பதவிகள் பெறுவாரென எல்லோரும் எதிர்பார்க்க, அவற்றையெல்லாம் விட்டு லிஸ்பன் நகருக்கு அண்மையில் உள்ள புனித அகுஸ்தீனார் மடத்திலே சேர்ந்து துறவியானார். இவர் மடவாழ்வை விட்டு வர வேண்டும் என்று உற்றார் உறவினர் அடிக்கடி சென்று வேண்டுதல் விடுத்தனர். அந்தோனியார்

இத்தொல்லைகளைத் தவிர்க்க புனித வாழ்வில் மேம்பட கோயிம்ரா நகரில் உள்ள துறவிகள் மடத்திற்கு மாற்றும்படி கேட்டார். குரு சிரேஷ்டரின் அநுமதி பெற்று. அங்கு எட்டாண்டுகள் குறுக்கீடற்ற சந்நியாச வாழ்விலும் வேதாகமங்களைக் கற்பதிலும் செலவு செய்தார்.

1219ல் புனித பிரான்சிஸ் அசிசியாரால் மொறக்கோவுக்கு சுவிஷேஷ உண்மைகளைப் போதிக்க அனுப்பப்பட்ட பெறாட், பீற்றர், அக்கேசியா அதியுட்டோ, ஒட்டோ என்ற துறவிகள், அந்தோனியார் தங்கியிருந்த மடத்தில் தங்கிச் சென்றனர். அடுத்த ஆண்டே, 1220 தை 16ம் நாளில், அவர்கள் வேதத்திற்காக கொல்லப்பட்டு, அவர்களது உடல்கள் அந்தோனியார் தங்கியிருந்த கோயிம்ரா மடத்திற்கு கொண்டு வந்து வைக்கப்பட்டது. பின்பு வேறிடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்தோனியாரும் வேதத்திற்காக மரிக்க வேண்டும், வேதத்தை எகிப்தில் போதிக்க வேணடும், பிரான்சிஸ்கன் துறவிகள் சபையில் சேரவேண்டும் என ஆசைப்பட்டார்.

இவருக்கு பிரான்சிஸ்கன் துறவியாகச் சேருவதற்கு அநுமதி கிடைத்தது 1220 ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிரான்சிஸ்கன் சபையில் இணைந்த போது தனது பெயரை அந்தோனி என மாற்றிக்கொண்டார். " பொன் வெள்ளி செப்புக்காசு எதையும் உங்கள் மடியில் வைத்துக் கொள்ள வேணடாம்: பயணத்துக்கு பையோ இரண்டு உள்ளாடையோ மிதியடிகளோ கோலோ எதுவும் வேணடாம்" (மத் 10-- 9,10) என்று இயேசு தம்மைப்பின் சென்ற அப்போஸ்தலர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். இதுவே பிரான்சிஸ்கன் சபையின் அடிப்படை ஒழுங்கு.

பிரான்சிஸ்கன் சபையிலே சேர்ந்து மேலும் இரண்டாண்டு செப, தவங்களிலும், சுவிஷேஷப் படிப்பிலும் களித்தார். 1222ம் ஆண்டு பேர்ன் என்ற இடத்தில் நடைபெற இருந்த குருப்பட்ட விழாவுக்கு சுவாமிநாதர் சபையைச் சேர்ந்தவர்களும், பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்தவர்களும், மறை ஆயரும், மொன்சிஞ்நோர் பட்டம் பெற்ற பல குருக்களும் வந்திருந்தனர். அங்கு வந்திருந்த மக்களுக்கு, மறையுரை ஆற்ற, எல்லாச் சந்நியாச சபையினரையும் தலைவர் கேட்டார். அறிவாளிகள் மத்தியில் பேச, ஆயத்தமில்லை என்று பலரும் மறுத்தனர். மொந்தே பவுல் மடத்தில் சட்டி பானை கழுவும் துறவியான அந்தோனியாரை ஒருவருக்கும் தெரியாது. அவரை மடத்தலைவர் பேசும்படி கேட்டபோது அதற்குப் பணிந்து, அந்தோனியார் ஆற்றிய உரை அனைவரையும், மெய்மறக்கச் செய்தது. மறை ஆயர் முதல் அனைவரும் இத்தனை பொருளமைந்த நாவன்மை மிக்க மறையுரையை முன்பு ஒருபொதும் கேட்டதில்லை. புனித பிரான்சிஸ் இதைக் கேள்விப்பட்டவுடன் தனது சபையின் மறை வல்லுநர் என்ற கூறி மற்றைய துறதுறவிகளுக்குச் சுவிஷேஷம் படிப்பிக்கும் படியும் கேட்கப்பட்டார்.

புனித அந்தோனியார் எழுதிய செபங்களில் ஒன்று எல்லா இதயங்களையும் தொடக்கூடியது. இதன் பயனாகவோ அறியோம், அவரது நாக்கு, அவர் மறைந்த பின்பும், இன்றுங் கூட இத்தாலியில் உள்ள பசிலிக்கா என்ற அவர்தம் ஆலயத்தீல் புனித பொருளாக எல்லாராலும் சென்று பார்க்கக் கூடியதாக இருக்கிறது.

செபம் :-- " உலகின் ஒளியே! நித்திய பிதாவே! சர்வ ஞானமும் புத்தியும் அளிப்பவரே, இரக்கத்துடனும் தாராள குணததுடனும் அருட் கொடைகளை வழங்குபவரே, எல்லாவற்றையும் நடக்குமுன்னே அறிகின்றவரே, ஒளியையும் இருளையும் படைத்தவரே உமது கரம் நீட்டி என் நாவைத் தொட்டு- இறை வார்த்தைகளை அறிவிக்க, எனது நாக்கு கூரிய வாளைப்போல் இருக்கச் செய்யும் ஆண்டவரே, உமது தூய ஆவியின் உதவியால் எனது புத்திக்கு நீர் தந்து வேதசத்தியங்களை நான் அறியக் கிருபை கூரும். என் எண்ணமும் நீரே, கருத்தும் நீரே, என் இதயத்தில் இருப்பவரும் நீரே, என நான் என்றும் தியானிக்கச் செய்யும். பக்தி - பரிசுத்தம் - இரக்கம் - சாந்தம் ஆகிய இவற்றைத்தாரும். இன்று அரம்ப முதல் இறுதிவரை எனது நினைவு உணர்வு ஆகியவற்றைப் பாதுகாத்துத் திடப்படுத்தும். பரிசுத்தர் நீரே என்றும் எனக்குக் கற்பித்து எஞ்ஞான்றும் என்னை வழி நடத்தும். உமது பரிசுத்த வழிநடத்தலும், அளவற்ற இரக்கமும், என்றும் எனக்கு உதவுவதாக ஆமென்.

அந்தோனியார் இறையியல் படிப்பித்த மடத்திலே, இருந்த துறவி, அந்தோனியாரால் நன்கு பயன்படுத்தப்பட்ட புத்தகத்தை எடுத்துக் கொண்டு, மடத்தை விட்டகன்றார். அந்தோனியார் செபத்தின் வழியாக இறைவனை அணுகினார். திருடிய இளந்துறவி மீண்டும் வந்து, புத்தகத்தைக் கொடுத்தது மட்டுமன்றி தன்னையும் சந்நியாச

சபையிலே சேர்க்கும்படி வேண்டினார். அவர் மேல் இரக்கப்பட்டு, அவரை மீண்டும் சேர்த்தார். தங்களது பொருட்களை இழந்த மக்கள் புனித அந்தோனியாரை நாடும் வழக்கம் இதிலிருந்து ஆரம்பமாகியது.

அந்தோனியாரிலே கோபம் கொண்ட பகைவர் சிலர், அவரை உணவு உண்ண அழைத்தனர். நஞ்சிட்ட உணவை அளித்தனர். இறைவனால் உண்மை அறிந்த அந்தோனியார், அவர்களைக் கடிந்தார். பகைவர்கள் "கொல்லும் நஞ்சைக் குடித்தாலும் (கிறிஸ்துவின் சீடர்களுக்கு) தீங்கிழைக்காது" என்று மாற்கு சுவிஷேஷத்தில் 16ம் அதி : 18ம் வசனத்தில் இருக்கிறது என்றனர். உடனே உணவிலே சிலுவை அடையாளம் போட்டு உண்டார். அது அவரை ஒன்றும் செய்யவில்லை, அதைப் பார்த்த பலர் மனம் திரும்பினர்.

புனித அந்தோனியார் பிழை கண்ட விடத்து தன்னிலும், பெரிய திருச்சபை அதிகாரிகளையும் குற்றங்களை நேரிடையாகக் கூறித் திருத்தியுள்ளார். பூர்ஜ் நகரிலே குருக்களின் கூட்டத்தில் அந்தோனியார் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில். தலைமை தாங்கிய மறை ஆயர் பக்கமாய்த்திரும்பி, அவரது குற்றங்களைக் கூறித்திருந்தி வாழக் கூறினார். ஆயர் தனது குறைகளை உணர்ந்து, அழுது அந்தோனியாரின் மறையுரை முடியத் தனியே சந்தித்து, தனது பாவங்களை எல்லாம் கூறி, இறைவனிடம் மன்னிக்க வேண்டுமாறு கூறினார். அந்தோனியாரின் புத்திமதி அவரை நல் வாழ்க்கை வாழ வழிவகுத்தது.

பூர்ஜ் நகரிலே ஒருவன் அந்தோனியாருடைய போதனைகளை நிந்தித்தான். அந்தோனியார் கூறும் தேவநற்கருணையிலே இறைவன் இருக்கிறான் என்பதை நிரூபித்தால் - அந்தோனியாரை நம்புவதாகக் கூறினான். தனது குதிரைக்கு மூன்று நாட்கள் தீனி போடாது, ஒரு குறிப்பிட்ட இடத்திலே பசும் புல்லும் வைத்து, தேவநற்கருணையும் வைக்க வேண்டும் என்றான். தனது குதிரை புல்லை நாடாது தேவநற்கருணையை வணங்கினால், தான் இயேசு, இறைவன் தேவநற்கருணையில் இருப்பதை நம்புவேன் எனக் கூறினான். அந்தோனியார் தோற்பார் என எண்ணிப் பல மக்களை இதைப் பார்க்க அழைத்திருந்தான். குதிரையை அவன் அங்கு அவிழ்த்து விட, அது பசும்புல்லை நாடாது, அந்தோனியார் வைத்திருந்த திவ்ய நற்கருணையின் முன் முழந்தாளிட்டு அறிவுவள்ள பிராணிபோல் ஆராதித்தது. இதைக் கண்ட பலர் அந்தோனியாரின் போதனைகளைக் கடைப்பிடித்தனர்.

அந்தோனியாரும் லில்லிப்பூக்களும் :-

லில்லிப்பூக்கள் கிறித்தவத்தில் வாழ்வின் ஒன்றிணைப்பைக் காட்டும். இது அந்தோனியாரின் திருவிழா நடக்கும் ஆனி மாதத்தில் பூக்கும். 1680ல் அந்தோனியாரின் திருநாள் நடக்கும் காலத்தில் அந்தோனியாரின் திருச்சொரூபத்தின் கையிலே ஆஸ்திரியா நாட்டு மொண்டிஸ்கா, அகஸ்கோ கோயிலில் வைக்கப்பட்டது, வைக்கப்பட்டதிலிருந்து ஒரு வருட காலமாக, அந்தப்பூவின் நறுமணமும், பூத்த நிலையும் மாறுபடாதிருந்தது. 1729 ஆடி மாதத்தில் நடந்த சம்பவம், அந்தோனியார் கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதைக் காட்டும். டொன்அந்தோனியா டாண்டா என்ற வியாபாரி தனது நாடான ஸ்பெயினை விட்டு, பீறு Peru என்ற இடத்திற்குச் சென்றான், அவனது மனைவி பிரான்சஸ் என்பாள் பலகடிதங்கள் எழுதியும் பதில் கிடைக்காது, இருந்த காசும் தீர்ந்த நிலையில், அந்தோனியாரை மன்றாடி, அவரது திருச்சொரூபத்தின் கைக்குள் கடிதம் எழுதி (S.A.G) St-Anthony Guide என வைத்தாள். மறு நாளே அச்சொரூபத்தின் கையில், அவள் கணவன் எழுதிய பதிலும் காசும் இருந்தது. அது சற்று முன்பு லீமா நகரில் உள்ள பீறு என்ற இடத்திலிருந்து, 23 யூலை 1729 என்று எழுதப்பட்டு, ஒரு பிரான்சிஸ்கன் துறவி மூலம், அவள் கடிதம் கிடைத்ததாகவும், அதற்குப் பதில் எழுதி அவரிடமே காசு 300 பெசோஸ் உடன் கொடுத்து விடுவதாகவும் எழுதியிருந்தது. இன்றும் அக்கடிதம் ஒவிடோவில் உள்ள கோவிலில் பேணிக்காக்கப் படுகிறது. இன்றும் சிலர் தமது கடிதத்தில் S.A.G போட்டு அனுப்பும் வழக்கம் உண்டு.

புனித அந்தோனியாரால் பெருமை பெற்ற பதுவை நகருக்கு 1228ம் ஆண்டே சென்றார். அங்கு மறையுரை நிகழ்த்தினார். 1230ம் ஆண்டிலே தலைவர் பதவியினின்று தம்மை விடுவிக்குமாறு கேட்டார், அதன் பின் அவர் விடுவிக்கப்பட்டார். அதிலிருந்து தேவவார்த்தையை எங்கும் பிரசங் கித்தார். பதுவை நகரிலே அவரது மறையுரைக ளைக் கேட்க ஏராளமானோர் வருவர். அவரைத்

தொட்டும், அவரது ஆடையை வெட்டிச்செல்லவும் பலர் விரும்பினர் அவர் மறையுரை கேட்டு மனம் மாறிய பல கொள்ளையர்கள் உண்டு. டீசோ பிரபுவின் வாசஸ்தலத்தில் இருந்த போது, குழந்தை யேசுவோடு அந்தோனியார் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்தனர். அவர் தங்கியிருந்த அறையில் வீசிய ஒளி டீசோ பிரபுவையும் அங்கு பார்க்க வைத்தது. புனித அந்தோனியார் தான் இறக்கும் வரை, அவர் கண்ட காட்சியை எவருக்கும் கூறக்கூடாது எனக் கேட்டார். அதனாலேயே இன்றும் குழந்தை இயேசுவைத் தாங்கிய அந்தோனியாரின் சொரூபங்களை நாம் காண்கிறோம். 1231ம் ஆண்டு ஆனிமாதம் 13ம் நாளான வெள்ளிக் கிழமையன்று புனித அந்தோனியார் மயக்கமடைந்தார். கிளாரம்மா சபை மடத்தில் பராமரித்தும் தேறவில்லை. "ஓ மகிமை பொருந்திய ஆண்டவனே" என்ற கீதம் இசைக்கப், புனித அந்தோனியார் எதனையோ உற்றுப் பார்க்கும் நிலையில் இருந்தார். "சகோதரரே எதைப்பார்க்கிறீர் என்று ரூஜெரோ துறவி வினவினார். "எனது ஆண்டவனைப் பார்க்கிறேன்" என மெல்லக் கூறினார். அவரது ஆன்மா இறைவனை சேரச் சென்றுவிட்டது.

அநதோனியார் சாகுந்தறுவாயில் வேறு மடாதிபதியான தோமஸ் மடாதிபதிக்குத் தோன்றி அவரது தொண்டை நோயைத் தொட்டுச் சுகப்படுத்தி, "உங்களிடம் விடை பெற்றுச்செல்ல வந்திருக்கிறேன், இந்தக் கழுதையை விட்டுவிட்டு தந்தையின் நாட்டுக்குச் செல்லப் போகிறேன் என்றார். அவர் மறைந்து சென்ற பின்பே, மடாதிபதி புனித ஆந்தோனியார் இறந்த செய்தி கேள்விப்பட்டார்.

புனித அந்தோனியாரை எங்கு அடக்கம் செய்வது என்ற பிரச்சினை ஏற்பட்டது. இதை அறிந்த பலர் அவர் உடலைத் தொட, ஆடையைத் தொட முண்டி அடித்து வந்தனர். புதுமைகளும் நடந்தன. மரண ஊர்வலம் நடை பெற்ற தினத்திலே குருடர்கள் பார்வை பெற்றனர். நோயாளிகள் குணமடைந்தனர். பதுவை நகரின் ஒளி பல மைல்கள் தெரிந்தது. பிரான்ஸ், ஜேர்மனி போன்ற பல்வேறு இடங்களிலுமிருந்து திரு யாத்திரையாக சனங்கள் வந்து கொண்டிருந்தனர். அடுத்த ஆண்டே அவருக்குத் திருச்சபை (1232 மே) மாதத்தில் அவருக்குப் புனிதர் பட்டம் அளித்தது.

1263ம் ஆண்டு (32 ஆண்டுகளின் பின்) மறை வல்லுநரான புனித பௌவந்தூர் பதுவைக்கு வந்தார். புதுக்கோயிலின் பீடத்துக்கு அவரது உடல் எடுத்து வைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. உடல் இருந்த பேழையைத்திறக்க, அங்கே புனித அந்தோனியாரது நாக்கு, இன்னமும் சிவப்பாக இருப்பதைக் கண்டனர். இன்றும் அந்த நாக்கு, அவரது பசிலிக்க தேவாலயத்தில் உள்ளது.

புனித அந்தோனியாரை 1231 ஆனி மாதம் 17ம் நாளான செவ்வாய்க் கிழமை அடக்கம் செய்யப்பட்டது. இதிலிருந்து செவ்வாய்க் கிழமைப் பக்தி முயற்சி இடம் பெறலாகியது. சிலர் அவர் இறந்த நாளான 13ம் திகதியைக் கொண்டு, பதின்மூன்று செவ்வாய்க்கிழமைகள் தொடர்ச்சியாகப் பக்தி முயற்சிகள் அனுஷ்டிக்கின்றனர்.

அந்தோனியாரின் போதனைகள் இறைவனை அறிய, உணர, வழிகாட்டி எமது வாழ்வையே சமய நெறியாக்கி, வீடு பேறடையச்செய்யும், எஞ்ஞான்றும் ஒளிவீசும் முத்துக்கள் ஆகும். அவற்றிலே எம்மதமும் சம்மதமாக்கும், பொது முத்துக்கள் சிலவற்றைப் பொருத்தி நோக்குதல் எம் மதத்தவரும் நாடும் சம்மதத்தவர் நெறியாகும் என்பது என் நோக்கு.

அந்தோனியார் அணிந்த ஆபரணங்களில் அதி சிறந்தது தாழ்ச்சியாகும். பிரபுவின் மகனான அவர், பொருளை, பதவியைத் துறந்து துறவியானார். பலவருடங்கள் கற்றறிந்த துறவியாக இருந்தும் மடத்திலே சட்டி பானைகள் கழுவுகின்ற தொழிலைச் செய்தார். தாழ்ச்சியே வீடு பேறடைய வழி வகுக்கும் திறவுகோல் என்பது புனித அந்தோனியாரின் வாக்கும் போக்கும் ஆகும். இதனையே ஆணவம் அறுத்தல் என்கின்றனர். இயேசுவின் வாழ்விலும், அவர் தமது சீடர்களின் பாதங்களைக் கழுவி, அதைத் துண்டால் துடைத்து முத்தமிட்டார். பணிசெய்வது எம் கடன். புனித அந்தோனியார் தாழ்ச்சி, கற்பு, தரித்திரம் ஆகிய அணிகலன்களை அணிந்து, எல்லோருக்கும் வழிகாட்டியானார்.

புனித அந்தோனியாரின் போதனைகள் சிலவற்றை ஆராய்ந்தால், அவர் மனிதசீவியத்தின் போக்கு எப்படியாக வேண்டும் என்ற கருத்தைத்தருவன வாகும். " எல்லாம் அவன் செயல்" என்ற கருத்து இறைவனே எல்லாவற்றினது ஊற்று என்பதைக் காட்டும் "இருதயத்தின் நாயகனாக இயேசுவை ஆக்கு. சூரியனிலிருந்து உலகிற்கு கிரகணங்கள் வருவது போல், இறைவனிடமிருந்தே மனிதருக்கு எல்லா அருட் கொடைகளும் கிடைக்கின்றன". கண்ணபிரான் சகாதேவனிடம், என்னை உன்னால் கட்ட முடியுமா என்ற போது, பார்க்குமிடமெல்லாம் கண்ணனாகும் காட்சியைக்

கண்டான், கண்ணை மூடி, அன்பினால் இதயத்துள் தியானித்ததும் அன்பினால் கட்டுண்டான் கண்ணன். "உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது".

புனித அந்தோனியாரின் போதனை, " உனக்கு எல்லாம் வேண்டுமா! என்று கேட்டு, அப்படியாயின் நீ உன்னை முழுவதும் இறைவனிடம் அர்ப்பணித்து விடு. அப்போது இறைவன் தன்னையே முழுமையாக உனக்களிப்பார். நான் என்பது உன்னில் மறைய, இறைவன் முழுமையாக உன்னிலும், நீ அவரிலும் இருப்பாய் " என்று கூறுகிறார்.

பகவத்கீதை கூறுவது என்ன? உடல் Body அறிவைப் பெறப் புலன்கள் Senses வேண்டும். புலக்காட்சி (Perception) என்பது பொருட்கள் (Objects) மூலம் கிடைக்கும். புலக்காட்சி மனத்திற்கு (Mind) இன்பமும் பல்வேறுபட்ட உணர்ச்சியும் (Feelings) தரும். உணர்ச்சி தரும் நிலையிலே, நீயே தெய்வம், அதுவே தெய்வம், இதுவே உயர்வு என்ற மெய்ப்பாட்டு (Emotions) நிலைக்குச் சென்று விடுவோம். மெய்ப்பாட்டு நிலையிலிருந்து நுண்புத்தி (Intellect) ஆராய்ந்து முடிவுகான விழைகிறது. விஞ்ஞானம் கூறும் பகுத்தாய்தலும் தொகுத்தாய்தலும் (Analy-sis - Synthesis) நடைபெறும். நுண்புத்தி எதற்கும் காரணம் காண விழையும். அதற்கு அது பகுத்துப் பகுத்துப் பார்க்கும். தொகுத்து முடிவுகட்ட விழையும். சொலமன் இராசா,இறைவனுக்கு ஆதியும் அந்தமும் காண விழைந்தது போல முடிவு காண முடியாது. தவிக்கும் நிலையிலே இறைவனிடம் எல்லாம் நீயே என எம்மை அர்ப்பணித்து (Sur-render) விடுதல். இந்த அர்ப்பணமே எல்லாம் அறிந்தவனே எல்லாம் வல்லவனே எங்கும் இருப்பவனே எனக்கூறி இறைவனிடம் சரணடைதல் ஆகும். எல்லாம் இயேசுவே என்போமா! எல்லாம் அவன் செயல் என்போமா! எல்லாம் நாம் பெற எம்மை முழுதாக இறைவனிடம் ஒப்படைத்து சரணடைந்து இறைவாழ்வு வாழ்வோமாக!

நானே ஒளி! நானே வழி!நானே சீவியம்" என்பதை அறிந்து உணர்ந்து புனித அந்தோனியார் கூறி நடந்து வழிகாட்டிய வழியில் இறைவாழ்வு வாழ்வோமாக.

அந்தோனி முனியோரே ஆறுதல் அளிப்பவரே
வந்த இடர்களெல்லாம் நீக்கி அருள்பவரே
இந்த உலகத்தின் இறைதந்த மறையோனே
சந்ததமும்போற்றியுமை வாழ்த்துதுமே சம்மதத்தோர்.

TECHNOS AUTOMOTIVE INC.

AUTO REPAIR CENTRE

சகல விதமான திருத்த வேலைகளுக்கும் எம்மை அழையுங்கள்
குறைந்த செலவில் நிறைந்த பயனை அடையுங்கள்

1253 KENNEDY ROAD [Ellesmere & Lawrence]
SCARBOROUGH, ONTARIO

TEL: [416] 285-8066

OIL & FILTER CHANGE ONLY $18.95

வாகன சேட் டிபிக் கேசன் , இயந் திர, மின் சார திருத் த வேலைகள் , கொம் பியூட் டர் வசதியுடன் திருத் த வேலைகள் , ரயர் திருத் த வேலைகள் , வீ ல் பலன் சிங் , இலவச பரிசோதனையுடன் முறையான ஆலோசனைகள் .

* Vehicle Certification.
* Mechanical & Electrical Repairs.
* Computer diagnosis on fuel injection & electronic ignition system.
* Specializing in VOLVO & HYUNDAI.
* Tyre Repairs & Wheel Balancing.
* Free Inspection & proper advise.

Competitive Automotive Services & Repairs by experienced & fully Licenced Class 'A' Mechanics

SOUTHPORT

CUSTOM PICTURE FRAMING

கனடாவில் முதன் முதலில் தமிழரால் ஆரம் பிக் கப் பட் ட பிரமாண் டமான ஸ் தாபனம்.
உங் கள் திருமணம் மற் றும் கொண் டாட் டங் கள் , குழந் தைகளின் படங் கள் , அனைத் தும் அழகிற் கு மெருகூட் டிச் செய் து தரப் படும் .
சுவாமிப் படங் கள் , டிப் பிளோமா சான் றிதழ் கள் , வாழ் த் து மடல் கள் , பத் திக் என் பவற் றை அழகுறச் செய் து கொள் ளலாம் .

சவுத்போர்ட்
பிக்சர் பிறேமிங்

தொடர்புகளுக்கு:
பரமேஸ்வரன் (பரா)

Tel/Fax: (416)267-5694

3260 EGLINTON AVE. EAST
[Eglinton & Markham]
SCARBOROUGH, ONTARIO
M1J 2H6

வளரும் சத் சங்கம்
(சிறுவர் பகுதி)

அன்பான பிள்ளைகளே! நாம் எல்லோரும் கடவுளின் பிள்ளைகள். நாம் நல்லவர்களாகவும், பலசாலிகளாகவும், உயர்ந்தவர்களாகவும், வாழ இறைவன் நல்ல வழிகளை மதத்தின் மூலமாக எமக்குத் தந்துள்ளார்.

நாம் இந்துக்கள்! எமது மதம் இந்து மதம்!

நாம் ஒவ்வொருவரும் நல்லவர்களாகவும் உயர்ந்த அறிவு உள்ளவர்களாவும், பெற்றோர் சொல்லை மதிப்பவர்களாவும், பிறரை நேசிப்பவர்களாகவும், உண்மை பேசுபவர்களாகவும், வாழ வேண்டும். நல்ல பிள்ளைகளாக வளர்வதற்கும், உலகம் போற்ற வாழ்வதற்கும், மதம் வழிகாட்டுகிறது. கடவுள் ஒருவரே! ஆனால் அவர் பல உருவங்களில் பக்தர்களுக்கு காட்சி கொடுக்கிறார். எமது மதமாகிய இந்து மதம் நல்ல கருத்துக்களை உடையது, அதைப் படித்து அதன் வழியிலே நாம் வாழவேண்டும்.

இம்முறை உதயமாகும் வளரும் சத் சங்கம், தொடர்ந்தும் உங்களுக்கு விருப்பமான குட்டிக் கதைகளையும், சமய உண்மைகளையும், இக்கால முறைக்கு ஏற்ற முறையில் உங்களுக்கு வியங்கக்கூடிய முறையில் தரவுள்ளது. உங்களுக்கு மதத்தில் சந்தேகமான விடயங்கள் இருந்தால் மதம் வெளியீட்டுக்கு எழுதி அனுப்புங்கள், அதற்குப் பதில் அனுப்பப்படும்.

கனடாவில் வாழும் உங்களுக்கு ஆங்கில அறிவு தானாகவே பாடசாலையில் வளரும். .ஆனால் தமிழ் அறிவு வீட்டில் தான் வளர வேண்டும். ஆங்கிலம் வெளி உலக வாழ்வுக்கு கட்டாயம் தேவை, ஆனால் நல்ல குடும்பவாழ்வுக்கு , அவரவர் தாய் மொழிதான் முக்கியம்.

எமது தாய் மொழி தமிழ். நாம் தமிழர்கள். நாம் தமிழை விட்டு ஆங்கிலம் பேசுவதால் வெள்ளையராக முடியுமா? அல்லது ஆங்கிலேயராக முடியுமா? ஆங்கிலேயர், எங்களையும் ஆங்கிலேயர் என்று சொல்லுவார்களா? நாகரீகமென்றால் எது? உண்மையில் சிறந்த பண்பான குடும்ப வாழ்க்கை தான் நாகரீகம்! அதாவது தாயும் தந்தையும் பிள்ளைகளை அன்பாக நேசிப்பது, பிள்ளைகள் தாய் தந்தையரை மதிப்பது, ஒரு மனைவியோடும் ஒரு கணவனோடும் நல்ல குடும்பமாக வாழுவது இது தான் நாகரீகம். இந்த நாட்டில் பணம் சம்பாதிக்க ஆங்கிலம் வேண்டும். ஆனால் நல்ல குடும்பம் அமைவதற்கு எமது பண்பாடு,எமது மொழி, எமது மதம், இவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும். நீங்கள் எல்லோரும் நல்லவாகளாளவும் சிறந்த அறிவாளிகளாகவும், செல்வந்தர்களாகவும், புகழோடும் வாழவேண்டும் என விரும்பும்,

உங்கள் அடியார்

வளரும் சத் சங்கம் ஆகிய சிறுவர் பகுதியை உங்களுக்குத் தொகுத்து வழங்குபவர் ***திரு. வேலுப்பிள்ளை கணேஸ்வரன்*** B.A, Dip.in.Ed

தலைவர்: **ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா ஆச்சிரமம், கனடா**



சிறுவர்களுக்கான மகாபாரதம்

ஆதிபர்வம்

1. ஆரம்பம்.

மனிதர்களுள் உயர்ந்த நர- நாராயண ரிஷிகளுக்கு வணக்கம்! கலைமகளுக்கும் வேதவியாசருக்கும் வணக்கம்! அவர்கள் நமக்கு வெற்றியை நல்கட்டும்! ஒரு நாள் லோம ஹர்ஷணரின் மகனான உக்கிரசிரவஸ் என்ற முனிவர் நைமிசாரண்யம் என்ற காட்டிற்கு வந்தார். அங்குத் தவமியற்றி வந்த முனிவர்கள் உக்கிரசிரவசை அன்புடன் வரவேற்று உபசரித்தனர்.

நீராடி உணவருந்தி சற்று இளைப்பாறிய பின்னர் உக்கிரசிரவஸ் ஒரு மரத்தடியில் அமர்ந்தார்.

அவரது வாய்மொழிகளைக் கேட்க ஆவலுற்ற பிற முனிவர்கள் அவரைச் சுற்றி அமர்ந்து அவரைப் பற்றிய விவரங்களைக் கேட்கலாயினர். தம்மைப் பற்றிய விவரங்களைக் கூறிய பின்னர் உக்கிரசிரவஸ், "முனிவர்களே, ஜனமேஜய மன்னனின்சர்ப்ப யாகத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கு வைசம்பாயன முனிவரும் வந்திருந்தார்.

வேதவியாசர் தொகுத்த மகாபாரதத்தை அவரது திருவாயிலிருந்து கேட்கக் கூடிய பெரும் பேறு எனக்கு கிடைத்தது. அதன் பின்னர் பல புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்றேன். கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் போர் நிகழ்ந்த சியமந்த பஞ்சக ஏரிக்கரையையும் காணும் பேறு பெற்றேன். தற்போது உங்களுடன் சில நாட்கள் தங்க எண்ணியுள்ளேன்" என்றார் இதைக் கேட்ட நைமிசாரண்ய முனிவர்கள் மிகவும் மகிழ்ந்தனர். அவர்கள் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க உக்கிரசிரவஸ் முனிவர் மகாபாரதக் கதையைக் கூறலானார்.

2 விநாயகரின் எழுத்துப் பணி

முனிவர்களுள் சிறந்தவர் வேதவியாசர். பராசர முனிவரின் மகனான அவர் ஒருநாள் தம் மனத்தில் மகாபாரத காவியத்தைச் சிந்தித்து அதனை ஒரு நூலாக வடிக்க எண்ணினார். அதற்காக படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவரை மனத்தில் தியானித்து வணங்கினார். பிரம்மதேவர் வியாசரின் முன்னால் தோன்றினார். பிரம்மதேவரைக் கண்ட வியாசர் கூப்பிய கரங்களுடன், "ஓபிரம்மதேவரே, பெரிய காவியமான மகாபாரதத்தை நான் என்மனத்தில் வரித்து விட்டேன். ஈடுஇணையற்ற காவியமான இதில் இல்லாத எந்த விஞ்ஞானமோ மெஞ்ஞானமோ இருக்க முடியாது. ஆனால் இதைக் காவியமாக வடிப்பதில் தடையொன்று உள்ளது. அது என்னவென்றால், நான் சொல்லும் போது அதனை எழுதிக் கொள்ள ஒருவரும் இல்லை. தாங்கள் தம் தயை கூர்ந்து இதற்கு ஏதாவது வழிகாட்ட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு பிரம்மதேவர்,"வியாசரே" இந்துப் பணிக்குத் தகுந்தவர் விநாயகப் பெருமான் ஒருவரே, அவரை வழிபடுங்கள்"என்று கூறி மறைந்தார். வியாசரும் பிரம்மதேவர் கூறியபடியே விநாயகப் பெருமானிடம் மனம் கனிந்து பிரார்த்தித்தார். வியாசரின் பிரார்த்தனையால் மகிழ்ந்த விநாயகர் அவர் முன் தோன்றினார். பணிவுடன் அவரை வணங்கிய வியாசமுனிவர் தமது உள்ளக்கிடக்கையைக் கூறினார். வியாசரின் வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட விநாயகர்,"முனிவரே ஆனால் அதற்கு நிபந்தனை ஒன்று உள்ளது. எந்தத் தடங்கலுமின்றி நீர் கூறிக் கொண்டு வந்தால் மட்டுமே நான் இந்தப் பணியைச் செய்ய முடியும்"என்று கூறினார். விநாயகரின் நிபந்தனையைக் கேட்ட வியாசர், "பெருமானே, நீர் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் எனக்கும் நிபந்னை ஒன்று உள்ளது. நான் கூறுவதின் பொருள் புரிந்த பின்னரே நீங்கள் எழுத வேண்டும். என்று கூறி பதில் நிபந்தனை ஒன்றைப் போட்டார்.

இப்படி இருவரின் நிபந்தனைகளின் பேரில் மகாபாரத எழுத்துப் பணி துவங்கியது. சற்றுக் கடினமான பாடல்களை வியாசர் கூறுவார். அதனைச் சிந்தித்து, பொருள் புரிந்து விநாயகர் எழுதுமுன் வியாசர் அடுத்த பாடல்களை வடித்து விடுவார். இவ்வாறு நிறைவுற்ற மகாபாரதத்தை வியாசர் முதலில் தமது மகனான சுக முனிவருக்குச் சொன்னார். சுகர், கந்தர்வர் போன்றவர்களுக்குக் கூறினார். வியாசரின் முக்கிய சீடரான வைசம்பாயனர்

அதனை ஜனமேஜயனின் சர்ப்பயாகத்தில் வந்திருந்தவர்களுக்குக் கூறினார். அங்கு கேள்வியுற்ற நான் உங்களுக்கு இப்போது கூறுகிறேன், என்று கூறியபடியே காவியத்தைத் தொடங்கினார் உக்கிரசிரவஸ். நைமிசாரண்ய முனிவர்களும் மிகவும் கவனத்துடன் அவரது வார்த்தைகளைக் கேட்கலாயினர்.

3. சந்தனு கங்காதேவி திருமணம்

அஸ்தினாபுர மன்னான சந்தனுவின் வரலாற்றுடன் மகாபாரத காவியம் தொடங்குகிறது. சந்தனு இணையற்ற வீரமும் விவேகமும் நிறைந்த மன்னன். தனது நேர்மையாலும் நல்லாட்சியாலும் மக்களின் மதிப்பில் மிகவும் உயர்ந்து விளங்கினான் அவன். ஒரு நாள் காட்டிற்கு வேட்டையாடச் சென்ற அவன் கங்கை நதிக்கரை வழியாக செல்ல வேண்டியிருந்தது. அங்கே அழகின் திருவுருவமான பெண்ணொருத்தியை அவன் கண்டான் அவளது அழகில் மயங்கி, அவளை எப்படியாவது திருமணம் செய்து கொள்ள விரும்பினான் சந்தனு. தனது எண்ணத்தை அவளிடம் வெளியிட்டான் அந்தப் பெண் கங்காதேவி என்பதை சந்தனு அப்போது அறிந்து இருக்கவில்லை. சந்தனுவின் ஆசைமொழிகளைக் கேட்ட கங்கை,"மன்னவா! தங்கள் விருப்பத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்கு நிபந்தனை ஒன்று உள்ளது. நல்லதோ! தீயதோ! எது செய்தாலும் அதில் தாங்கள் குறுக்கிடக் கூடாது.அதைப் பற்றிய எந்த விதமான புதிர்கேள்விகளையும் எழுப்பக் கூடாது. அது மட்டுமின்றி என்னை ஒருபோதும் இழிவாகப் பேசவோ நடத்தவோ கூடாது.

இந்த நிபந்தனைகளுக்குத் தாங்கள் கட்டுப்பட்டு இருக்கிறவரையில் நான் தங்களுடன் வாழ்வேன். நீங்கள் இவற்றிலிருந்து தவறுகின்ற அந்தக்கணமே நான் உங்களை பிரிந்து விடுவேன்" என்று கூறினாள்.கங்கையின் அழகில் மயங்கியிருந்த சந்தனு மன்னன் நிபந்தனைகளை ஏற'றுக் கொண்டான். இருவரும் திருமணம் செய்து கொண்டனர். மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். காலம் உருண்டோடியது இருவருக்கும் குழந்தை பிறந்தது. அழகில் சிறந்த அந்தக்குழந்தையை எண்ணி சந்தனு மனம் மகிழ்ந்திருந்த நேரத்தில் கங்காதேவி அந்தக் குழந்தையை எடுத்து கங்கை நதியில் எறிந்து விட்டாள். துயரில் துடித்தாலும் சற்தனுவால் எதுவும் செய்ய முடியவில்லை. அவள் எது செய்தாலும் குறுக்கிடக் கூடாது என்பது நிபந்தனை ஆயிற்றே! நிபந்தனைக்கு கட்டுப்பட்ட மன்னன் பொறுமையுடனிருந்தான். ஆனால் கங்கையின் விசித்திரப் போக்கு அத்துடன் நிற்கவில்லை. ஒரு குழந்தை இருகுழந்தை என்று அல்ல,ஒன்றின் பின் ஒன்றாகப் பிறந்த ஏழு குழந்தைகளையும் கங்கையாற்றில் வீசினாள். ஆனால் எட்டாவது குழந்தைக்கும் இதே நிலைமை நேர இருந்த பொழுது சந்தனுவால் பொறுக்க முடியவில்லை."பெண்ணே, உனக்கு என்ன நேர்ந்து விட்டது?இந்தக் குழந்தையை மட்டும் விட்டுவை. உனக்கு இரக்கமே இல்லையா? தன் குழந்தைகளைத் தானே கொல்கின்ற இந்தக் கொடிய பாவத்தை ஏன் நீ செய்கிறாய்? உண்மையில் நீ யார்?

தொடரும்

1. பிரார்த்தனை

கடவுள் நமக்கு தந்தையும் தாயும் போன்றவர். நமக்கு வேண்டிய அனைத்தையும் அவரே தருகிறார். அவரிடம் நாம் கொள்ளும் தொடர்பே பிரார்த்தனை. தினமும் நமது வாழ்க்கை பிரார்த்தனையிலேயே தொடங்கி பிரார்த்தனையிலேயே நிறைவுற வேண்டும். எனவே காலை எழுந்ததும் அன்றையக் கடமைகளைச் செய்வதற்கான வலிமையையும் ஆற்றலையும் கடவுளிடம் கேள்.----

தேஜோஸி தோஜோ மயி தேஹி
வீர்யமஸி வீர்யம் மயி தேஹி
பலமஹி பலம் மயி தேஹி
ஓஜோஸி ஓஜோ மயி தேஹி
மன்யுரஸி மன்யு மயி தேஹி
ஸஹோஸி ஸஹோ மயி தேஹி

இறைவா! எல்லையற்ற ஆற்றல், வீரியம், வலிமை, ஊக்கம் வீரம், உறுதி இவை அனைத்தின் உறைவிடமாக நீ இருக்கிறாய். இவற்றை எனக்கும் அருள்வாயாக!

2. சின்னஞ்சிறு மலர்கள்

கடவுளின் தோட்டத்திலுள்ள சின்னஞ்சிறு மலர்கள் நீங்கள். கடவுள் உங்களை நேசிக்கிறார். எத்தனை அற்புதமான உடலை உங்களுக்கு அவர் தந்திருக்கிறார். அவரது உலகைக் காண இரண்டு சிறிய கண்கள்.

அவரது பேச்சைக் கேட்க இரண்டு சிறிய காதுகள்.

அவரது பாதையில் நடக்க இரண்டு சிறிய கால்கள். அவரது வேலையைச் செய்ய இரண்டு சிறிய கைகள். அவரது குழந்தைகளான எல்லோரையும் அன்பாய் நேசிக்க ஒரு சிறிய இதயம்.



3. உலகைப் படைத்தவர் யார்?

இந்த உலகைப் படைத்தவர் யார்? இந்த நீலவானத்தைப் படைத்தவர் யார்? அதில் சூரியனையும் சந்திரனையும் நட்சத்திரக் கூட்டங்களையும் உலாவவிட்டவர் யார்?

இரவையும் பகலையும் உண்டாக்கியவர் யார்? கடவுள். கடவுளே இவற்றையெல்லாம் செய்தார்.

நமக்கு அம்மாவையும் அப்பாவையும் தந்தவர் யார்? கடவுளே தந்தார்.

கண்ணா, நீ எங்கே இருக்கிறாய்?

நீ எங்கும் இருக்கிறாய்.

நீ என்னைப் பார்க்கிறாய்: நான் உன்னைப் பார்க்க முடியவில்லை.

நீ என் குரலைக் கேட்கிறாய்: நான் உன் குரலைக் கேட்க முடியவில்லை.

நான் உன்னை நேசிக்கிறேன், கண்ணா, நீயும் என்னை நேசிப்பாயா? எத்தனை நண்பர்கள் இருந்தாலும் கண்ணா, நீயே எனது சிறந்த நண்பன்.

4 .கருணை

மன்னுயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு இல் என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

-திருக்குறள் 244

உயிர்களிடம் அன்பும் கருணையும் காட்ட வேண்டும். அன்பும் கருணையும் மனத்துள் ஓங்க ஓங்க மனிதன் தெய்வமாக மாறுகிறான். சிபி மன்னர் அத்தகையதோர் உயர்ந்த வாழ்விற்கு எடுத்துகாட்டாக விளங்கினார். ஒரு நாள் அவர் அரண்மனை நந்தவனத்தில் அமர்ந்திருந்தார்.

அப்போது புறா ஒன்று அவரது மடியில் விழுந்தது. திடுக்கிட்டு அவர் பார்த்தபோது அந்தப் புறா பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. காரணம் புரியாத அவர் அதனை மெல்ல வருடியபடியே அங்குமிங்கும் கண்களைச் சுழல விட்டார். அப்போது, வெகு வேகமாக பருந்து ஒன்று அங்கு வந்து சேர்ந்தது.

அது அரசனைப் பார்த்துச் சொன்னது-- அரசே,நான் மிகவும் பசியாக இருக்கிறேன். உங்கள் மடியில் இருக்கும் புறா நான் துரத்தி வந்தது, அதை என்னிடம் கொடுத்துவிடுங்கள். நான் உண்டு பசியாற வேண்டும்." அதற்கு மன்னர்,"முடியாது. என்னிடம் அடைக்கலம் தேடி வந்த ஓர் உயிரை நான் எப்படி உன்னிடம் ஒப்படைக்க முடியும்? வேண்டுமானால் வேறு எதாவது கேள். நீ எது கேட்டாலும். நான் தருகிறேன்''என்றார். அந்தப் பருந்தோ பிடிவாதமாக,"அது நடக்காத விசியம். எனக்கு வேண்டுயது இந்தப் புறா. இதை நீங்கள் கொடுக்க மறுத்தால் வேறு எதுவும் உண்ணாமல் பட்டினி கிடந்து உயிரை மாய்த்துக் கொள்வேன். பாவமும் பழியும் உங்களுக்கு வந்து சேரும்'' என்றது. அரசர் பாடு தர்மசங்கடமாகி விட்டது. கெஞ்சும் குரலில் அவர் கேட்டார்

"அருமைப் பருந்தே! இந்துப் புறாவை உனக்கு உணவாக்க நான் விரும்பவில்லை. அதே வேளையில் நீ இறப்பதும் எனக்குச் சம்மதமில்லை. தயவு செய்து இரண்டையும் பூர்த்தி செய்யும் விதத்தில் ஏதாவது கேள்." பருந்து சிறிது நேரம் யோசித்தது. பின்னர்,சரி: இந்தப் புறாவின் எடைக்குச் சமமாக உங்கள் உடலிலிருந்து தசையை வெட்டிக் கொடுங்கள்.

அதுபோதும்"என்று கூறியது. சிபிமன்னர் சிறிதும் தயங்கவில்லை. உடனடியாகத் தராசு ஒன்று கொண்டு வருமாறு ஆணையிட்டார். அந்தத் தராசின் ஒரு தட்டில் புறாவை வைத்தார்" மறு தட்டில் தமது உடலிலிருந்து சதையை வெட்டி இட்டார். தட்டுக்கள் சமமாகவில்லை. எனவே இன்னும் சற்று அரிந்து இட்டார்.

ஆனால் என்ன விந்தை! எத்தனை இட்டும் புறா இருந்த தட்டு தாழ்ந்தே இருந்தது! கடைசியில் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கத் துணிந்த அரசர் தாமே அந்தத் தட்டில் ஏறிஅமர்ந்தார். அப்போது அற்புதம் ஒன்று நிகழுந்தது.

திடீரென பருந்து, புறா இரண்டுமே மறைந்துவிட்டன. அந்த இடத்தில் தேவர் தலைவனான இந்திரனும், நெருப்புக் கடவுளான அக்கினியும் புன்முறுவலுடன் நின்றிருந்தனர்:' மன்னா நீ உயர்ந்தவன். உன்னைச் சோதிக்கவே நாங்கள் இவ்வாறு வந்தோம். ஒரு புறாவைக் காப்பதற்காக உனது உயிரையே இழக்கத் துணிந்துவிட்டாயே! கருணை காட்டுவதில் உனக்கு இணை இல்லை. நீ நீண்ட நாள் வாழ்ந்து நல்லாட்சி புரிவாயாக!"என்று வாழ்த்தி மறைந்தனர். சிபி மன்னரும் முன்னைப் போன்ற பொலிவுடனும் அழகுடனும் திகழ்ந்தார்" பல்லாண்டு காலம் கருணைத் திறத்துடன் அரசாண்டார். இந்த ஒரு கருணைச் செயலுக்காக சிபி மன்னரின் பெயர் அழியாப் புகழ் பெற்று விட்டது. "கருணைக்கு சிபி என்று இன்றும் நம்மிடையே அந்தப் பெயர் நின்று நிலவுகிறது.

ந கர்மணா ந ப்ரஜயா தனேன
த்யாகேனைகே அம்ருதத்வ மானசு:!

கர்மத்தால் அல்ல. மக்கட் பேற்றினால் அல்ல, செல்வத்தாலும் அல்ல, தியாகத்தினாலேயே மரணமிலாப் பெருநிலை அடையப்படுகிறது.

கேள்விகள்

1. புறாவைப் பருந்திடம் தர சிபி மன்னர் ஏன் மறுத்தார்?
2. புறாவுக்குப் பதிலாகப் பருந்து கேட்டது என்ன?
3. அங்கு நிகழ்ந்த அற்புதம் என்ன?
4. சிபி மன்னனின் புகழுக்கு காரணம் என்ன?
5. இந்தக் கதை உணர்த்தும் கருத்து என்ன?

இக்கேள்விகளுக்கான சரியான விடைகளை 30 - 11 - 95க்குமுன்னதாக அனுப்பி மதம் வெளியீட்டின் சிறந்த பரிசில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
(பதின்நான்கு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மட்டும் பங்குபற்றலாம்)

கடவுள் எங்கே இருக்கிறார் ?

பிரகலாதன் கடவுளிடம் மிகவும் அன்பு கொண்டவனாக இருந்தான். ஆனால் அவனது தந்தையான இரணியனோ கடவுள் நம்பிக்கை இல்லாதவன். அவன் ஒருநாள் பிரகலாதனைக் கேட்டான்:

"உன் கடவுள் எங்கே இருக்கிறார்?"

"அவர் எங்கும் இருக்கிறார்."

"இதோ இந்தத் தூணிலும் கூட அவர் இருக்கிறாரா?"

" கண்டிப்பாக இருக்கிறார்."

"வேண்டுமானால் உடைத்துப்பாருங்கள்."

கையிலிருந்த ஆயுதத்தால் தூணைப்பிளந்தான் இரணியன்.

ஆ, என்ன ஆச்சரியம்! கடவுள் நரசிம்ம மூர்த்தியாக அதிலிருந்து வெளிப் பட்டார்.

கடவுள் எங்கும் இருக்கிறார் பிரகலாதனுக்கு இருந்ததைப் போன்ற அன்பும் உறுதியும் இருந்தால் நாமும் அவரைக் காண முடியும்.

ரொரன்ரோவில் நடைபெற்ற சிறப்பான நவராத்திரி விழா

மங்களம் கலை மன்றத்தினரால் நடாத்தப்பட்ட நவராத்திரி விழா மிகவும் அற்புதமாக நடைபெற்றது. இதில் 50க்கு மேற்பட்ட பிள்ளைகள் பங்கு கொண்டனர். ஒவ்வொரு சிறுவர் சிறுமியரும் மிகத் திறமையாக தமது ஆற்றலை வெளிப்படுத்தினார்கள். தேவாரம், நடனம், நாட்டியம், பேச்சு, வீணைவாத்தியம், வில்லுப்பாட்டு, எல்லாமே மிக மிகத்திறமையாக நடைபெற்றது. இதில் பங்கு கொண்ட ஒவ்வொரு மாணவர்களும் பாராட்டப்பட வேண்டியவர்களே! இவர்களின் *ஆசிரியை பரமேஸ்வரி சரவணமுத்து* அவர்கள் ரொரன்ரோவிலே முதல்தரமான தன்னலமற்ற சமயத் தொண்டராகவும் புனிதம் நிறைந்த அன்னையராகவும் இந்துப் பிள்ளைகளுக்கெல்லாம் சிறந்த சற்குருவாகவும் விளங்கும் இந்த அன்னையரின் தொண்டு முதல்தரமானது. இவரிடம் கற்ற இந்த மாணவர்கள் எல்லோரும் பாக்கியம் பெற்றவர்கள். இந்துப்பிள்ளைகள் எல்லோரும் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் எல்லா வளமுடனும் வாழ்வார்கள்.

இவர்கள் எதிர்காலத்திலே செல்வந்தராகவாழும் வாய்ப்பினையும் பெறுகிறார்கள், ஏனென்றால் இப்பிள்ளைகள் கைதடி அனாதைச் சிறுவர்களுக்காக வீடு வீடாகச் சென்று உண்டியலிலே சில்லறைகளாக 300 டாலர்கள் சேகரித்துக் கொடுத்துள்ளார்கள். இவர்கள் சேகரித்துக் கொடுத்த பணம் (தர்மம்)இது ஆயிரம் மடங்குகளாக கொடுத்தவர்களுக்கும், பல ஆயிரம் மடங்குகளாக இந்துப் பிள்ளைகளுக்கும் கிடைக்கும். எதிர்காலத்திலே இவர்கள் பெரும் செல்வந்தர்களாக வாழ்வார்கள். தர்மத்தின் இரகசியத்தை சிறு வயதிலேயே அவர்களை அறியாமல் ஊட்டப்பட்டுவிட்டது. இந்தப் பெரும் இரகசியத்தை அவர்களுக்கு ஊட்டிய சற்குரு அன்னை பரமேஸ்வரி சரவணமுத்து அவர்களாவர், இதற்கு அடுத்த மூல காரணகர்த்தா பெரியார் ஆத்ம ஜோதி ஐயா அவர்கள். அன்னை பரமேஸ்வரியால் வழி நடாத்தப்படும் மங்களம் கலை மன்றத்தினர் 800 டாலர்களைச் சேகரித்து கைதடி சைவச் சிறுவர் இல்லத்துக்காக கனடா இந்து சமயப் பேரவையினரிடம் கொடுத்துள்ளனர். மங்களம் கலை மன்றத்தினருக்கு இது நான்காவது ஆண்டு விழாவாகும். மன்றம் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியான வளர்ச்சியினை அடைந்து வருகின்றது. நிச்சயமாக இம்மன்றம் மேலும் வளர்ச்சியடையும். இவர்களுக்கும் மேலாக இப்பிள்ளைகளின் தாய்மார்கள் போற்றப்படவேண்டியவர்கள். தூய்மை மிக்க இந்த அன்னையர் ஆற்றிவரும் சமயத்தொண்டையும், ஆலயத் தொண்டையும் பாராட்டாமல் இருக்கமுடியாது. இவரால் மேலும் பல பிள்ளைகள் உயர்ந்தவர்களாக உருவாக்கப்பட வேண்டும்.அவர் தொண்டு நீடித்து, அவர் நீடூழி வாழ வாழ்துகிறோம்!

கோவில் சமயத்துக்கு என்ன செய்கிறது? சட்டத்தரணியின் உணர்ச்சி உரை

அன்னை வசந்தா நடராஜனின் ஈழத்துத் திருத்தலங்கள் சி.டி வெளியீட்டு விழாவினை கோவிலிலே நடாத்துவதற்காக ஆசைப்பட்டு பிள்ளையார் கோவில் மண்டபத்தை தந்துதவுமாறு கேட்டபோது, கோவில் நிர்வாகிகள் வாடகை கேட்டார்களாம். சமய விடயங்களுக்கு வாடகை அறவிடலாமா? கோவில் சமயத்துக்காக என்ன செய்கிறது? என்று உணர்ச்சி பொங்க சி.டி வெளியீட்டு விழாவிலே சட்டத்தரணி திரு தம்பையா. ஸ்ரீபதி அவர்கள் துணிச்சலோடு உணர்ச்சி பொங்க உரை நிகழ்த்தினார். மண்டபம் நிறைந்த கரகோஷம்.

தவறுகள் தட்டிக்கேட்கப்பட வேண்டும். மதம் என்பது மக்களை உயர்வடையச் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பு. மதசேவை என்பது புனிதமானது. ஆலயங்கள், மதஸ்தாபனங்கள், சமயத் தொண்டர்கள், எல்லாம் மக்களை மேன்மைப் படுத்துவதற்காக சேவையாற்ற வேண்டும். பிராமணர்களின் குறைபாடுகளை கட்டுரைகளில் எழுதினால் கட்டுரை பிரசுரிக்கப்படமாட்டாது என பத்திரிகை ஆசிரியர்கள் கூறியுள்ளது வருத்தப்பட வேண்டிய விடயம். குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி னால்தான் திருந்த வழியுண்டு. பிராமணர்கள் வணங்கப்பட வேண்டியவர்கள். அவர்கள் வைசியர்களாக(வியாபாரிகளாக) மாறக்கூடாது, கொடுப்பதை மகிழ்வோடு வாங்கும் அந்தணனே புனிதமான அந்தணன், இப்படிப் படிப்பட்ட(வணங்கக் கூடிய) அந்தணனால் செய்யும் கிரியைதான் மக்களுக்கு உண்மையிலேயே பயனாகும்.





ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்ரமும் தமிழ்க்கலைக் கழகமும் இணைந்து நடத்திய சமய நிகழ்ச்சி. சமயபாடம் கற்கும் மாணவர்களின் சமய நிகழ்ச்சி 25 ஜூன் 95ல் ஸ்ரீதுர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ பிரகாஷ் மயானந்த சுவாமிகள், ஈழத்து சமயப் பெரியார் ஸ்ரீ ஆத்மஜோதி முத்தையா, ஸ்ரீ ஆத்ம தத்துவ தாசர் ஆகியோர் கலந்து கொண்டு சிறுவர்களுக்கு சொற்பொழிவு மூலம் சிறந்த சமய உண்மைகளை ஊட்டினார்கள். இந்தப் பிள்ளைகள் எல்லோரும் எதிர்காலத்தில் உயர்ந்தவர்களாகவும் சிறந்த கல்விபெற்று நலமே வாழ்வார்கள். இவர்களின் தாய்மார்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவர்கள். பிள்ளைகள் நலனில் ஆர்வமுள்ள இப்பிள்ளைகளின் தாய் தந்தையர் உயர்ந்தவர்கள்.

ரொரன்ரோவில் பாராட்டுக்குரிய சமய, தமிழ் சிறுவர் நிகழ்ச்சிகள்

ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமமும், தமிழ்க் கலைக் கழகமும் இணைந்து நடாத்திய தேவார, பஜனை, பண்ணிசை, விலிலுப்பாட்டு நிகழ்ச்சிகள் ஸ்காபரோ ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சி முழுவதும் ரொரன்ரேவில் பல இடங்களிலும் சமயபாடம் கற்றுவரும் நூற்றுக்கு மேற்பட்ட சிறுவர்கள் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியிலே சுவாமி ஸ்ரீ பிரகாஷ் மயானந்தரும், பெரியார் ஆத்மஜோதி ஐயா அவர்களும், கிருஷ்ண பக்திக் கழகத்தைச் சார்ந்த சமய அறிஞர் ஸ்ரீ ஆத்மதத்துவதாசரும் கலந்து சிறப்பித்து பிள்ளைகளுக்கு வேண்டிய சிறந்த கருத்துக்களை மிகச்சிறந்த முறையில் பிரசங்கித்தார்கள்.

இப்படியான நிகழ்ச்சிகள் நடை பெற, குழந்தைகள் கெட்டுப்போகாமல், நல்லவாகளாக, வளரவேண்டும் எனும் பெருநோக்கம் கொண்ட தாய்மார்களின் ஒத்துழைப்பே முக்கியமானதாக இருந்தது. இம்மாணவர்களின் ஆசிரியர்கள் தமது நேரத்தையும் பாராமல் இலவசமாகவே தொண்டாற்றுகிறார்கள். அவர்கள் எல்லா நலனும் பெறுவார்களாக!

மகாஜனா கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சமயஅறிவு, கட்டுரை, பேச்சு, போட்டிகளும் பல சிறுவர்களை ஊக்குவித்த சிறந்த நிகழ்ச்சியாகும். இவர்கள் வருடாவருடம் நடாத்திவரும் இப்போட்டிகளும் முத்தமிழ் விழாவும் தொடர்ந்தும் நடைபெற்று மேலும் பல பிள்ளைகளை ஊக்குவிக்கவும் இச் சிறந்த பணியினை மேற்கொள்ளும் சங்கத்தின் உறுப்பினர் அனைவரும் எல்லா நலனும் பெற்று வாழவும் இறைவன் நற்கருணை புரிவானாக!

தமிழ்க் கலைக் கழகத்தினால் *(24.9.95ல்)* சிறுவர்க்கான தேவாரம், பண்ணிசை, பேச்சு, கட்டுரைப்போட்டிகள் நடாத்தப்பட்டது, பாராட்டக்கூடிய விடயம். 147 மாணவர்க்ள் பங்கு கொண்ட இப்போட்டியினை ஒழுங்குசெய்தவர் கழக அதிபர் திருமதி கௌரி மாலன் அவர்கள். இவர் எமது சமூகத்தின் மேல்கொண்ட பற்றினால், இளம் பிள்ளைகளின் வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகின்றார். இவரால் நடாத்துப்படும் தமிழ்க் கலைக் கழகத்தில் பயிலும் மாணவர்கள் ஒழுக்கமுடையவர்களாகவும், ஆற்றல் மிக்கவர்களாகவும் காணப்படுகிறார்கள்.இவர் பிள்ளைகளோடு கண்டிப்போடு இருப்பதால் சில பெற்றோர்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள். ஆனால் உண்மை அறிந்த பெற்றார்கள் தமது பிள்ளைகளை தொடர்ந்தும் அங்கே கல்விபயில அனுப்பிவருகிறார்கள், இப்பிள்ளைகள் ஒழுக்க முள்ளவர்களாகவும், கெட்டிக்காரர்களாகவும் இருக்கிறார்கள், இவர்கள் புத்திசாலிப் பெறறோர்கள்.

இவரது கழக மண்டபத்திலே பாபாவின் பஜனையும் ஸ்ரீ ராமகிருஷ்ண பஜனையும் நடைபெறுகிறது. ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் பஜனை சமய,தியான வகுப்போடு நடைபெறுவதால், கிப்பிளிங்கை அண்டியுள்ள பகுதியில் வாழும் பெரியோருக்கும் சிறுவர்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாகும். அவர்கள் இப்பஜனையில் பங்கு கொண்டு பயனடைவார்களாக! யாரெல்லாம் பிற பிள்ளைகளுக்காக, அவர்கள் முன்னேற்றத்திற்காக பாடுபடுகிறார்களோ அவர்கள் தெய்வ சக்திவாய்ந்தவர்கள். திரு, திருமதி கௌரி மாலன் தம்பதிகள் அத்தகையவாகளே. இவர்களைப் பெற்ற பெற்றாரும் புண்ணிய சீலர்களே. வளரட்டும் இவர்கள் தொண்டு.

ஆசிரியை திருமதி கமலா இராமசூரியரால் நடாத்திய சரஸ்வதி பூசை, மார்க்கம் அன் எக்லின்ரனில் (1.10.95ல்)நடைபெற்றது. இப் பூசையில் பல சமய வகுப்பு மாணவச் சிறுவர்கள் பங்குகொண்டு சிறப்பித்தார்கள். இவ்விழாவினை ஒழுங்கு செய்த நல்ல நெறிகளைப் பயிற்றுவிக்கும் இவ் ஆசிரியரை மாணவமணிகள் எல்லோரும் தட்சணை கொடுத்து குரு வணக்கம் செலுத்தி நன்நெறி புகட்டிய குருவின் மூலமாக இறைவனின் நல்லருள் பெற்றார்கள். நல்ல நெறிகளைக் கற்றுக்கொடுப்பவர்கள், ஆசிரியர்களை விட உயர்ந்து குரு (Master) நிலைக்குச் செல்கிறார்கள். இப்படிப்பட்ட உயர்ந்தவர்களால்தான் சமுதாயத்திலே நல்லவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட குருக்கள் மேலும் மேலும் உயர்ந்த ஆன்மீக நிலைக்குச் செல்லும் போது, தாமும் உயர்ந்து மற்றவர்களையும் முன்னேற்றுகிறார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடப்பதற்கும் பிள்ளைகள் கெட்டுப்போகாமல் வளர்வதற்கும் உயர்ந்த தாய்மாரே காரணம். ***இப்படிப்பட்ட நல்ல பிள்ளைகளை உருவாக்கும் தாய்மார்களுக்கு வணக்கங்கள் பல! ஏனைய தாய்மாரும் அறிந்து முன்னேற்ற முன் வரவேண்டும்!***

ஸ்ரீ ராமகிருஷ்ணா மிஷன் ரொரன்ரோ
(Vedanta Society of Toronto)

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனின் ரொரான்ரே கிளையின் புதிய கட்டிடத்தினை திறந்து வைப்பதற்காக மிஷனின் தலைமை மடமான கல்கத்தா பேலூர் மடத்திலிருந்து ஸ்ரீ ராமகிருஷ்ணரின் நேரடிச் சீடர்களிடம் சுவாமிப்பட்டம் பெற்றவரும் தற்போதைய மூத்த சுவாமிகளில் ஒருவரும், மிஷனின் சர்வதேச கலாச்சார நிலையத்தின் செயலாளருமான அதி வணக்கத்துக்குரிய சுவாமி லோகேஸ்வரானந்தா வருகை தந்திருந்தார். *25 ஜுன் 1995ல்* அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. சிறப்பான இவ்வைபவத்தில் ஈழத்துச் சமயப் பெரியார் ஆத்மஜோதி முத்தையா அவர்களும், ஸ்ரீ பிரகாஷ் மயானந்த சுவாமிகளும் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரம உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



படத்தில்: சுவாமி லோகேஸ்வரானந்தாவுடன் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களும் ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாசிரம உறுப்பினர்களும்




படத்தில்: சுவாமி பிரமதானந்தா(இடப்பக்கம்) ரொரன்ரே மிஷன்), சுவாமி லோகேஷ்வரானந்தாவுடன் சுவாமி பிரகாஷ்மயானந்தர் (வலதுபக்கம்)



படத்தில்: சுவாமி லோகேஷ்வரானந்தாவுடன் திருமதி சரஸ்வதி கணேஷ்வரனும் திருமதி கமலா ராமசூரியரும்

Vedanta Society of Toronto (Sri Ramakrishna Mission) 120 Emmet Ave, (Jane & Eglinton) Toronto, Ontario, M6M 2E6 Tel : 240-7262



ஜுலை 96ல் 30நாட்கள்

விசேட இந்தியத் திருத்தலங்கள் யாத்திரை

இவ்விஷேட யாத்திரைக்கு இப்போதே திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

உங்கள் தொண்டுக்குரிய அடியார் உங்களை அழைத்துச் செல்லும்

புனித யாத்திரை

(பிரயாணத்தின் போது பக்தி உணர்வுபொங்கும் பஜனை, கீர்த்தனைகளுடன் பரவசத்தோடு)

☐ ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா லீலைகள் புரிந்த புண்ணிய பூமியான **பிருந்தாவனம்,**

☐ புண்ணிய கங்கை நதி தீர்த்தத்தலமான **காசி,** ☐ ஸ்ரீராமகிருஷ்ண பரமகம்சருக்கு அன்னை பராசக்தி தரிசனம் கொடுத்த கல்கத்தா நகர் அருகே உள்ள **தட்சினேஸ்வரம்,** ☐ ஸ்ரீ ராமகிருஷ்னர்

விவேகானந்தரால் உருவாக்கப்பட்ட **பேலூர் மடம்,** ☐ **பூரி ஜெகநாதர் ஆலயம்,**
☐ **புத்தகாயா** ☐ **காயா** ☐ **திருப்பதி,** ☐ **சாயிபாபாவின் புட்டபத்தி,**
☐ முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளாகிய **திருத்தணி, பழனி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், சுவாமிமலை,** ☐ சிவன் அருள் கிட்டும் **சிதம்பரம்,**
☐ திருச்சி **உச்சிப்பிள்ளையார்,** ☐ **ஸ்ரீரங்கம்,** ☐ **தஞ்சைப் பெரிய கோவில்**
☐ **மதுரை மீனாட்சி அம்மன் கோவில், அழகர் கோவில்,** ☐ **இராமேஸ்வரம்,**
☐ **திருவண்ணாமலை** ☐ **கன்னியாகுமரி,**

பக்தர்களின் வசதிகருதி இந்தியாவில் மிகவும் பிரதான நகரங்களுக்கு விமானமூலமும் ஏனைய சிறுதூரங்களை குளிரூட்டப்பட்ட பஸ் வண்டியிலும் பிரயாணங்கள் மேற்கொள்ளப்படும். சிறந்த தங்குமிட வசதிகளும் ஒழுங்கு செய்துதரப்படும்.

(இப்பிரயாணத்தின் போது உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலை பார்வையிடும் வாய்ப்புக்கிடைக்கின்றது)

குறைந்த செலவில் மிகச் சிறந்த பல புண்ணிய ஷேத்திரங்களைத் தரிசிக்கும் வாய்ப்பினையும் உயர்ந்த புண்ணிய பலனும்பெற இறைவன் திருவருளால் கைகூடும் இப் புனித யாத்திரைக்கு உங்கள் ஆசனங்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு (416) 769-7747

பசுவின் பால் இரத்தமாகப் பசுவின் உடல் முழுவதும் இருக்கிறது ஆனால் அது முலை மூலமாகத்தான் பாலைச்சுரக்கிறது. அதேபோல இறைவன் இல்லாத இடம் எதுவுமே இல்லை ஆனால் புனிதத் தலங்களிலே தான் அவனது அருள் அதிக அளவு சுரக்கிறது. புனிதத்தலங்களை தரிசிப்பதனால் பாவங்கள் போக்கப்பட்டு புண்ணிய பலன் கூடுகிறது. இப்படியான புனித கைங்கரியம் இறைவன் அருளால் கூடுகிறது, இந்த புனித யாத்திரையில் பங்குகொள்ளும் பக்தர்கள் பெருநன்மை அடைவார்கள்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!

ரொரன்ரோவில் பஜனை மூலம் தமிழர் இல்லங்களைப் புனிதமாக்கும்

சுவாமி பிரகாஷ்மயானந்தர்

துறவு என்றால் விலக்குவது என்பது பொருள். துறவி என்றால் ஆசைகளைத் துறந்தவர் என்பது பொருள். வேஷம் போடுவததாலும் வேதாந்தம் பேசுவதாலும் தூய்மையான துறவி ஆகமுடியாது. வேடத்தால் மக்கள் மயங்கலாம். ஆனால் தூய்மை பெறமுடியாது. தூய்மை இல்லாதவரிடம் புனிதம் இருக்காது. புனிதம் இல்லாதவர் மூலம்அருள் கிடைக்காது.
நாவன்மையால் வேதாந்தம் பேசி மக்களை மயக்கலாம். சித்துக்களைக் காட்டி மக்களை மயக்கலாம்

ஆனால் நாவன்மையும், சித்துக்களும் மக்களுக்கு அருள் கொடுக்கமாட்டாது. ஆன்மீக உணர்வையும் அளிக்காது. உண்மைதான் உண்மையை அறிய வைக்கும். உண்மையான, அருளையயும் சுரக்கும். இறைவன் உண்மை வடிவானவர். அவர் தூய உள்ளங்களிலும் தூய்மையான இல்லங்களிலும் தான் வெளிப்படுவார்.

தூய்மையையும் தூய்மையானவர்களையும் அறிந்து கொள்பவர்கள் உண்மையிலே பாக்கிய சாலிகள். அவர்கள் இறைவனின் கருணையைப் பெற்று உயர்கிறார்கள். யாரெல்லாம் இறைவனை விரும்பி விடுதலையை விரும்பி ஆசைகளைத் துறக்கிறார்களோ அவர்களிடம் இறைவன் அந்தர்யாமியாக உறைகிறான். யாரெல்லாம் தூய்மையை நாடி பக்தியோடு இறைவன் நாமத்தை உரைக்கிறார்களோ, அவர்களோடு இறைவன் தன்னை சங்கமித்து கொள்கிறான் வக்கீல் தொழிலைத் துறந்து, தனக்கென்று எதுவும் இல்லாமல் தூய்மையான துறவுபூண்டு நாமபஜனையே நோக்காகக் கொண்டு இறைவன் நாமத்திலே
தன்னையும் மீதிநாளையும் அர்ப்பணித்து வாழும் சுவாமி பிரகாஷ்மாயனந்தரின் மகிமையை யார்தான் அறிவார்? அவர் மக்களை பேச்சால் மயக்கவில்லை, சித்துக்களால் மயக்கவில்லை வேஷத்தால் மயக்கவில்லை. தனது தெய்வீகக் குரலில் இறைவன் நாமத்தை பாடுவதாலும் பஜனை செய்வதாலும் மக்களை மகேசனுடன் இணையவைக்கிறார். தூய்மையோடு இறைவன் மகிமைகளை நாமபஜனை மூலம் பாடும்போது அந்த இடத்திலே அந்த வீடுகளில் இறைவன் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பொழிகிறார். இதை உணராதவர்கள் முழுமையான அருளை தெய்வீகத்தை அனுபவிக்க முடியாது. சுவாமி பிரகாஷ் மயானந்தரின் தெய்வீக நிலையை உணராதவர்கள் துர்பாக்கியசாலிகள் என்று தான் கூறவேண்டும்.

கல்லைக் கல்லென்று நினைத்தால் கல்லுத்தான். கடவுள் என்று நினைத்தால் கல்மூலமாகவும் கடவுள் வெளிப்படுகிறார். தூய்மையான ஸ்ரீ பிரகாஷ்மயானந்தரை உள்அன்போடும் பக்தியோடும் வணங்குபவர்களின் வணக்கம் உடனடியாக இறைவனை சென்றடைகிறது. மகிமை பொருந்திய சுவாமிகள் சாதாரண துறவிமாதிரி எமது கண்முன்னே காட்சி தருவது அவரது தூய்மையை பிரதிபலிக்கிறது.

அவரிடமிருந்து விசுவாசத்துடன் மந்திர உபதேசம் பெறுபவர்கள் உயர்ந்த நிலையை அடைவார்கள். அவர் எந்த இல்லங்களுக்கு கெல்லாம் அழைக்கப்பட்டு வணங்கப்பட்டாரோ அவர்கள் பாக்கியசாலிகள். அவர் பாதம்படும் இல்லம் சிறப்படையும்! அவரோடு கூட இறைவனும் மறைவாக வருகிறார்.

சுவாமிகளை விசுவாசிப்பவர்களும் மதிப்பவர்களும் அவரோடு சேர்ந்து பஜனை பாடுபவர்களும் இறைவன் அருளைப் பெறுகிறார்கள். சாதாரணமாக நடமாடும் சுவாமிகளின் மகிமையை பலர் அறியாமல் இருக்கிறார்கள். அவர்கள் உறியில் வெண்ணை இருக்க நெய்யுக்கு அலைவது போன்று எங்கெங்கோ அலைகிறார்கள். அலைந்து பொன்னான வாழ்நாளை வீணடிக்கிறார்கள். மனத்துாய்மை சிறிதளவாவது இருப்பவர்கள் கூட சுவாமியின் மகிமையை அறியும் பாக்கியம் பெறுவார்கள்.


பல ஏமாற்றுக்காரர்கள் தங்களிடம் சக்தி இருப்பதாகக் கூறி அதிக அளவு பணத்தை வசூலித்து செல்கிறார்கள். இப்படியான சில ஏமாற்றுக்காரர்களை நம்பி பலர் ஏமாந்துள்ளார்கள், அவர்களால் யாருமே நன்மை அடைந்ததாக தெரியவில்லை. பதிலாக எமாற்றம் அடைந்திருப்பதுதான்.

பணத்தைக் கொடுப்பதால் இறைவன் கருணையைப் பெறமுடியுமா? பணத்தால் இறைவனை அளக்கமுடியுமா? அறியமுடியுமா? இல்லவே இல்லை. சுவாமி ஸ்ரீ பிரகாஷ்மயானந்தரைப் போன்ற உண்மையான தூய்மை கொண்ட மகான்களின் மூலம் இறைவன் பெரும் நன்மையைச் செய்கிறார்.

முற்காலத்திலலே தமது இல்லங்களுக்கு தினமும் துறவிகள் வரமாட்டார்களா? என்று ஏக்கத்துடன் காத்திருந்து அவர்களுக்கு விருந்தளித்து காணிக்கை கொடுத்து மகிழ்வித்து வாழ்ந்த இல்லறத்தினர். எல்லா நன்மையுடனும் வளத்துடனும் வாழ்ந்தார்கள். துறவிகள் வீட்டுக்கு அழைக்கப்பட்டால் அவர்களை உபசரித்து மகிழ்வித்து அவர்களிடம் உபதேசம் பெற்று காணிக்கை முடிந்தளவு கொடுத்து வழிஅனுப்புவதே சிறப்பு, இப்படியானவர்களின் வீட்டினர் அறம் பொருள், இன்பம், வீடு பேறு பெற்று வாழ்வார்கள்.

ஸ்ரீபிரகாஷ்மயானந்தர் நம்மு ன்னே இறைவன் கருணைக்கு பாத்திர மானவராகவும். புனிதராகவும் இருப்பது இங்குள்ள பக்தர்களின் வரப்பிரசாதம். அவரது விசாமுடிவடையும் போது அவரது அன்பான பக்தர்கள் அவரை இங்கு மேலும் சிலகாலம் தங்குமாறு கேட்டு அவர்களே, அவரது விசா அனுமதியின் காலத்தை நீடிப்தற்கு உதவி செய்கிறார்கள்.

அவர்கள் மிகுந்த பாக்கியசாலிகள் அவருக்கு இங்கு ஒர் ஆச்சிரமம் அமைக் கப்பட்டால் ரொரன்ரோ வாழ்தமிழ் பக்தர் கள் பெரும் பாக்கியசாலிகள் என்றுதான் கூறமுடியும். இதற்கு அன்பானவர்கள் விரு ம்பினால் இறைவன் வழிசெய்வார். புனிதர் கள் நம்அருகே இருந்தால் அவர்கள் மூல மாக நமக்கு புனிதஅலைகள் மூலம் அரு ள்கிடைக்கும். கலியுகத்தில் இறைவன் நா மத்தை பாடுவதால் பஜனை செய்வதால் உயர்ந்த நன்மை கிட்டுகிறது. தவம் செய் வதைவிட நாம ஜெபம் உயர்ந்தது. இறை வன் நாமத்தை பாடி பக்தர்களுக்கு புனித அருள் சுரந்து பக்தர்களின் இல்லங்கள் வ ளம் பெற எம்மத்தியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ பிரகாஷ்மயானந்தர் பல்லாண்டு வாழ வேண்டும். அவரது பக்தர்கள் எல்லாநலன் களும் பெற்று பெருவாழ்வு பெறுவார்கள்.



ஈழத்து யோகர்சுவாமிகளின் சீடரும் சுவாமி சிவானந்தரின் சீடருமானஅருள் ஸ்ரீ பிரகாஷ்கயானந்தா சுவாமிகள் நீண்ட நாள் நம்முடன் வாழவேண்டுகிறோம்.

நடாஸ் ரெக்ஸ்ரைல் அன் ஜுவலரி

NADA'S TEXTILES, JEWELLERIES & GIFT ITEMS

கலிபோர்ணியா ஸ்ரைல் ஆண், பெண், சிறுவர் ஆடைகள்

Every Week New Arrivals and Sales

* கைதேர்ந்தவர்கள் கைவண்ணத்தில் 22 கரட் நகைகள்
* உங்கள் ஆபரணத் திருத்த வேலைகள்
* Ear Piercing
* Jewellery Casting
* Engraving
* Rubber Mould Making
* Enamelling
* Birth Stones



Ready Made Clothes from Singapore, California & Korea

* பெண்கள் Party Dresses & 2pcs Outfits
* சிறுவர்களுக்கான விஷேச ஆடைகள், றெயோன் சூட்ஸ்
* ஆண்கள்-ஜீன்ஸ், வெல்வெற், கொட்றொய் சூட்ஸ் மற்றும் பல......

We Import & Sell Direct to The Public
551 Markham Rd, Scar., Ont., M1H-2A3
மொத்த சில்லறை விற்பனை

Tel: (416) 431-1614
Fax: (416) 431-0654

LAW OFFICE - T. JEGATHEESAN

உங்கள் சட்டப் பிரச்சனைகள் எதுவாயினும் தமிழிலும், ஆங்கிலத்திலும் ஆலோசனைகளுக்கும், சட்ட நடவடிக்கைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

காணி, நிலம், வீடு வாங்கல், விற்றல், அடமானம் வைத்தல்
REAL ESTATE - Purchase, Sale, Mortgage
குடும்பம் தொடர்பான வழக்குகள் விவாகரத்து, பிரிவு
FAMILY LAW - Divorce, Separation
வர்த்தக ஸ்தாபனங்கள் கொள்முதல், விற்பனை
BUSINESS - Purchase, Sale, Incorporation
குடிவரவு அகதி விவகாரம், உறவினர் சேர்க்கை, மேன் முறையீடு
IMMIGRATION - Refugee Matters, Sponsorship, Appeal
தத்துவப் பத்திரம் சத்தியக் கடதாசி, உயில்
POWER OF ATTORNEY - Affidavits, Statutory Declarations, Last Will

Tel:
Off. (416) 266-6154
Res. (416) 449-0358
Fax. (416) 266-4677



இலங்கை, இங்கிலாந்து, ஆகிய நாடுகளில் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் பெற்று கனடாவிலும் சட்ட வல்லுனராக பயிற்சி பெற்று பதிவு பெற்ற தமிழ் வழக்கறிஞர்

தி. ஜெகதீசன்

BARRISTER, SOLICITOR AND NOTARY PUBLIC (ONTARIO)
16 Bimbrok Road, 2nd Floor, Scar., Ont., M1K-4T7 (Eglinton Ave. E & Midland)

நல்ல மனைவி, நல்ல கணவன், நல்ல பிள்ளைகள் மகிழ்வான சிறந்த குடும்பம் அமைவது?

விதி என்பது யாரால் அமைவது? எப்படி அமைவது? இதற்கு விடை கண் மூடித்தனமாக சொல்லும் வார்த்தைகள் அல்ல. ஆன்மீக விளக்கங்கள் தெளிவாக விஞ்ஞானபூர்வமாக விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். கணிதத்திலே எண்களைக் கூட்டுவதும், கழிப்பதும், பிரிப்பதும், பெருக்குவதுமான விதிகள் உள்ளன. எண்களை ஒன்றோடு ஒன்று கூட்டும்போதும், கழிக்கும் போதும், பெருக்கும் போதும், அல்லது பிரிக்கும் போதும் விடை பெறப்படுகிறது. கணிதத்திலே பெறப்படும் விடை எண்களை மையமாக வைத்தே பெறப்படுகிறது.

வாழ்கை எனும் கணித்ததிற்கு பெறப்படும் விடைகள் இன்ப, துன்பங்கள். இந்த விடைகள் கூட்டிக்கழித்தோ, பெருக்கிப் பிரித்தோ தான் பெறப்படுகிறது. எண்கணிதத்திலே எண்கள் தான் மூலம். அதே போல் வாழ்க்கையிலே கர்மவினைகள் தான் மூலம். ஒவ்வொருவரும் செய்கின்ற கர்மவினைகள் தான் கூட்டி, கழித்து, பெருக்கி, பிரித்து விதி என்னும் அமைப்பு ஊடாக வெளிப்படுகிறது.

நாம் முன்பு எதைச் செய்தோமோ அதன் பலனைத்தான் அனுபவிக்கிறோம். இப்போது செய்கின்ற பலனை எதிர்காலத்தில் அனுபவிப்போம். நாம் அறியாதவரைக்கும் இயற்கை எனும் பிடியிலிருந்தும் அதன் விதிப்படி இன்ப துன்பங்களில்உழன்று கொண்டு வாழுகின்றோம். துன்பங்களை அனுபவிக்கும் போது அதைப்பற்றிய அறிவு ஆழமாக பதிகிறது. இன்பத்தை அனுபவிக்கும் போது அதைப்பற்றிய அறிவும் ஆழமாகப் பதிகிறது. அனுபவம் அறிவைக் கொடுக்கிறது. இந்த அறிவின் மூலமாக நல்லது எது கெட்டது எது என்பதை உணர்ந்து மனிதன் வாழ முற்படும் போது அவன் முன்னேற்றம் காண்கிறான்.

இன்பத்தை அனுபவிப்பதற்காக முயற்சிக்கும் காரியங்களில் நிறையத்துன்பங்கள் வந்து தாக்குகின்றன. இதன் இரகசியத்தினை அறிந்தவர்கள் இன்ப துன்பங்களில் இருந்து விடுபட்டு இதைவிட உயர்ந்த நிலைக்குச் செல்லுகிறார்கள். இவர்கள் இயற்கை எனும் விதியில் இருந்து விடுபட்டு தமது விதியை தாமே நிர்ணயிக்கிறார்கள். இவர்கள் உண்மையை நேருக்குநேர் காணும் ஆற்றலைப் பெறுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையின் இரகசியங்களை கர்மவினைகளின் செயல்பாட்டு உண்மைகளை உலகின் நன்மைக்காக பிறருக்கு போதனை வடிவில் கொடுக்கிறார்கள். இவர்கள் தான் ஞானிகளும், முனிவர்களும்.

நாகரீகம்

நாகரீகம் என்பது உயர்ந்த முன்னேற்றதுடன் வாழும் வாழக்கை. இதில் உணவு, உடை, இல்லம், பண்பும் பழகும் முறையும், விருந்தோம்பல், கணவன் மனைவியிடையே அன்பு, பிள்ளைகளை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும்உருவாக்கல் பிறரை அன்போடு நேசித்தல். தர்மத்துக்காக ஒரு சிறுபகுதியாவது (பத்துவீதமாவது) செலவிடுதல் ஆகும்.

உணவிலே நாகரீகமான உணவு தாவர உணவே. உணர்வுகளை சாந்தமாகவும் உயர்ந்த நிலைக்கும் நீண்ட நோயற்ற வாழ்வைக் கொடுப்பதும் தாவர உணவே. ஆடைகள் பிறரை கீழ்தரமான உணர்ச்சிக்கு ஆளாக்கி கெடுக்காத ஆடையாகவும், ஆசைகளை வளர்க்காத தூய ஆடைகளே நாகரீகமான ஆடைகளாகக் கொள்ளப்படுகிறது. உதாரணமாக மேலை நாட்டு ஆடைகளைப் பார்க்கும் போது ஆசைகளையும், ராஜச உணர்வுகளையும் மோகத்தையும் அதிகரிக்கச் செய்கிறது. ஆனால் கீழைத்தேய உடைகளைப் (சேலை, வேட்டி) பார்க்கும் போது புனித உணர்வுகள் மேலிட்டு மோகம் வெளிப்படாத நிலையை உணரலாம். எனவே பிறருக்கு கெடுதல் இல்லாத ஆடைகளே உண்மையான உயர்ந்த ஆடைகள்.

இல்லம் என்பது ஒரு கோவில் அங்கே நாம் அமைதியோடும் மகிழ்வோடும் இருப்பது தான் நாகரீகம். இல்லத்திலே மன அமைதி பெறுவதற்கு அங்குள்ள பொருட்கள் அமைப்புக்கள் முக்கியம். வீட்டிலே தெய்வீகப் படங்கள் இயற்கைக் காட்சிகளின் படங்கள்

சுவர்களில் மாட்டப்பட்டும், தெய்வீகப்பாடல்கள் தெய்வீக இசைகள் ஒலிக்கவைத்தும் வீட்டைத் தூய்மையாகவும் வாசனையுள்ளதாகவும், வெளிச்சம் நிறைந்தாக வைத்திருப்பது தான் நாகரீகம். இவர்களுக்கு நிறைந்த அமைதியும், உயர்ந்த மகிழ்ச்சியும் கிடைக்கும்.

விருந்தோம்பல் என்பது உயர்ந்த நாகரீகம். விருந்தினரை மனம் கோணாமல் உபசரித்து மகிழ்வது மிக உயர்ந்தது. இது அறங்களில் சிறந்தது. அத்தோடு துறவிகளை வரவழைத்து உபசரிப்பது மிகமிக மேலானது.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று - குறள் *9:83*

தினமும் தன்னை நோக்கி வரும் விருந்தினரை உபசரித்தோதுபவன் இல்வாழ்வு மென்மேலும் செழிக்கும் என்பதாகும்.

பிறரோடு பழகும் போது பண்போடு பழக வேண்டும் மனதில் ஒன்று வைத்து வஞ்சனையோடு பழகாமல் அன்பாக பிறரை நேசிப்பதே உயர்ந்த நாகரீகம்.

கணவன் மனைவி உறவு

தற்காலத்தில் தாம்பத்திய உறவுகள் போலியாக நடப்பதற்கு காரணம் பாலியல் உறவுக்காக ஜாதகப் பொருத்தம் சரிவரப் பார்க்காமல் முகூர்த்த நேரம் நாள் சரியாகப் பார்க்காமல் விவாகம் செய்வதும் தான்தோன்றித்தனமான காதல் விவாகங்களும் போலிகுடும்ப உறவுக்கும், விவாகரத்திற்கும், அமைதியற்ற குடும்ப வாழ்வுக்கும் காரணமாகின்றன. இப்படியான விதியை அமைத்தது அவரவர் அறியாமையே. அவசர வாழ்வு ஐந்தாறு நாளிலோ வாரங்களிலோ, மாதங்களிலோ, வருடங்களிலோ கசந்து போகின்றன.

சரியான பிறந்த நேரத்தைக் கொண்டு சரியாகக் கணிக்கப்பட்ட சாதகங்களில் சரியான முறையில் பொருத்தம் பார்க்கப்பட்டு நல்ல நாள் நல்ல முகூர்த்த நேரத்தில் தாலி கட்டும் திருமணங்களால் எதிர்காலதில் சிறந்த வாழ்க்கையைப் பெறுவார்கள். எக்காரணத்தைக் கொண்டும் செவ்வாய், சனி, ஞாயிற்றுக் கிழமைகள் முகூர்த்தத்திற்கு நல்ல நாட்கள் அல்ல. புதன், வியாழன், வெள்ளி மூன்று நாட்களுமே சிறந்த நாட்கள். சனியும், ஞாயிறும் வாரவிடுமுறை என்பதற்காக வசதியைப் பார்த்து வாழ்வைக் கெடுத்துக் கொள்வதா? பணத்திற்காக மந்திரம் ஓதும் புரோகிதர்கள் பணத்தின் மேல் தான் அக்கறை கொள்வார்களே தவிர உங்கள் நல்வாழ்க்கையில் அவர்களுக்கு என்ன அக்கறை? உங்கள் விதியை பணத்திற்காக மந்திரம் ஓதும் புரோகிதத்தால் மாற்ற முடியுமா? ஒருக்காலும் முடியாது. " நாள் செய்வதை நல்லோர் செய்யார்" என்பது முதுமொழி எனவே உங்கள் திருமணங்களை நல்ல நாளில் நல்ல முகூர்த்த நேரத்தில் ஐந்து பேருடனோ பத்துப்பேருடனோ செய்துவிட்டு வாரவிடுமுறையான சனி, ஞாயிற் றுக்கிழமைகளில் விருந்துபசாரத்தைச் சிறப்பாக நடத்துங்கள். கெட்ட முகூர்த்தத்தில் தாலியைக் கட்டி அலைவதை விட முன்யோசனையுடன் நடவுங்கள்.

நல்ல நாட்கள் எவை?

ஞாயிறும் செவ்வாயும் குருட்டு நாட்கள், திங்களும் சனியும் ஒற்றைக்கண் நாள். புதன், வியாழன், வெள்ளி இம்மூன்றுமே இரண்டு கண் உடைய முழுநாட்கள்.

கள்ள வியாழன் கழுத்தறுக்கும் எனும் வசனம் நம்மக்களிடையே நிலவி வருகிறது. இதில் கூறப்படும் கள்ள வியாழன் என்பது சாதகத்தில் வியாழன் மாறும்போது ஆறாம் இடத்திற்கு வரும்போது அது மறைவுத்தானம். வியாழன் மறைவுத்தானமாகிய ஆறுக்கு வரும் போது கள்ள வியாழனாக மாறுகிறது. அது அந்த ஒரு வருடத்திற்கு கெடுதலைச் செய்யும். இதுதான் உண்மை, ஆனால் இதை அறியாமல் மக்கள் வியாழக்கிழமை கூடாது என்கிறார்கள். உண்மையில் வியாழன் மிகவும் நல்ல நாள்.

சனிக்கிழமை சனியனுடைய நாள் இது சுத்தமான நல்லெண்ணை வைத்து முழுகுவதற்குரிய நாளே. வேறு எந்த நல்ல காரியங்களுக்கும் பயன்படுத்துவதில்லை.

திங்கள் சந்திரனுக்குரிய நாள் வளர்ச்சியும், தேய்வுமாக இருக்கும். ஒற்றைக்கண் நாளாகும்.

ஞாயிறும், செவ்வாயும் குருட்டு நாட்கள் எனப்படுகிறது.

புதன் வியாழன் வெள்ளி இம் மூன்று நாட்களும் மிகச்சிறந்த நாட்கள். மங்கள கரமான நாட்கள். இந்த நாட்களில் வரும் நல்ல முகூர்த்தங்களில் செய்யப்படும் திருமணங்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்து நீடித்த பலனை அளிப்பனவாக உள்ளது.

நல்ல பிள்ளைகள் உருவாவது எப்படி?

அடிக்கடி ஏற்படும் காம உணர்வு மிருக உணர்வே. நல்ல நேரங்களை அறியாமல் உடலுறவில் ஈடுபடும் போது சனிக்கும் பிள்ளைகளும் நேரத்திற்கேற்றவாறு நல்லவர்களாகவும், தீயவர்களாகவும் வளர்கிறார்கள்.

நம்மைச்சுற்றி எண்ணற்ற ஆத்மாக்கள் உலாவுகின்றன. நல்லநேரங்களில் நல்ல ஆத்மாக்களும் தீய நேரங்களில் தீய ஆத்மாக்களும் உலாவுகின்றன. நல்ல நேரத்தில் உடலுறவு கொள்ளும் போது கருவாகும் பிள்ளையின் உடலில் நல்ல ஆத்மா புகுந்து நல்ல பிள்ளையாகவும் நல்ல நேரத்திலும் பிறக்கும். அதே போல் தீய நேரத்தில் உடலுறவு கொள்ளும் போது அசுர குணம் அதாவது தீய குணம் கொண்ட ஆத்மா அந்தக் கருவில் உட்புகுந்து பிறந்து தீய குணங்கள் கொண்ட பிள்ளையாக வளர்கிறது. எல்லா ஆத்மாக்களும் புனிதமானவை. ஆனால்அவை விடுதலை பெறும்வரை சம்ஸ்காரங்கள் எனப்படும் பழைய வினைகளோடும் மனதோடும் சேர்ந்த சூட்சும உடம்போடு உள்ள ஆத்மாக்கள். அவை உடல் எடுக்கும் போது சம்ஸ்காரங்களுக்கு தக்க குணங்களைப் பெறுகின்றன.

சாந்திமுகூர்த்தம் பார்த்துத்தான் புதிய மணமக்களை முதன்முதலில் சேரவிடுவார்கள் இதன் அர்த்தம் அந்த முகூர்த்தத்தில் உருவாக்கப்படும் குழந்தை நல்ல குழந்தையாகப் பிறக்கும். இந்த உண்மை அறியாமல் மக்கள் இயற்கையின் பிடியில் அகப்பட்டு குழந்தைகள் பிறந்ததும் எண்சோதிடத்தில் பிள்ளைகளுக்கு நல்ல காலம் வரவேண்டுமென அர்த்தம் இல்லாத பெயர்களை வைத்து மேலும் பிள்ளைகளின் விதியை தூரதிஸ்டமாக்குகிறார்கள்.

இதற்கு மேலாக பிள்ளைகள் நல்ல சூழ்நிலையில் வளர்க்கப்பட வேண்டும். தாய் தந்தையர்கள் வேற்று மொழி பழக்கவழக்கங்களை ஊட்டி வளர்த்தால் "காகம் அன்னத்தின் நடைநடக்கப்போய் தன்நடையும் கெட்ட மாதிரி" ஆங்கில மோகத்தால் ஆங்கிலேயர் ஆகிவிட முடியுமா?. தனது சொந்த கலாச்சார பண்பாடுகளை சிறந்த முறையில் அனுசரிக்காமல் பிற மொழிப் பழக்கங்களில் மோகங் கொண்டு வாழமுனைவது தன்னையே ஏமாற்றி அழியும் முட்டாள்தனம். இது எப்படி என்றால் ஒருவன் தனது நண்பன் வீட்டுக்கு போனானாம் அங்கே ஒரு அழகான சிலை ஒன்றைக் கண்டானாம் அந்தச்சிலை அந்த வீட்டுக்கு அழகைக் கொடுத்ததாம் அதைப்பார்த்துக் கற்பனை செய்தானாம்இந்தச் சிலை எனது வீட்டில் இருந்தால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று ஆனால் பாவம் அந்தச் சிலை தனது மூதாதையரிடமிருந்து திருடப்பட்டது என்பதை அவன் எப்படி அறிவான். இதே போலத்தான் மேல் நாட்டவர் பல பழக்கங்களை கீழ்நாட்டவரிடமிருந்து திருடி மெருகேற்றி வைத்திருக்கிறார்கள். ஆனால் நாமோ இதைப்பார்த்து மயங்குகிறோம்.

உங்கள் பிள்ளைகளை ஆங்கிலத்தில் பண்டிதர் ஆக்குங்கள், ஆனால் அவர்கள் எதிர்காலம் தந்தையர் இல்லாத பிள்ளைகளை உருவாக்கும் மிருக நாகரீகத்துக்குத் தள்ளிவிடாதீர்கள். சுயநலத்திற்காக இன உணர்விலிருந்து விடுபட்டு வாழ்க்கை வசதிகளைப் பெற்றாலும் மனிதநிலையை விட்டு விலங்கு நிலையில் ஏன் வாழவேண்டும்?

நல்ல கணவன், நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள் நல்ல குடும்பம் நல்ல இனமாக நாம் முன்னேற வேண்டும். இந்து மத கொள்கைகள் வெறும் வார்த்தைகள் அல்ல அத்தனையும் அர்த்தம் நிறைந்தவை. **தமிழ் பண்பாடு பட்டிக்காட்டுப் பழக்கமல்ல, உலகிலேயே உயர்ந்த தத்துவம்.** வெறும் விஞ்ஞான வளர்ச்சியின் வசதிகளும் வெளிக்கவர்ச்சியாலும் நல்ல குடும்பவாழ்வின் அமைதி குலைக்கப்பட்டு மனிதன் மிருகமாகிறான். நாகரீக அடிமைகளாக வாழும்மிருகநிலை மனிதனை, உயர்ந்த மனிதனாக வாழவைப்பது சிறந்த பண்பாடு.

உழைக்க வேண்டும் திரவியம் தேடவேண்டும் தேடும் திரவியத்தை உயர்ந்த நிலையில் பயன்படுத்தி அனுபவிக்க வேண்டும். உழைத்து வாழவேண்டும். உயர்ந்த மிருக மனிதர்களாக வாழ்வதை விட உயர்ந்த மனிதர்களாகவும் மனித தெய்வங்களாகவும் வாழவேண்டும்

நமது பண்பாடு எப்பவும் புதுமையானது, நிலையானது, உயர்வானது, அமைதியையும் ஆனந்தத்தையும் அளிப்பது.

அன்னை பராசக்தியின் பிரதிப்பிம்பங்களான தமிழ்த் தாய்க்குலமே. உங்கள் கைகளில் தான் எமது இனத்தின் எதிர் காலமே தங்கியுள்ளது. நீங்கள் எவ்வளவு அடக்கம் பெறுகிறீர்களோ அவ்வளவு தூரம் சக்தி வெளிப்படும். எவ்வளவு தூரம் அறிவை வளர்க்கிறீர்களோ அவ்வளவு தூரம் நமது இனம் சக்தி பெற்று உயர்வடையும். நீங்கள் எவ்வளவு தூரம் பண்பாட்டை பாதுகாக்கிறீர்களோ அவ்வளவு தூரம் எமது இனம் உலகிலே உன்னதமான நிலை அடையும்.

தமிழ்த் தந்தையரே உயர்வுக்கு அன்னையர் மட்டுமல்ல ஆண்களிடம் ஆண்மை அதிகரிக்க வேண்டும் துணிவும் ஆற்றலும் வெளிப்பட வேண்டும் இன உணர்வு உணர்வுகளிலே ஊற்றெடுக்க வேண்டும்.

ஆணோ பெண்ணோ ஒவ்வொருவரும் தம்மை உயர்ந்த உணர்வுகளால் உயர்த்தும் போது அந்த உணர்வுகளிலிருந்து வெளிப்படும் இயக்க அதிர்வுகள் நமது இனத்திற்குப்பெரு நன்மைகளை அளிக்கும். நல்ல உள்ளம் கொண்டவர்களே உண்மையை உள்ளபடி அறியும் சக்தி வாய்ந்தவர்களே துணிச்சலுடன் முன்வாருங்கள். உங்கள் வருங்காலச் சந்ததி வழமுடன் வாழ வழிகாட்டுங்கள். எல்லைகள் போட்டு எல்லைச் சண்டைகள் போட்டு என் குடும்பம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற நிலையில் வாழ்ந்த வீடுகளும் சொத்துக்களும் இன்று என்ன நிலையில்? நாளை வெளிநாடுகளில் என்ன பாதுகாப்பு? யாராவது எமக்கு உத்தரவாதம் கொடுத்தார்களா? சிந்தித்துப் பாருங்கள்.

இங்கு தமிழர் எனும் உணர்விலே ஒருவருக்கொருவர் ஒத்தாசையாக முன்னேற வேண்டும். நமது வாழ்க்கையின் உயர்வான தத்துவங்களை ஒலிவாங்கியில் சொல்லி முழங்குவது மட்டும் போதாது வாழ்ந்தும் காட்ட வேண்டும். நம்மிடையே நாவன்மை கொண்டவர்கள் அதிகம் பேர், அவர்கள் செயல்வன்மை கொண்டவர்களாக முன்னேறவேண்டும்.

ஒரு நல்ல குடும்பத்தைப் பார்த்து பல நல்ல குடும்பங்கள் உருவாகும், பல நல்ல குடும்பங்களால் நல்ல இனம் உருவாக்கப்படும்.

நமது புராதன சாஸ்த்திரக் கலைகள் என்றும் புதுமையானவை பண்பாடு கலாச்சாரம் என்றும் புதுமையானவை. இதை அறிந்து கடைப்படித்து வாழ்பவர் வாழ்வும் வருங்காலச் சந்ததிகளும் வழமுடன் வாழும். பண்பாடுள்ள குடும்ப வாழ்வே அதி உயர்ந்த நாகரீகம்.

யாழ் சண்முகத்தார் மைந்தன்

உங்கள் கேள்விகளுக்கு அடியாரின் பதில்கள்

1. கேள்வி :- சத் சங்கம் என்றால் என்ன? அதனால் என்ன நன்மைகள் ஏற்படுகிறது?
கு. அரசரத்தினம், கிப்பிளிங், எத்தோபிக்கோ
பதில்:- மகான்கள், உண்மையோடு நடப்பவர்கள், பக்தர்கள், ஞானிகள் இவர்களோடு ஒன்று கூடுவது, சேர்வது, தொடர்பு கொள்வதுதான் சத் சங்கம். பஜனை, கூட்டுப்பிரார்த்தனை, சமயப் பிரசங்கம், சமய நிகழ்ச்சிகள், சமய நுல்களைப் படித்தல், முதலியனவும் சத் சங்கத்தில் அடங்கும்.

சத் சங்கத்தை நாடுவதால் ஆன்மீக முன்னேற்றம் கிடைக்கிறது. பாவங்கள் நீங்கி புண்ணியம் கூடுகிறது. இறை உணர்வு அதிகரிக்கும். மனதில் அமைதி கிட்டுகிறது. ஞான உணர்வு வளரும். உலகிலே பெரிய மகான்கள் பெரும் பாலும் சத்சங்கங்களின் தொடர்பினால்தான் மகான்களாக உயர்ந்தார்கள்.

2.கேள்வி:- நான் வாரம் ஒருமுறை கோவிலுக்குச் சென்று வருகிறேன். அதனால் எனக்கு மனதில் அமைதி கிடைக்கிறது. ஆனால் எனது சினேகிதி கூறுகிறார் கோவிலுக்கு செல்வதைவிட பஜனைக்கு போவது தான் நல்லது என்று கூறி என்னை பஜனைக்கு வரும்படி வற்புறுத்துகிறார். எனக்கோ கோவில்தான் பஜனையைவிடச் சிறந்தது எனத் தோன்றுகிறது. எது சிறந்தது என உங்கள் அபிப்பிராயத்தை அறிய விரும்புகிறேன்.
ச. ராகினி ஸ்காபரோ
பதில்:- "ஆலயம் தொழுவது சாலமும் நன்று" என்பதை நீங்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். ஒருமொழிக்கு எழுத்துக்கள் எவ்வளவு முக்கியமோ, அதே போன்று சமயத்துக்கு ஆலயங்கள் மிக முக்கியம். ஆனால் இன்று ஆலயங்கள் ஆரம்பப் படிகளாகவே காணப்படுகின்றது. ஆலயங்களுக்குச் செல்லும் மக்கள் மதத் தத்துவங்களை, மதத்தின் உண்மைகளை அறிந்து பயன் அடையும் வாய்ப்புக் கிடைக்க வேண்டும். மந்திரங்கள் புரியாத வரைக்கும் மக்களின் ஆன்மீக அறிவு உயராது. எனவே மந்திரங்கள் மக்களுக்கு புரியும்படி கூறாத வரைக்கும் நன்மை கிடைக்காது. ஆனாலும் ஆன்மீகத்தில் ஆரம்பநிலையில் இருக்கும் மக்களுக்கு ஆலயம் அவசியம்.அப்படியானவர்களை ஊக்குவிக்க வேண்டும். அறியாத பாமர மக்களுக்கு கல்லிலே கடவுள் இருப்பதை உணரவைத்து படிப்படியாக மேல் நிலைக்கு உயர்த்த வேண்டும்.

ஆனால் ஆன்மீகத்தில் முன்னேற விரும்பும் உயர்ந்தவர்கள் தனது உடம்பே ஆலயம் என்பதை உணர்ந்து, தன் உள்ளே இறைவன் இருப்பதை உணர வேண்டும். உள்ளே உள்ள இறைவனை வருந்தி அழைக்கும் போது அவனது தொடர்பு நேரடியாகவே நமக்கு கிட்டுகிறது. அவனை நேடரடியாக நாம் தொடர்பு கொள்வதற்கு அவனது நாமத்தை திரும்பத் திரும்ப உச்சரிக்க வேண்டும். இந்தச் சாதனைதான் நாம பஜனை, நாம பஜனை இக்கலியுகத்திலே தவங்களைவிடச் சிறந்தது.

நாம ஜெபம் ஒன்றே எல்லா நலன்களையும் தரவல்லது. நாம பஜனை கோவில்களிலோ, வீடுகளிலோ, பொது மண்டபங்களிலோ, தெருக் களிலோ, எங்கு நடைபெற்றாலும் அதில் கலந்து கொள்வதால் இறைவனின் நேரடித் தொடர்பு கிடைக்கிறது. ஒருவரால் சொல்லப்படும் மந் திரத்தைவிட பலர் சேர்ந்து இறைவனின் நாமத்தை ஒலிக்கும் போது அதற்கு வலிமை அதிகம். அப்படி நாம பஜனை செய்கின்ற இடத்தில் நின்றாலே புனித அலை நம்மீது ஊடுருவும். பஜனையால் பெற ப்படும் நன்மைகளும் சிறப்புக்களும் அளப்பரியது. கைதட்டி பஜனை பாடும் போது பாவங்கள் பறந் தோடி விடும் என பகவான் ஸ்ரீராமகிருஷ்ண பரம கம்சர் அடிக்கடி பக்தர்களுக்கு கூறுவார்.

3. கேள்வி :- நான் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவன், சிலர் எனது வீட்டுக்கு வந்து ஜெகோவாதான் கடவுள், அவரை மட்டும்தான் நம்பும் படியும் ஜெகோவாவின் சாட்சியம்தான் உண்மையானது எனவும், தங்களோடு சேருமாறும் கேட்கிறார்கள். வேறு நண்பர்கள் பெந்தேகொஸ்தே சபைதான் உண்மையானது எனக் கூறி தம்மோடு சேருமாறு அழைக்கிறார்கள். உண்மையானது எது என்று கூறமுடியுமா?
ஜீ. அன்ரனி, ரொரன்ரோ.

யானையைப் பார்த்த குருடர்கள் தாம் தொட்டுப் பார்த்த பாகங்களை வைத்து, காலைத் தொட்டவன் யானை உரலைப்போல் என்றும், வயிற்றைத் தொட்டவன் பீப்பாவைப்போல் என்றும், காதைத் தொட்டவன் சுளகைப்போல் என்றும் தாங்கள் எதைத் தொட்டுப் பார்த்தார்களோ அதைத்

தான் யானை என்றார்கள். இப்போது மதம் போதிப்பவர்கள் என்ன யேசுநாதரா, அல்லது அந்தோனியாரா, அல்லது பிரான்ஸிஸ் அசிசியா? ஒரு முட்டாள் சொல்லுகின்ற பைபிள் வாக்கியம் மற்றவனைத் திருத்திவிட முடியுமா? மதம் போதிப்பவனிடம் புனிதம் வேண்டும்! புனிதம் உள்ளவர்கள் சொல்லும் ஒவ்வொரு வாக்கியமும் உயிரோட்டமாக மக்கள் மனதிலே ஊடுருவி மக்களை உயரவைக்கும். அறியாமையிலிருந்து மக்களை விடுவிப்பது தான் உண்மையான மதம். உள்ளத்திலே தூய்மை இல்லாத கபட வேடதாரிகள் போதிப்பதெல்லாம் மதமா? அது மதம் எனும் பெயரிலே நடைபெறும் கறுப்புச்சந்தை வியாபாரம்.

இன்று 200 க்கு மேற்பட்ட பிரிவுகள் கிறிஸ்துவை ஆதாரமாக வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவர்கள் எல்லாம் புதிய, பழைய ஏற்பாட்டை ஆதாரமாக வைத்தே இயங்குகின்றார்கள். இதில் வேடிக்கை என்ன வென்றால் இவர்கள் எல்லேரும் கிறிஸ்துவையும், பைபிளையும் ஆதாரமாக வைத்துக்கொண்டு மற்றைய பிரிவுகளை விட எமது பிரிவுதான் சிறந்தது என வாதாடுவது தான் வேடிக்கை. மதம் எதற்காக, மதம் என்றால் என்ன? என்பதை முளுமையாகப் புரிந்து கொள்ளாவிட்டால் என்னுடையது சிறந்தது, மற்றவை ஒன்றும் உண்மை இல்லை எனும் முட்டாள்தனத்திற்கு ஆளாகவேண்டும். புத்தரின் பேரைச்சொல்லி ஒருவன் காவி உடுத்தால் அவன் புத்தனாக மாட்டான். புத்தரைப்போல் வாழவேண்டும், புத்தரின் போதனைகளைப் பின்பற்ற வேண்டும், ஒரு உயிரோ மனிதனோ கொல்லப்படுவதற்கு ஒரு பௌத்தன் காரணமானால் அவன் பௌத்தன் அல்ல.

சலுகைகளைக் காட்டி, அதிகாரத்தைக் காட்டி மதம் மாற்றுவதை, பிற மதத்தை அழிக்க நினைப்பதை உண்மையான மதவாதிகள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள். உலகிலே எத்தனையோ பெரிய சாம்ராட்சியங்கள், பெரிய வல்லரசுகள் தோன்றி இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன. ஒருகாலத்தில் உலகிலேயே அதிக சனத்தொகை கொண்ட மதமாக புத்தமதம் விளங்கியது, ஏன் இந்தியாவையே முளுவதுமாக புத்தம் தன்வசம் வைத்திருந்தது. ஆனால் இன்று இருந்த இடம் தெரியாமல் புத்த மதம் இந்தியாவை விட்டு மறைந்துவிட்டது.

இன்று உலக நாடுகள் சுதந்திரம் பெற்று எல்லா இனங்களும் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழும் சூழ் நிலை உருவாகியுள்ள இக்காலத்தில் உண்மை மதமான இந்து மதம் பரப்பப்படாமலே தானாகவே உலகம் முளுவதும் வளர்ந்து வருகிறது.

பிள்ளையார் படத்தைக்காட்டி இது யானை, யானை எப்படிக் கடவுளாகும்? என்று சொல்லி அப்பாவி இந்துக்களை மதம் மாற்றிய முட்டா ள்கள், இன்று நடப்பதை, உலகம் முளுவதிலும் உள்ள வினாயகர் சிலைகளுக்கு பால் கொடுத்து வினாயகர் அருந்தும் காட்சியை ரி. வி யில் கூடப் பார்த்திருப்பார்கள். இந்த அற்புதம் எப்பவும் நடந்ததில்லை, வினாயகர் முளுமுதற் கடவுள் என்பதை இந்த விஞ்ஞான உலகிற்கு மக்களை நம்பவைப்பதற்காகவே இப்படியான அற்புதத்தை செய்கிறாரோ யார்தான் அறிவர் அவன் செயலை.

யேசுநாதர் என்ன சொன்னார்? அவரின் போதனைகளிலே முக்கிய சாரம் துறவு, அன்பு, சரணாகதி இம்மூன்றும்தான். துன்பத்துக்குக் காரணமான ஆசைகளைத் துறந்துவிடு, பிறரை நேசி, இறைவனை சரணடை என்பதுதான். பைபிளிலே யேசுநாதரின் வாக்கியங்களை மீண்டும் மீண்டும் படியுங்கள், நிச்சயமாக நீங்கள் அமைதி, ஆனந்தம், தெய்வீகம் பெறுவீர்கள். பிறருடைய மூளைச்சலவைக்கு (Brain wash) ஆளாகா தீர்கள். நீங்கள் கத்தோலிக்கராகப் பிறந்ததனால் கத்தோலிக்கராகவே வாழுங்கள்.

சுயபுத்தியைப் பாவிக்கமுடியாத சில இந்து மக்கள் மூளைச்சலவைக்குப் பலியாகி மதம் மாறியுள்ளார்கள். உண்மையில் வேதாந்தம் தான் மதங்களின் சாராம்சம். எல்லா மதங்களிலும் புனைக்கப்பட்ட தேவையற்ற பகுதிகளை எடுத்துவிட்டால் மிஞ்சுவது வேதாந்தம் தான். எது உண்மையோ அது வேதாந்தம், அது எல்லா மதத்துக்கும் பொதுவானதாகும. உண்மைகளை யாரும் தனது என்று உரிமை கொண்டாட முடியாது. உண்மை என்றாவது வெளிவந்து தான் தீரும். மதம் எதற்காக? மக்களின் நல் வாழ்க்கைக்காகவே! மதம் என்றால் என்ன, அதை ஏன் கடைப்பிடிக்க வேண்டும், மதத்தைப் போதிப்பவர்கள் எப்படி வாழவேண்டும், என்பதை அறியாதவர்களும், வேடதாரிகளும் மதத்தைப் போதிக்க முனைவதனால் தான் மக்களிடம் மத அறிவு குறைந்து காணப்படுகிறது. **மதம் மாற்ற அலைந்து திரிவது புனிதசேவையல்ல, வெறும் ஏவலால் அலையும் முட்டாள்தனமே!**

ஆரோக்கிய வாழ்வு

உலகிலே சர்வ வல்லமை கொண்ட தலைவர்களாகட்டும் பெரும் பணக்காரர்களாகட்டும், ஏழைகள் ஆகட்டும், எந்த ரகத்தைச் சார்ந்த மனிதர்களுக்கும் இந்த உலகிலே எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது அவரவரின் உடலே.

நமது உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் மகிழ்வுடன் வாழமுடியும். உடலை சரியான முறையில் பராமரிக்கத் தெரியாதுவிட்டால் ஆரோக்கியம் கெட்டுவிடும், பலவித வியாதிகள் நோய்களுக்கு ஆளாகவேண்டிவரும். நமது கண்முன்னே எத்தனையோபேர் நோயாளிகளாகவும், பலவீனர்களாகவும் வாழுகின்றார்கள் பலர் அளவுக்கதிகமாக மருந்து, மாத்திரைகளை உட்கொள்வதால் நரம்புகளும் உடலின் நுட்பமான கலங்களும் பலவீனப்பட்டு நரம்புகளும் தளர்ச்சியடைந்து கெட்டுவிடுவதால் நாளடைவில் இளமையில் முதுமையும், இளமை மரணமும் ஏற்படுகிறது. நாம் ஒவ்வெருவரும் நமது உடலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நோய்கள் வருவதற்குரிய காரணங்களைத் தெரிந்து கொண்டு அதற்குரிய வழிகளையும் தெரிந்து கொண்டு, இருக்கும் நோய்களை இல்லாமல் செய்து, நோயற்ற சுகவாழ்வு வாழ வேண்டும்.

இரத்தக் கொதிப்பு

டாக்டர் எஸ். ஜனககுமாரி

நம் ஒவ்வொருவருக்கும் ஓரளவு இயற்கையான ரத்த அமுக்கம் இருக்கும். ரத்த அமுக்கம் என்றால் ரத்தக் குழாய்களில் உள்ள ரத்தம், குழாய்களின் சுவர்களில் அமுக்கும் அமுக்கமாகும். இந்த அமுக்கம் இயற்கையான அளவினின்றும் மாறுபடுவது,ரத்தக் குழாய்களின் நிலையையும் அவைகளில் உள்ள ரத்தத்தின் அளவையும் இருதயத் துடிப்பின் பலத்தையும் பொறுத்தது.

நமது ரத்தக் குழாய்களின் சுவர்கள் இரண்டு வகையான நார்களால் ஆனவை. ஒன்று மீள்சக்தி நார்கள், மற்றது தசைநார்கள். இருதயம் சுருங்கி ரத்தத்தை அழுத்தித் தண்ணீர்ப்பம் போல அதைக் குழாய்க்ககுள் செலுத்து கையில் மீள்சக்தி நார்கள் நீள்கின்றன. இருதயத் துடிப்பு வேகம் அடங்கினதும்,அவை சுருங்குகின்றன. இப்படி மாறி மாறி நீண்டும் சுருங்கியும் அவை ரத்தத்தை ஓயாது அமுக்கிக் கொண்டே இருக்கின்றன. இதயத்தின் ஒரு துடிப்புக்கும் அடுத்த துடிப்புக்கும் இடையில் இந்த அழுத்தத்தின் வலு படிப்படியாகக் குறையும். ஆனால் அடுத்த துடிப்பு துவங்கியவுடன், அது மறுபடியும் அதிகப்படும்.

இருதயத் துடிப்புச் சமயத்திலே ஏற்படும் அழுத்தம் குலைச்சுருக்க அழுத்தம்(Systolic Pressure) என்றும், அது விரியும் போது உள்ளது குலைவிரிவு அழுத்தம் (Diastolic Pressure) என்றும் பெயர் பெறும். ரத்த அழுத்தம் பார்க்கும் கருவியை நீங்கள் பார்த்திருப்பீர்கள். டாக்டர் அதை உங்கள் கையிலே சுற்றிவைத்துக் காற்று அடிப்பார். பலூனிலே காற்று ஏற ஏற அது பருத்து புய நாடியைப் பலமாக அழுத்தி அதன் வழியாக ரத்தம் ஓடமுடியாதவாறு செய்துவிடும்.

பிறகு டாக்டர் காற்றைச் சிறிது சிறிதாக வெளியே விட்டுக் குலைச் சோதினியால் கவனித்துக் கேட்பார். திடீரென்று ரத்தம் பாய்ந்துவரும் ஓசை கேட்கும். அப்போது பாதரசம் காட்டும் எண்ணை டாக்டர் குறித்துக் கொள்வார். அது சாதாரணமாக 110 க்கும் 150க்கும் இடையிலே இருக்கும். இது குலைச்சுருக்க அழுத்தம்..

டாக்டர் தொடர்ந்து காற்றை விடவிட சிறிது நேரத்தில் ரத்தம் ஓடுகிற சத்தம் கேட்காது. அப்போது பாதரச மட்டம் அநேகமாக 80க்கும் 95க்கும் இடையில் இறங்கியிருக்கும். இது குலைவிரிவு அழுத்தமாகும். உங்களுக்கு முதலிலே கூறிய அழுத்தம் 120 என்றும் பின்னால் சொன்னது 80 என்றும் வைத்துக் கொள்வோம். டாக்டர் அதை 120-80 என்றும் எழுவார். அதாவது உங்கள் இருதயம் துடிக்கும் போது பாதரசத்தை 120மில்லி மீட்டர் (ஏறக்குறைய 4.5அங்குலம்) உயர்த்தக்கூடிய அளவு அழுத்தம் ஏற்படுகிறது. துடிப்புகளுக்கு இடையிலே பாதரசத்தை

80 மில்லிமீட்டருக்குக் கீழே இறங்கவிடாத அழுத்தம் இருக்கிறது.

சாதாரணமாகச் சுருக்க அழுத்தம் 110 முதல் 150வரையிலும், விரிவு அழுத்தம் 80 முதல் 95 வரையும் இருக்கும். சிலருக்கு அவை இந்த எல்லைகளைத் தாண்டி இருந்தபோதிலும் அவர்களுடைய ஆரோக்கிய நிலை குலையாமலிருக்கலாம். பொதுவாக, ரத்த அழுத்தம் குறைவாக இருத்தல் நல்லது. ஏன் தெரியுமா? அது குறைவாயிருந்தால், இருதய நோயாகிலும் ரத்தக் குழாய் நோய்களாகிலும் அவ்வளவாக உண்டாகாது. யாருக்கேனும் சுருக்க அழுத்தம் தொடர்ச்சியாக 150 க்கு மேலே இருந்தால் அவருக்கு ரத்தக் கொதிப்பு என்ற அழுத்த நோய் விருத்தியாகிக் கொண்டிருப்பதை அது குறிக்கும். குலை விரிவு அழுத்தம் 95 க்கு மேலே போவது கெடுதல். அப்போது இருதயம் தன் துடிப்புகளுக்கு இடையில் தக்கவாறு ஓய்ந்திருக்க முடியாது. மிகவும் வலிந்து வேலை செய்ய வேண்டியதாக இருக்கும்.

ரத்தக்கொதிப்பு ஏன்?

அதிக ரத்த அமுக்கத்தின் காரணங்களைத் திட்டமாகச் சொல்லமுடியாது. ஆனால், பரம்பரை ஒரு முக்கியமான காரணம் என்று இபாபோது கண்டுபிடித்துள்ளார்கள். அதாவது அது பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்குப் பிறவித் தொடர்பாய் வரக்கூடியது. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் கடுமையான மனோ உழைப்புச் செய்வதும் ரத்த அமுக்கத்தை அதிகப்படுத்தும். இறைச்சி, முட்டை போன்ற புரோட்டீன் பொருட்களை அதிகமாக உண்ணுதலும் மிளகு, கராம்பு, லவங்கப்பட்டை முதலிய வாசனைச் சரக்குகளை அதிகமாக உபயோகித்தலும் ஓர் அளவு காரணமாகலாம். கவலை, மித உணவு, தேயிலை, புகையிலை முதலியவைகளும் ரத்தக் கொதிப்பை உண்டாக்கக்கூடும். ஆனால், எந்த அளவில் என்று திட்டமாகச் சொல்லமுடியாது ரத்தக்கொதிப்பின் காரணங்கள் எவைகளாக இருந்தாலும் சரி, அவை நீண்டகாலமாக உள்ளூர இருந்து கொஞ்சங் கொஞ்சமாய்த்தான் ரத்த அமுக்கத்தை அதிகப்படுத்தும் என்று தெரிகிறது. ஆகையால் இந்த நோய் ஏற்படாமல் தடுக்க விரும்புவோர் இளம்பிராயத்திலிருந்தே அதற்கு அணை போடடுக் கொள்ளவேண்டும்.

நம்முடைய ரத்தஅழுத்தம் எப்பொழுதும் ஒரே நிலையில் இருப்பதில்லை அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளால் அது அடிக்கடி ஏறவும், இறங்கவும் செய்யும். நாம் படுத்திருக்கும் போது இருப்பதைவிட எழுந்து நடமாடுகையில் அதிகமாக இருக்கலாம். அச்சம் துயரம் முதலிய உணர்ச்சிகளால் அது 30 முதல் 60 எண் வரை ஏறலாமம். அற்பக் காரியங்களுக்கும் அது ஏறி இறங்கும். ஆனால் இதனால் கெடுதல் இல்லை.

இருதயம் நின்றுவிடும்

ரத்தக் கொதிப்பின் காரணங்களும் அதன் பயனும் நன்கு தெரிந்துள்ளன. இருதயம் அதிக அமுக்கத்திற்கு உள்ளாகித் தொழில் செய்கிறபோது அந்த அளவுக்குத் தக்கபடி விரிந்து கொடுக்கவில்லை என்றால் அது நின்றுவிடும்.

ரத்தக்குழாய்கள் வெடிக்கும்

ரத்தக் கொதிப்பு, ரத்தக் குழாய்களைத் தாக்கும். நமது, ரத்தக் குழாய்கள் ரப்பரைப்போல் நெகிழ்ந்துழலக்கூடியவை, ஆனால், நமக்கு வயதேற ஏற அவை சழதாரணமாக இந்த நெகிழ்ச்சித் தன்மையை இழந்து சுலபமாக முறிந்து போகும் தன்மையை அடைகின்றன. ரத்தக்குழாய்களுக்கு இந்த நெகிழ்ச்சித் தன்மை மஇருக்கும் வரையில் ரத்தக் கொதிப்பினால்கூட அவ்வளவாகக் கெடுதி ஏற்படாது. ஆனால், அந்தத் தன்மை கெட்டபிறகு ரத்தக் கொதிப்பினால் ஏற்படும் அமுக்கத்தைத் தாங்கமுடியாமல் அவை வெடித்தாலும் வெடித்துவிடலாம்.

நாற்பது அல்லது நாற்பத்தைந்து வயதிலே ரத்த அமுக்கம் அதிகமாக இருக்கிறதென்று கண்டவுடன் அதற்குப் பரிகாரத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். ஐம்பது வயதிற்கு மேலே காணும் ரத்தக் கொதிப்பு நோயை நிவர்த்ததிக்கலாம என்றாலும் அதிக முயற்சி தேவை. நோயை மேலும் விருத்தியாகாமல் தடுக்கவும் ஆயுளைக் கூட்டிக்கொள்ளவும் கூடும்.

ரத்தக்கொதிப்பு உள்ளவர்கள்

ரத்தக் கொதிப்பு நோயினால் அவதிப்படுகிறவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கப் பழக வேண்டும். தங்களுடைய அசௌகரியங்களையும் கஷ்டங்களையும் மறந்துவிட வேண்டும். மனக் கவலை, கலக்கம், பயம், பதட்டம் ஆகிய உணர்ச்சிகளுக்கு ஆளாகக் கூடாது. சந்தோஷம் புறம்பான விடயங்களைப் பொறுத்ததல்ல. அது உள்ளிருந்து வருவது என்பதை மறந்துவிடக்கூடாது. போதிய அளவு ஓய்வாக இளைப்பாற வேண்டும். அதிக நேரம் தூங்கவேண்டும்.

ஒழுங்காக வாழவேண்டும், சாப்பாட்டுக்கும் தூக்கத்திற்கும் மலக்கழிவுக்கும் குறித்

த காலங்கள் இருக்கவேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் கவனித்துக் கொள்ளவேண்டும். தினம் மலம் ஒரு தடவையாகிலும் கழிய வேண்டும்., இரண்டு தடவை போனாலும் நல்லதே. ஆனால் வயிற்றோட்டம் இருக்கக் கூடாது. நிறயைத் தண்ணீர் குடிப்பதனாலும் பொருத்தமான உணவினாலும் பழங்களைச் சேர்த்துக்கொள்வதனாலும் மலம் ஒழுங்காகக் கழிந்தால் மிகவும் நல்லது. ரத்தக் கொதிப்பினால் அவதிப்படுகிறவர்கள் காபி, டீ, கொக்கோ கலந்த பானங்களையும் சொக்ளேற் போன்றவற்றையும் நீக்கவேண்டும். பசுப் பாலில் தேன் விட்டுப் பருகலாம்.

ரத்தக் கொதிப்பு உள்ளவர்களுக்குப் பத்துக் கட்டளைகள்

ரத்தக் கொதிப்பு நோயினால் அவதிப்படுகிறவர்கள் அனுசரிக்கவேண்டிய விதிகள்:

1. ரத்தக் கொதிப்பு ஒரு தனிப்பட்ட நோயல்ல, அது சுகவீனத்தின் அடிப்படையான ஓர் அறிகுறியே. எனவே, நமக்கு ரத்தக் கொதிப்பு நோய் வந்துவிட்டதே என்று ஏங்க வேண்டாம்.

2. சுவாசம் சீராகவேண்டும், தீர்க்கமாக மூச்சு விட்டுப் பழகவேண்டும். ரத்தக் கொதிப்பு ரத்தக் குழாய்களையும் இருதயத்கையும் பொறுத்தது. ஆகவே, அது உடலில் ஓடும் ரத்தத்தைப் பொறுத்திருக்கிறது.

3. தினமும் தியானம் செய்து பழகவேண்டும்.

4. அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். அதிகமான உடல் அதிர்ச்சியும் மனக்கிளர்ச்சியும் ரத்தக் கொதிப்பை அதிகம் ஆக்கும். மனவேலைகளில் ஈடுபடும்பொழுது இரண்டு மணிக்கு ஒரு தடவை பத்து நிமிஷமாவது ஓய்வு எடுத்துக் கொள்ளவேணடும். வேலை செய்யும் அறையிலாவது சற்று நடமாடினால் போதும். உடலுழைப்பின்போது உணவு வேளைக்குப் பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். இரவு குறைந்தது எட்டு மணி நேரம் நன்றாகத் தூங்க வேண்டும்.

5. தினமும் மலம் கழியவேண்டும். மலச்சிக்கல் ஏற்பட்டு விட்டால் ரத்த ஓட்டம் மெதுவாகிக் கொதிப்பு ஏற்படக் காரணமாகிறது. இரண்டு தடவையாவது தினமும் மலம் கழியவேண்டும். ஆறு தடவை சிறுநீர் கழியவேண்டும். நன்றாக வியர்வையும் வரவேண்டும்.

6. உடலிலே காரச்சத்து (Alkaline) அதிகம் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். இது இழையங்களைத் தூய்மைப்படுத்தி. 'இளஞ்செல்'களை வளர்த்துப் புத்துயிர் கொடுக்கிறது. பச்சைக் காய்கறிகள், பச்சடிகள், பழங்கள், பால் இவையெல்லாம் நல்ல காரச்சத்துள்ள உணவுகள்.

7. இறைச்சி அல்லாத உணவத்தான் சாப்பிட வேண்டும். ரத்தக் கொதிப்பு ஏற்படுவதற்கு ஒரு காரணம் 'கொலஸ்ரோல்' என்ற வழவழப்பான ஒரு பொருள் சேர்ந்து ரத்த நாடிகளைத் தடிக்கச் செய்வதே. இந்த 'கொலஸ்ரோல' இறைச்சியில் அதிகம் உண்டு. ஆகவே, இறைச்சிக்குப் பதிலாக பால், பாலாடை, அவரை, பட்டாணி, பீன்ஸ், கொட்டைகள், முழுத் தானியங்கள் ஆகியவைகளை உபயோகிக்க வேண்டும்.

8. ரத்தக் கொதிப்பை வெள்ளைப்பூண்டு (உள்ளி) குறைக்கிறது. அரைப் பூண்டைச் சிறிது சிறிதாக நறுக்கி ஆழாக்குப் பசுவின் பாலிலே காய்ச்சி இரவிலே சாப்பிட்டால் நல்ல மருந்தாக வேலை செய்யும். ரத்தக்கொதிப்பும் தணியும், பலமும் உண்டாகும்.

9. மனக்கிளர்ச்சி கூடாது. கோபம், பொறாமை, பகை, கவலை இவை எல்லாம் மூளைக் கோளங்களைப் பாதிக்கும். ரத்தக்கொதிப்பை அதிகமாக்கும்.எப்பொழுதும் மன அமைதிபெற்றுச் சந்தோஷமாக இருங்கள்.

10. சாத்வீகமாக வாழுங்கள், அதிக ரத்தக் கொதிப்பு என்றால் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் மிதமாயிருக்க வேண்டும். தாம்பத்ய உடலுறவு விஷயமாகவும் மிதமாகத்தானே இருக்கவேண்டும்.

(59 ம் பக்கத் தொடர்ச்சி)

பெறுபவை.

மனித இயல்புகள் ஆன்மாவின் தன்மை, பரப்பிரம்மத்தின் தன்மை, ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள தொடர்பு, அண்டத்தின் சிருஷ்டி, பிரளயம் போன்ற விடயங்களைப் பற்றிய நெறிமுறைகள், காலாதி காலமும் மாற்றமடையாத சாசுவதமான சுருதிகள், இதுதான் சனாதன தர்மம்.

சாசுவதமான இந்தத் தர்மத்துக்குப் பெயர் இந்துமதம்.

பாரதா, எப்பொழுதெல்லாம் தர்மம் அழிந்துபோய் அதர்மம் மேலோங்கு கிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன்.

பகவத் கீதை (அத் 4 : 7)

துளசியே — பாவ நிவாரணி / ரோக நிவாரணி

சித்தவைத்தியக் கலாநிதி, சைவப்புலவர். க. சிற்றம்பலம்,(கொட்டடி)

இறைவனின் சிருஸ்டியில் உயிர்ச்சக்தியும், அருட்சக்தியும் தரும் மூலிகைகள் மண்ணுலகில் ஏராளம் ஏராளம். இதனைச் சித்தர்களும், முனிவர்களும், தெரிந்துவைத்துள்ளார்கள், சொல்லியும் வைத்துள்ளார்கள். இவற்றுள் தெய்வீக சக்தியும், சேமநலவிருத்தியும், தரக்கூடிய மூலிகைகளுள் முதன்மையானது துளசியே!

கீதையில் கண்ணன் " எவனொருவன் அன்புடனும், பக்தியுடனும், ஒரு இலையோ, பூவோ, பழமோ, நீரோ அளித்தால் அதை நான் ஏற்கிறேன்." என்கின்றார். (பகவத் கீதை 9 - 26).பத்ரம் என்பது துளசியாகும் அத்துடன் கிருஷ்ணனின் பாதகமலங்கள் துளசியின் இலையினாலேயே மூடப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

பாவங்களைப் போக்கி, சகல பாக்கியங்களையும் நல்கி, ஆன்மீக ஈடேற்றமாகிய மோட்சத்தையும் தருவது துளசி என்பதைத் தெய்வீக உலகம் ஒப்புக்கொள்வதெனலாம். துளசி வைணவ சமயத்தின் பக்திமயமான செயற்பாடுகளின் சாரமாகும். இதன் இலைகள், மலர்கள், வேர்கள், பட்டைகள், கிளைகள் மற்றும், அதன் நிழல், வேரிலுள்ள மண் முதலியனவும் ஆன்மீகமானதாகக் கருதப்படுகின்றது.

துளசிச் செடியின் அடியிலுள்ள மண்ணை உடலில் பூசி, பகவானை வழிபட்டால், பல நூறு நாட்களில் வழிபட்ட பலனைக் கொடுக்குமாம். துளசி மஞ்சரியை கிருஷ்ண பரமாத்மாவுக்கு நிவேதனம் செய்தால், சகல இன மலர்களாலும் பூசிக்கப்பட்ட பலனைப் பெற்று, அவரின் வதிவிடமான கோலோக பிருந்தாவனத்தை அடைய வழியாகுமாம்.

துளசி இலை கொண்டு கண்ணனை அர்ச்சித்து வணங்குபவர்கள், சகல நற்காரியங்கள், தவங்கள், தானங்கள் செய்த பலனுடன், வேதத்தினது சாரத்தையும் உணர்ந்தவராவார்.

கலியுகத்தில் எவர் துளசிச் செடியை வந்தனை செய்தும், சிந்தனை செய்தும், பூசனை செய்தும் வணங்குகின்றாரோ, அவரின் சகல பாவங்களும் சுட்டெரிக்கப்பட்டு, நற்பயன் கிட்டுமாம். துளசியில் வெண் துளசியை ராமதுளசி என்றும், கருந்துளசியைக் கிருஸ்ணதுளசி என்றும், பக்தர்கள் பகருவார்கள். ஆனால் அவற்றின் பயன்பாடும், தெய்வீக செயற்பாடும், ஒத்த தன்மையனவேயாகும்.

கிருஸ்ண பக்தர்களின் வீடுகளில், தனியே துளசிமாடம் அமைத்து துளசிச் செடிகளை வளர்த்து, சுத்தியாகவும், பக்தியாகவும், வணங்குவதைக் காணலாம். துளசியை ஏகாதசி, துவாதசி, தவிர்ந்த நாட்களில், அதிகாலையில் எழுந்து, பக்திசிரத்தையுடன் நகத்தால் கிள்ளாது, வெட்டி எடுத்து நீரில் ஊறவிட்டு, ஏகாதசி விரதம் பிடிப்போர், அந்தத் தீர்த்தத்தை அருந்திப் பாராயணம் செய்தால், அவர்கள் பாவம் நீங்கி, நற்பலனைப் பெற்று, தெய்வீக கடாட்சமும், முத்தியும் பெறுவார்களெனச் சொல்லக்கேட்கிறோம்.

துளசிப்பூசை: ஒரு சாடியில் துளசிச் செடியை வளர்த்து, பிரம்மமுகூர்த்த வேளையில், துயில் எழுந்து, நீராடி, பூசை செய்யும் இடத்தை சுத்திசெய்து, துளசிச் சாடியை நடுவே வைத்து, தூப தீபம் காட்டி, மலர்களால் :

" பிருந்தாயை துளசிதேவ்யை
ப்ரியாயை கேஷவஸ்யச
கிருஸ்ண பத்திப் பிரதேச தேவி
சத்யவத்யை நமோ நமஹ" என மூன்று

முறை ஓதி, நிலத்தில் விழுந்து அஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுந்து, தூப தீப ஆராதனைகள் செய்து, மலர்களைத் துளசிச் செடிக்குத் தூவி அர்ச்சனை செய்து, சாடியில் போடவும், பின்னர் பஞ்சபாத்திரத்தில் இருந்து நீர் எடுத்து, துளசிச் செடிக்கு மூன்று முறை நீர் வார்த்து, பின்னர் துளசிச் செடியின் அடியிலுள்ள மண்ணை எடுத்து நெற்றியில் திலகமிடவும். மீண்டும் கூறிய "பிருந்தாயை துளசி தேவ்யை..." என்ற மந்திரத்தை மூன்று முறை சொல்லி வணங்கிப் பூசை முடிக்கவும். ஸ்ரீமதி துளசியை வலம் வரும் ஒவ்வொரு அடியிலும், பிரம்மஹத்தி தோஷம் உட்பட சகல பாவங்களும் அழிந்து ஒழிந்து, நற்பலன்கள் பெற்று மோட்சகதியுண்டாம். இப்பூசை காலை, மாலை இருவேளையிலும் செய்யலாம்.

அடுத்த இதழில் துளசியின் சித்த மருத்துவப் பயன்களைப் பற்றிய ஆய்வு வெளிவரும்

சிவலிங்க வழிபாடு

செ. வேலாயுதபிள்ளை B.A.(Hons)
(இளைப்பாறிய பிரதம கல்வி அதிகாரி
பரீட்சை உதவி ஆணையாளர்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)


அவ்வுருவினையே இக்காலத்திற் 'சிவலிங்கம்' என வழங்கி வருகின்றனர். இந்நாளில்போல அந்நாளில் மக்களுருவை யொப்பச் செய்த திருவுருவங்கள் பெரும்பாலும் கிடையா. 'சிவலிங்கம்' எனப்படுகின்ற கந்து உருவையே வழிபட்டு வந்தனர். இச்சிவலிங்க உருத்தான் மிகப் பழைய நாட்டொட்டு எல்லாச் சாதியினராலும் எல்லாத் தேயத்தாராலும் வணங்கப்பட்டு வந்ததென வரலாற்று நூலாராச்சிவல்ல புலவோர்கள் உரைநிறுவுகின்றனர். இதனாலன்றே சிவபிரான் திருக்கோயில் காடேறும் முதன்மையான கருஇல்லில் இச்சிவலிங்க அருட்குறியும், முதன்மையில்லா ஏனைய இடங்களில் உருவங்களும், நிறுத்தப்பட்டிருக்கின்றன.

நச்சினார்க் இனியருங் 'கந்து' என்பதற்கு 'தெய்வமுறையுந்தறி' என்றுரைகூறினாராகலின் ஈண்டு அது சிவலிங்கமேயாதல் தெற்றெனத் துணியப்படும். திருமுருகாற்றுப்படையிலும் நக்கீரனார் 'கந்துடைநிலையிலும்' என்று அருளிச் செய்தமை காண்க. அற்றேல், நாகரீகம் நிரம்பிய பண்டை நாளில் மக்களுருப்போல் திருவுருவங்கள் சமைத்து வழிபடாமை என்னையெனில்: காணவும் கருதவும் படாத முதல்வனுக்குத் தாமதாம் நினைத்தவாறு உருவங்கள் சமைத்து வணங்கல் பொருந்தாதாகலின், அம்முதற்பொருளை ஒரு பிழம்பாகக் கொண்டு வழிபடுவதற்கு ஒர் அறிகுறியாகப் பிழம்பு வடிவான கந்துரு நிறுத்தினாரென்க. பிழம்புருவின் வழிபாடு போல ஏனை உருவின் வழிபாடுகள் சிறவாமை உண்மை நூல்களுட் கண்டு தெளிக.

சிவலிங்க வழிபாடு பற்றிய பொருந்தாக் கூற்று

இலிங்கம் எதனைக்குறிக்கின்றது? இவ்வழிபாட்டின் நோக்கம் என்ன? இவ்வினாக்களுக்குப் பலர் பலவாறு விளக்கங் கூறியுள்ளனர். சிவலிங்க வழிபாட்டு மரபை உள்ளவாறு அறிந்துகொள்ளாத மேனாட்டு ஆராச்சியாளர், அரைகுறையாக செய்திகளை அறிந்துகொண்டு தம்மனம் போனவாறு விளக்கங்கூறியுள்ளனர். சிவலிங்கவழிபாடு தாம் வெற்றிகொண்ட பழங்குடிகளின் வழிபாடாதலால், இருக்கு வேத கால ஆசிரியர் அதனை எள்ளி இகழ்ந்தனர். பின்னர் ஆரியரும் அவ்வழிபாட்டை ஏற்றுக் கொண்டாராயினும், புராண காலத்திலே சைவம், வைணவம் ஆகிய இருபெருஞ் சமயங்களுக்குமிடையே எழுந்த பூசல் காரணமாக ஒன்றையோன்று இழித்து பழிக்கும் பாங்கிலே புராணங்களும் பிற நூல்களும் ஆரிய மொழியிலே தோன்றின.

இவ்வாறு சைவத்தை பழிக்கும்நோக்கமாக எழுந்த சில புராணங்களிற் சிவலிங்க வழிபாடு திரித்துக் கூறப்பட்டுள்ளது.காழ்ப்பு மனப்பான்மையால் எழுந்த நூல்கள் சான்றாக கொள்ளத் தக்கனவல்ல. சைவ மரபிலே தோன்றிய நூல்களே உண்மையை அறிவதற்கு உதவுவன. காமீகம், காரணம், வாதுளம், மகுடம் போன்ற சைவாகமங்களும் திருமந்திரம் சிவஞான சித்தியார் போன்ற தமிழ்ச் சாத்திர நூல்களும் சிவலிங்கம் பற்றிய விளக்கம் தருகின்றன. மேலும் தேவாரம் முதலிய சைவத் திருமுறைகளிலும் ஆங்காங்கு சில குறிப்புகள் உள்ளன. இத்தகைய உண்மை நூல்களை ஆதாரமாகக் கொண்டே சிவலிங்க வழிபாட்டிற்கு விளக்கங் காணப்படல் வேண்டும்.



சிவலிங்க வழிபாடு தீப்பிழம்பு வழிபாடே

கட்புலனாக கடவுளை எண்ணி வழிபடுவதற்கு வாயில்களாய் நிற்பவை ஞாயிறு, திங்கள், தீ என்னும் முச்சுடர்களுமே ஆகும். இவற்றுள் ஞாயிறே தனது ஒளியினாலும், வெப்பத்தினாலும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் செய்யவல்லதாய் இருப்பதால் அதனிடமே கடவுளுடைய அருடச்செயலைப் பண்டைக் காலத்தில் மக்கள் கண்டனர். இதனாற் சூரியனைக் கடவுளாக வழிபடும் வழக்கம் பாரத நாட்டில் மட்டுமன்றி, பண்டைய நாகரீகங்கள் தோன்றிய எகிப்த்து, கிரிசு, பாபிலோனியா முதலிய பிற நாடுகளிலும் நிலவியது. இனி இஞ்ஞாயிறு தானும் விண்ணிலே எட்டாத தொலைவில் விளங்குவதால் மண்ணிலே மக்களுக்கு எட்டக் கூடிய நிலையில் ஞாயிற்றின் இயல்புகளை ஓரளவு கொண்டு விளங்கும் தீப்பிழம்பு இறைவழிபாட்டிற்கு ஏற்றதாயிற்று. ஆகவே கட்புலனாக கடவுளை நினைத்து வழிபடுவ தற்குக் கட்புலனாகுந் தீப்பிழம்பு சாலவுஞ் சிறப்புடையதாகக் காணப்பட்டது.

இனி, இத்தீப் பிழம்பு தானும் கட்புலனாற் காணுமளவுக்கே இடந்தருவ தல்லது. அன்புமேலீட்டால் அணைப்பதற்கும், பூச்சாந்தம், ஆடையணிகள் முதலியவற்றால் ஒப்பனை செய்து கண்டுகளிப்பதற்கும் இடந்தருவதன்று. ஆகவே, இவ்வாறெல்லாம் செய்து வழிபடுவதற்கு அத்தீப்பிழம்பின் வடிவமாகக் கல்லினாலும், மரத்தினாலும், உலோகத்தினாலும் திரண்டு நீண்ட தலைகுவி ந்த திருவுருவம் செய்யப்படலாயிற்று. ஒளி வடி வமாய் நின்று உலகுயிர்களைப் படைத்து, காத்து அருள்செய்யும் முதல்வனுக்கு அடையாளமாகவே இவ்வுருவம் அமைத்துக்கொள்ளப்பட்டது. இந்த அருட் குறியைப் பழந்தமிழர் 'கந்து' என்று வழங்கினர் என்பதை மேலே கண்டோம். ஆரிய மொழியில் இது 'லிங்கம்' எனப்பட்டது. அம்மொழியிலும் இச்சொல்லுக்கு 'அடையாளம்' அல்லது 'குறி' என்பதே பொருளாகும். சிவனைக் குறிக்கும் அடையாளமாதலின் இது 'சிவலிங்கம்' என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாயிற்று.

தீப்பிழம்பு வடிவமாகக் கல் முதலிய பருப்பொருட்களால் செய்யப்பட்ட இவ்வருட் குறியை நிறுத்துவதற்கு ஆதாரமாக வட்டவடிவமான ஒரு பீடம் அமைக்கப்பட்டது. இப்பீடம் அத்தீப்பிழம்பு எரிந்துநிற்கும் குண்டத்துக்கு அடையாளமாகும். இவ்வாறு பீடத்திற் பொருத்தப்பட்ட அருட்குறியே பீடலிங்கம் எனப்படுவது. நாம் பொதுவாகச் சிவலிங்கம் என்று வழங்கும்போது பீடலிங்கத்தையே கருதுகின்றோம். பீடம் இல்லாத இலிங்கங்களும் பண்டைக்காலத்தில் இருந்தனவென்பதற்குக் காஞ்சி ஏகாம்பரநாதர் கோவிலில் இருக்கும் இரண்டு பழய இலிங்கங்கள் சான்றாகும்.

சிவபெருமான் தீப்பிழம்பு வடிவினன் என்று சைவத்திருமுறைகள் பல இடங்களிலே குறிப்பிடுகின்றன. அவனருளே கண்ணாக அவனைக் கண்டு தேவரா திருவாசகங்களைப் பாடிய நாயன்மார் கூற்றுக் கள் சில வருமாறு:

'தழல்சேர்தரு திருமேனியர் சசிசேர்சடை முடியர்'
(முதலாம் திருமுறை, திருமுதுகுன்றம், 7)
'தீயினார் திகழ் மேனியாய் தேவர்தாந்தொழு தேவன் நீ'
(இரண்டாம் திருமுறை, திருஅறையணிநல்லூர் 5)
'பொங்கழல் உருவன் பூதநாயகன்'
(மூன்றாம் திருமுறை, திருஆலவாய். 1)

இவை ஆளுடைய பிள்ளையார் அருள்வாக்குகளாகும்.

'முத்தழல் மேனித் தவளப் பொடியன்'
(நான்காம் திருமுறை. தனித்திருவிருத்தம்.5)
'அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வனா நீயலையோ'
(நான்காம் திருமுறை, தனித்திருவிருத்தம். 3)
'நெருப்புருவு திருமேனி வெண்ணீற்றானை'
(ஆறாந்திருமுறை. திருவலம்புரம். 3)

இவை திருநாவுக்கரசரின் திருவாக்குகளாம்.

' தண்ணார் மதிசூடி தழல்போலும் திருமேனி'
(ஏழாந்திருமுறை, திருவெண்ணை நல்லூர். 6)
' செய்வகை யறியேன் சிவலோகா தீவணா சிவனே'
(ஏழாந்திருமுறை, திருவிடை மருதூர் 8)
' நீற்றுத் தீயுருவாய் நிமிர்ந்தானை'
(ஏழாந்திருமுறை, திருக்கோலக்கா 6)

இவை வன்தொண்டர் வாக்குகளாகும்.

'அந்தமில் பெருமை அழலுருக் கரந்து.'
(திருவாசகம், கீர்த்தித் திருவகவல், வரி 92)
'விரிந்தே யெரியுஞ் சுடரணையாய்'
(ஷ நீத்தல் விண்ணப்பம். 38)
'திருமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும் பி'
(ஷ, திருக்கோத்தும்பி. 20)

இவை மாணிக்கவாசகர் மணிவாக்குகளாகும். இவ்வாறு சைவத்திருமுறைகளிற் சிவபிரானை செந்தழல் உருவினன் என்று பல்காலும் கூறும் குறிப்புகளை நோக்குமிடத்துச் சிவனது அடையாளமாக அமைந்த சிவலிங்கம் தீப்பிழம்பின் வடிவமே என்பது தோற்றமாம்.

தொடரும்

ஸ்ரீ ரமண மஹரிஷி

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இப்படியே தாயார் அழுது புலம்பியும் "சமம் ப்ரஹ்மம்" கொஞ்சமேனும் தாழவில்லை. அருட்போதம் மருட்போதத்தை ஏறிட்டும் பார்க்கவில்லை.

தரை குலைந் திடினும்
அறிவே தவம் குலைந்திடுமோ?
வரை பெயர்ந்திடினும்
அறிவே மனம் பெயர்ந்திடுமோ?
ஊழியிடி வீழினும்
அறிவே உறுதி சிந்திடுமோ?
ஆழி எதிர் வரினும்
அறிவே ஆண்மை தளர்ந்திடுமோ?
உள்ளபடி இருந்தால்
அறிவே உன்னல அறந் தெளிந்தால்
உள்ளவனிச்சையினால்
அறிவே உள்ளபடி நடக்கும்.

மேல் உள்ள "கண்மணிக்கண்ணியை" தாயின் புலம்பலைக் கேட்டுக் கிரகித்த பகவானின் சிஷ்யரும், கவி யோகியும், தவயோகியும், சமய, சமூக, அரசியல் ஞானியும் நீண்ட கால தவ யோகியாய் இருந்து அண்மையில் சமாதி அடைந்தவருமாகிய யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் பாடியுள்ளார்.

அவர் எழுதிக் கொடுத்த மஹாவாக்கியத்தை யாராலும் மாற்ற முடியாது. அவனிச்சை என்னை இங்கே ஊன்றி வளர்க்கிறது. உன் பாச இச்சை பலிக்காது. அவன் செயல் யாவும் நடக்கும். உன் செயல் எதுவும் நடவாது. என்று உறுத்திய இந்த வேதாந்தத்தைக்கண்டு தன் முயற்சி எல்லாம் வீணானது என்ற வேதனை முடிவுடன் விடை பெற்று வீடு திரும்பினாள். அன்னை கூடவே பின் தொடர்ந்தான் அண்ணன் நாகசாமி.

தேடி வந்த அன்னையும் சகோதரனும் வந்த வழி திரும்பினார்களே!

சுவாமிகள் இரக்க மற்றவரா? பெற்ற அன்னையை அவமதித்தாரா இல்லை, இல்லை, அவர் கருணைக்கடல். பசு, நாய், குரங்கு, பறவை, பாம்பு இவை மட்டுமா? திருட வந்த திருடர்களுக்கும் கூட அவர் அன்பு எளிதில் விளங்கும். தாயினிடம் அவருக்குள்ள அன்பு உண்மையான தெய்வீகமான அத்தியாத்ம அன்பு. இன்றுள்ள மாத்ரு பூதேச்வரர் ஆலயத்தை பார்த்தால் விளங்கும்.

" நீ வா! நான் உன்னைக் காப்பாற்றுகிறேன். நீ என் மகன்" என்று பாசம் பூண்ட மட்டும் ஆண்டவன் மனக்கலக்கம் தீர்க்கவில்லை, பின்னால் ஆண்டவன் பாசப் பற்றிற்கு இடமான சுற்றங்களை எல்லாம் ஒழித்து, ஸம்சாரதுக்கம் என்னும் நெருப்பில் வாட்டி மனத்தை விரக்தியென்னும் மாற்றேற்றி முடிவில் சுவாமியிடமே நான் சென்றடைதலே மேல் என வந்தவுடன் ஆண்டவனின் அன்பு மலர்ந்தது.

அவருக்கு தாயிடம் உண்மை அன்பு மிகுந்தருந்தது. தனது திடமான, உறுதியான தவநிலையில் தன்னை முற்றும் மறந்த மோன நிலையில், ஏகாந்தமே இனிதுவக்கும் இன்பநிலையில் உற்றார், உறவினர், தாய். தமையன் என்ற அபிமான பாசங்களையெல்லாம் மெய்யான வாளாற் சிதைத்தெறிய வேண்டிய நிலையிலே சுவாமிகள் சும்மா இருந்ததே தகுந்த விடை. அப்படி இருப்பினும் தன் தாயாருக்கு அறிவு வரும்படி "என்னையாள்பவள் அவள்" எல்லாமே அவளிச்சைப்படி நடக்கும். நீ சும்மாயிரு, அவளிச்சையிருப்பின் உனக்கும் நல்ல அறிவு தந்து நலமெய்தும் என்ற பொருள்படக் கூறினார்.

அன்று கௌதம புத்தரும் அருமை மனைவியையும், மகனையும் உறக்கத்தில் விட்டு, அரசபோகத்தையும், அரண்மனை வாழ்க்கையையும் உதறிவிட்டு யாரும் அறியாமல் தவத்தை நாடிச் சென்றார். எல்லோரும் வருந்தினர்.

தமது அரசிளங்குமரன் பிக்குவாக கையில் கலயம் ஏந்தி காவியுடுத்து பிரசைகளிடமே கையேந்தி இரந்துண்டதை அரசன் கண்டு உருகிக் கலங்கினான். எவ்வளவோ கொடிய சோதனைகளையும் புத்தர் போதித்து உணர்த்தினார். ஆனால் பால சன்னியாசியோ மௌனமாக அனைத்தையும் பொறுத்து தன்னை ஆட்டுவி ப்பவனிடம் அன்னையை ஒப்புவித்துவிட்டார்.

ஒரு சமயம் ஏசு பெருமான் தன் சீடர்களுடன் உரையாடிக்கொண்டிருக் கையில் அவரது தாயாரும், சகோதரரும் வந்து காண வேண்டினர். அப்போ ஒரு சீடர் ஏசு நாதரை நோக்கி " தங்கள் தாயாரும்,

சகோதரரும் தங்களை காணவந்து வெளியே காத்திருக்கின்றனர்' என்றார்.

அப்போது ஏசு நாதர் என்ன சொன்னார்? தாய் யார்? சகோதரர் யார்? என்று கேட்டபடியே தனது சீடரை சுட்டி காட்டி இதோ என் தாயையும், சகோதரனையும் காணுங்கள்!

யார் எனது பரமபிதாவின் ஆணையை நிறைவேற்றுகிறார்களோ அவர்களே என் தாய், சகோதரர், சகோதரி என்றார்.

இப்படிப் பெற்றோர்களால் தம் சிரேஷ்ட்டர்களின் வைராக்கியம் சோதிக்கப் பட்டதற்கு பல மாஹான்களின் சரித்திரம் சான்று கூறும். பால சன்னியாசியும் ஏசு நாதர் சொன்னதை விளக்கினார்.

அனைத்தையும் ஆள்வோனின் இச்சைக்கு பாத்திரமாகும் போது நீயும் உண்மையறிந்து இங்கு வருவாய். அவனிச்சைக்கு பாத்திரமாகாமல் என் குழந்தை, நான் போற்றுவேன் என்பது அகந்தை, அதையுதறி, எல்லாம் அவன் செயல் என சும்மா இரு, என்னும் பொருள்பட சொன்னார் இதை யரால் தான் மாற்றி யமைக்க முடியும் அண்ணாமலையான் திருவருள் இதுவே.

அண்ணாமலை தனது உள்ளத்தில் உள்ள தெய்வரகசியத்தை அன்பர்களுக்கு தெளிவாக மௌனோபதேசஞ் செய்கின்றது. அவன் இதயம் போல் அமைந்திருக்கும் குகைகளில் மனமூன்றிச் சிறிது காலமிருப்பினும் அந்த ரகசியம் மனதில் தானாகவே உதிக்கும்.

தவத்திறகு ஏற்ற இடம் மலைக்குகை என்பது அனுபவம். அத்தகைய குகைநிலையங்கள் அண்ணாமலையின் அடிமுதல் முடி வரையில் மலர்ந்துள்ளன. ஞானத்தவத்தினரை கூவி அழைக்கின்றது.

இக்குகைகளுக்கெல்லாம் அரசு "விருபாஷகுகை" இது ஓங்கார வடிவமாய் அமைந்துள்ளதாம். இதனுள் ஓம் ஒலி கேட்கும் இதன் அருகில் தெள்ளிய மலை அருவியும் பாய்கிறது. மாரிகாலத்தில் இதன் அரியகாட்சி இதனிடைத் தவம் புரிவோர் மாண்பிற்கும், அழகிற்கும், அமைதிக்கும் சாட்ஷியாய் விளங்குகின்றது. இக் குகையிலேயே விருபாஷதேவர் சமாதியுள்ளது. இது விருபாஷமடத்தினருடையது.கார்த்திகை தீபத்தின் போது அவர்கள் இங்கு உண்டியல் வசூலிப்பது வழக்கம். இங்கேயே பால யோகி தவராசர் தமது இடமாக கொண்டுள்ளார். அவர் தங்கும் இடமெல்லாம் தவச்சாலை. இருக்குமிடமெல்லாம் அன்பர் குழாம். இங்குதான் சுவாமிகளின் ஆன்ம கதிர் பக்தர்களை காந்தமென கவர்ந்திழுத்து திருவடிப்பணிக்கே அவர்கள் அன்னையையும், வாழ்வையும் அாப்பணிக்க வீறியெழுந்தது.

இதுவே அவரின் ஆத்ம ஸாம்பிராச்சியத்தின் தொடக்கம். ஸற்குரு ஸ்வாமி குகை, குகை நமச்சிவாயர் கோவில், முலைப்பாலுற்றிற்கருகில் உள்ள மாமரத்துக் குகை முதலிய குகைகளில் மாறி, மாறி காலத்திற் கேற்றபடி இருந்தாரெனினும் 1916ம் ஆண்டு வரையிலும் விருபாஷ குகையே அவருடைய பிரதான நிலையமாய் இருந்தது. இவரின் வருகைக்கு பிறகே அக்குகைக்குப் புதுமையும், மகிமையும் ஏற்பட்டதாம்.

(தொடரும்)

தீவகன். சதாசிவம் சேவியர்

தர்மத்தின் காவலர்கள்

நன்கொடையும், விளம்பரமும் தந்த பெருமக்களுக்கு நன்றியும் நல்லாசிகளும்

" *தர்மத்தைக் காப்பவரை தர்மம் காக்கும்* "

மதம் வெளியீடு பல சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. மதம் வெளியீட்டுக்கு அரசாங்க நிதி உதவி எதுவுமே இல்லை. ஆனால் ஆரம்பகாலத்தில் இருந்து தர்மசிந்தையுள்ள பெரியவர்கள் நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

1. திரு. க. ஆனந்தராஜா 5.00 டொலர்கள்
2. திரு. B.பத்மசேகர் 50.00 டொலர்கள்
3. திரு. சிறி(முழுப் பெயர் தரவில்லை) 20.00 டொலர்கள்
4. பெயர் குறிப்பிட விரும்பாத கோவில் தொண்டும் சமயத் தொண்டும் ஆற்றும் ஆசிரியை 20.00 டொலர்கள்
5. பெயர் விரும்பாத அன்னையர் 10.00 டொலர்கள்
6. திரு. வே. கணேஸ்வரன் 30.00 டொலர்கள்
7. திரு. தி. சிவலோகநாதன் 10.00 டொலர்கள்
8. பெயர் குறிப்பிட விரும்பாத ராம பக்தர். உணவுச்சேவை (catering)நடாத்தும் பெருமகன் இரண்டு தடவைகள் (100 + 100) கொடுத்துள்ளார் 200.00 டொலர்கள்
9. திரு. எஸ். சண்முகராஜன் 10.00 டொலர்கள்

தர்மத்தின் காவலர்களான இப்பெருமக்கள் அவர்தம் குடும்பத்தினர் எல்லா நலனும் பெற்று பெருவாழ்வு வாழ எம்பெருமான் அருள் என்றென்றும் கிடைப்பதாகுக.

முதல் இதழுக்கு வாகன உதவியும் சரீர உதவியும் அளித்த திரு. சின்னையா கருணானந்தன் அவர்களுக்கும், சரீர உதவியளித்த திரு. இ. சற்குணேஸ்வரன்(ரட்ணா) அவர்களுக்கும். இரண்டாவது இதழுக்கு சரீர உதவியளித்த திருமதி.வி. கணேசன், செல்வி. ச. கணேசன், திரு. கனகலிங்கம் சுரேஸ் ஆகியோருக்கும், வாகன உதவியளித்த YARL AUTO TECH திரு. த. நடராஜா (நடா) அவர்களுக்கும், அவரது நண்பருக்கும், சரீர உதவியளித்த, செல்வன். எல். சசிகரன், செல்வன். எஸ். சயந்தன் ஆகிய மாணவ மணிகளுக்கும், அவர்களது மாமா திரு. ரஞ்சன் அவர்களுக்கும், எல்லா நலனும் இறைவன் அருளால் கிட்டுவதாக!

நான்காவது இதழுக்கு வாகன உதவி அளித்த திரு. வேலுப்பிள்ளை கணேஸ்வரன் அவர்களுக்கும், வாகன உதவியும் சரீர உதவியும் அளித்த திரு.சின்னையா. இராசேந்திரம் அவர்களுக்கும், அவர் நண்பர் திரு. சிவகுமார்(தம்பி) அவர்களுக்கும், நன்றிகள் பல, இப்பெருமக்களும் அவர்களின் குடும்பத்தினர்களும் இறைவன் அருளால் எல்லா நலன்களும் பெற்று நீண்ட காலம் நலமுடன் வாழ்வார்களாக!

அத்தோடு தொடர்ந்து விளம்பரம் மூலம் நன்கொடை அளிக்கும், **E.S.K JEWELLERY**, ***PREMLA MARKET***, **SOUTH PORT PICTURE FRAMING, TECHNOS AUTOMOTIVE INC, ANTONY BROTHERS, INTERNATIONAL INSURANCE** திரு. ஏ. வேலுப்பிள்ளை அவர்களுக்கும், **MADONNA'S STUDIO, TOP BREAD BAKERY, LANKA FOOD MART, NADA'S TEXTILES & JEWELLERY, YARL AUTO TECH, MORNING STAR DRIVING SCHOOL, MATHURA MARRIAGES, S.P.S VIDEO, SIVA'S TRADING CO LTD, J.A.B TRAVELS, SRI KANAKAMBIGAI MANGALA PEEDAM, THARSHANAS, YARLTON MARKET**, MEINEKE, VENUS STORE, **VIDEO MARUTHY, GASA RESTAURANT, SARA TAILORS, FANCY FLOORIST, VIJAYAS SILK,** INTERCITY TOURS, CENTURY 21 SHAN RAJAH, **GANESHA ENTERPRISE,** KNR MONEY EXPRESS, MANCHULA FASHION, GEMINI MARKET, TASTY RESTAURANT, YARL YOUNG DRIVING SCHOOL, **AMMAN'S JEWELLERS**, UNIVERSAL TEXT, LUCKY VIDEO, ASIAN SALOON, S.K SUPERMARKET, **THURKKA HOME FURNITURE,** AUTO THAVAS, BERMOR FURNITURE, ASKAI SUPER MARKET, **VIGNA VIDEO VISION,** SHAHNAZ HERBAL, S.J.ENTERPRISES, PORTELLO, MODERN AUTO, REGAL VIDEO, AJB TRAVELS, BERMORE FURNITURE, THUVARAGAS, 5 STAR TRADERS, NEELAM SILK, JESSIMAS, SREENIVAS NILAYAM, SAI BABA TEXTILES, M.KASIPPILLAI & SONS, DAILY NEEDS, DHURGA AUTO COLLISION, **YOGA SOTHIDAM**, M J M MARKET, RATHICKA JEWELLERS, SHANKAR & CO, CAN TAX, **JEYASAJI JEWELLERY LTD,** ஆகிய ஸ்தாபனத்தினர்களுக்கும், அவர்கள் குடும்பத்தினர்களுக்கும், **டாக்டர் திருமதி. சிவகாமி ஜீவானந்தம், டாக்டர் திரு. ஆதிகணபதி சோமசுந்தரம், டாக்டர் திரு.சிவநேசன் சண்முகம், சட்டத்தரணி யசோ சின்னத்துரை. சட்டத்தரணி திரு. மனுவல் ஜேசுதாசன், சட்டத்தரணி திரு. ரி. ஜெகதீசன்,** ஆகிய பெருமக்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும்,

எல்லாம் வல்ல எம்பெருமான் எல்லா நலன் களையும் அளிப்பாராக. மற்றும், குறைந்த செலவில் அச்சமைப்பு செய்து தந்த திரு. தி. சிவ லோகநாதன் (நாதன்) அவர்களுக்கும்; அவசரமாகக் கேட்கும் போது பணம் வாங்காமலே அச்சமைப்பு உதவியளித்த திரு. **என். எஸ். சிவம்** அவர்களுக்கும், இம்முறை தமிழ் எழுத்துக்களை இலவசமாகத் தந்து உதவிய **Haran Graph** இயக்குனர் திரு. **P. சசிகரன்(சசி),** இவர் எம்மத்தியிலே சிறந்த கம்பியூட்டர் நிபுணர் என்பது பலர் அறிந்துள்ளார்கள், நல்ல மனம் கொண்ட இப்பெருமகனின் திறமைகள் மேலும் மேலும் வளரவேண்டும், அவரும் அவர்குடும்பத்தினரும் எல்லாநலனும் பெற இறைவன் அருள்பாலிப்பாராக.

"ஈதல் இசைபட வாழ்தல்"

புகழோடு வாழும் வாழ்க்கை உயர்வானது, ஈதல் என்பது கொடுத்தல், இசைபட வாழ்தல் என்பது, புகழோடுவாழ்தல். தான தர்மம் செய்பவர்களை புகழ் தானாகவே தேடிவரும்.

"தர்மத்தைக் காப்பவரை தர்மம் காக்கும்"

வாழ்வில் இறைவனின் அருள், செல்வம், புகழ், இவற்றைப் பெறுவதற்கு தான தர்மங்களதான் சிறந்த மார்க்கமாக உள்ளது. எல்லா மதங்களும் தர்மம் செய்வதை வலியுறுத்துகின்றன. வருமானத்தில் பத்து வீதமாவது தர்மத்துக்காக செலவிட வேண்டும் என சாஸ்திரங்கள் கூறுகின்றன. யாழ்ப்பாணத்திலே பொன்னம்மா எனும் அம்மையார் மிகவும் வறுமையான நிலையில் இருக்கும் போது, கடையிற் சுவாமியார் பல பக்தர்களுடன் அவரது வீட்டிற்கச் சென்று எல்லோருக்கும் உணவு கொடுக்கும்படி கேட்டார், அதே நேரத்தில் அந்த அம்மையாரிடம் உணவுக்கு எதுவுமே இருக்கவில்லை, கையில் பணமும் இல்லை, கொடிய வறுமை அந்த நிலையில் அவரிடம் இருந்தது அவருடைய தாலி ஒன்றுதான், அதைத் தன் கணவரிடம் கொடுத்து இதை விற்று உணவாக்குவதற்கு வேண்டிய பொருட்களை வாங்கிவரும் படி கூறியனுப்பினார், அவர் கணவரும் கூறியபடியே பொருட்களை வாங்கிவந்தார். பொன்னம்மா அம்மையார் மனம் கோணாது மகிழ்ச்சியுடன் சுவாமியாருக்கும் வந்திருந்த இருபதுக்கு மேற்பட்ட பக்தர்களுக்கும் உணவு பரிமாறினார்.


உணவு உண்டபின் சுவாமி பக்தர்களை அனுப்பிவிட்டு பொன்னம்மா அம்மையாரிடம் ஒரு இரும்புத்துண்டைக் கேட்டார். அம்மையாரும் ஒரு இரும்புத்துண்டை சாமியாரிடம் கொடுத்தார், அதை ஒரு வெள்ளைத் துணியால் கட்டி அம்மையாரிடம் கொடுத்து இதை சாமிப்படத்தருகே வைத்திருக்கும்படி கூறிவிட்டுச் சென்றார். பலநாட்களின் பின் துணியால் கட்டப்பட்டிருந்த இரும்புத்துண்டு மினுங்குவதைக் கண்டனர், அது சுத்த தங்கமாக மாறியிருந்தது.

அதை விற்று எண்ணெய் வாணிபத்தை செய்துவந்தனர். அவர்களது செல்வம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. இன்றும் அவர்களது சொத்து பல தலைமுறையினர்க்குப் போது மானதாகவுள்ளது.

இப்படி தர்மம் செய்து பல தலைமுறை சிறப்பாக வாழுகிறார்கள்.

நல்லதை அறிந்து, அதைப்பிறருக்கும் கூறுவதால், நலம் நம்மை வந்தடைகிறது.

வட்டத்தின் தத்துவம்



வட்டத்தைக் கீறும் போது தொடங்கிய இடத்திலேதான் முடியும். அதேபோலத்தான் கர்மங்களும். கர்மம் என்பது செய்யும் காரியம் அல்லது வினைகள். நாம் எதைச் செய்தாலும் எதை நினைத்தாலும், எதைச் சொன்னாலும் அது பல செயல்பாட்டை ஆக்கிவிட்டு மீண்டும் நம்மையே வந்தடைகிறது. ஆனால் வரும்போது அது பல மடங்காக வரும். இந்தத் தத்துவத்தை உணர்ந்து கொண்டவர்கள் தீயதைச் செய்ய மாட்டார்கள்,தீயதைச்சொல்ல மாட்டார்கள், தீயதை நினைக்க மாட்டார்கள். நாம் பொய்யைச் சொல்லி பிறரை ஏமாற்றும் போது, அதே செயல் பிறருக்கு அதற்குரிய செயல்பாட்டை முடிடித்து விட்டு பலமடங்காகவந்து நம்மையே தாக்கும். தத்துவங்கள் பொய்ப்பதில்லை அதுவே வேதங்கள். நலமேசெய்து வாழ்வோமாக!

விஞ்ஞானம் நிரூபிக்கும் இந்துமத கொள்கைகளும் கோட்பாடுகளும்

(மதம் வெளியீட்டின் இரண்டாவது பரிசு பெற்ற கட்டுரை)

சாவையம்பதி இ. சுப்பிரமணியம்

யாகம், மந்திரம், வாத்தியம்

நமது இந்துசமயத்தில் மாத்திரம் யக்ஞும்என்னும் யாகம் உண்டு. இது ஒரு பரிவர்த்தனையே (EXCHANGE) யாகம் தேவர்களைத் திருப்தி செய்ய, அவர்கள் எமக்கு மழை முதலியவற்றைத் தருவர். யாகம் என்பது மந்திரம் ஹவிஸ், தேவதை ஆகிய வற்றை ஆதாரமாகக் கொண்டது. யாகங்கள் 21 வகைப்படும். யாக ஓமத்திற்கான சமித்துக்களை தேடியேடுத்து சுத்தமான பசு நெய்யுடன் அக்கினியில் இட்டு அந்தந்த தேவர்களை அழைத்து வேண்டுதல் செய்து பூரணாகுதி மூலம் திருப்தி செய்வர். ஹோமப்புகையும் மந்திர ஒலியும் அடியார்களுக்கு அருமருந்தாகி நிவாரண மளிக்கும் இதனால் உள்ளத்திற்கும் பூரண திருப்தி ஏற்படும். சமித்துக்கள் பழவர்க்கம், உணவுகள், பால், இளனீர் போன்றன தேடுவதிலும் பிறவற்றிலும் முயற்சி செய்ய வேண்டும். அக்கினியிலிட்ட பொருட்கள் மீளப் பெற முடியாதவை, மக்களின் தியாகமே (sacrifice) யாகம் ஆகும்.

மந்திரம் நினைப்பவரைக் காப்பது. ஏற்ற இறக்கத் தொனிகளுடன் வேத சிட்சா விதிப்படி மந்திரம் சொல்வதும், சங்கு, சேமக்கலம் உடுக்கு , தவில் நாகஸ்வரம் ஆகிய வாத்தியங்களும் ஏற்படுத்தும் சப்த அதிர்வுகள் தெளிவையும் புத்துணர்வையும் ஊட்டுகின்றன. சங்கீத ஒலி விருட்சங்களை வளரச் செய்கின்றன. மகுடி ஊத நாகங் கூடப்படம் எடுத்தாடும். தண்ணீர் பஞ்சமேற் பட்டபோது கர்நாடக சங்கீத " அமிர்த வர்ஜினி" இராகம் பாடியதும் மழை பெய்தது. அது மாத்திலமல்ல, 18ம் நூற்றாண்டிலே புதுக் கோட்டையரசு மாளிகையில் பல வித்துவான்கள் முன்னிலையில் " தீபக் எனும்" ஜோதீஸ்வர ரூபிணி" இராகம் பாடியதும் அரண்மனை விளக்குகள் தாமே எரிந்தனவாம். ஹோமப்புகை வேதமந் திரங்களின் ஒலி, வாத்தியசப்தம் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்தும். இதன் மூலம் நிரூபிக்க இந்துமதக்கிரியைகள் விஞ்ஞான அடிப்படையுடையன என்பது உறுதியாகும்.

உமை பங்கன் என்னும் அர்த்த நாரீஸ்வர் வடிவம்

சிவம் என்ற ஆண் உருவம் தூய்மையான ஞானத்தையும் மெய்யுணர்வை யும் ஏற்படுத்துகின்றது. சக்தி என்ற பெண் உருவம் அஞ்ஞானத்தையும் தாமத குணத்தையும் ஏற்படுத்துகின்றது. சக்தியின்றி சிவம் தனித்தியங்க முடியாது. சிவமே சக்தியின் வழியாக இயங்கி எல்லாவற்றையும் நடத்துகின்றது. சிவசக்தியென்ற இணைந்த வடிவமே, அர்த்த நாரீஸ்வர வடிவமாகும். இதுவே படைப்பின் ஆதாரம். இப்படிப் பொருளும் சக்தியும் இணைந்த இந்த ஆன்மீகச் சக்தியே பிரம்மம் ஆகும். இச்சக்தியை தனியப்பிரிக்க இயலாது. பொருளும் சக்தியும் இணைந்தால் தான் உலகம் இயங்குகிறது. வெளி உலகைப் பற்றிய உணர்வும் தன்னைப்பற்றிய விழிப்பும் சேர்ந்து தான் படைப்பின் உருவையுண்டாக்கு கின்றன. ஆனால் நாம் பரம் பொருளின் உண்மையை உணரும்போது அர்த்த நாரீஸ்வர வடிவம் மறைந்து விடுகின்றது.

உலகில் உள்ள உயிரினங்கள் ஆண், பெண் எனத் தனிதனியே படைக்கப் பட்டுள்ளன. ஆணும் பெண்ணும் ஒருடலிலே படைக்கப்பட்டுள்ளமை விந்தையே. செவ்வரத்தம்பூவே ஆண், பெண் பாகங்கள் ஒன்றிலேயுள்ளன. பூவின் நீண்ட தாளின் நுனியிலே மகரந்தம் உண்டு, இது ஆண். நீண்ட தாளின் அடியிலே புற இதழ்களால் மூடப்பட்டள்ள பகுதியின் உள்ளே சூலகம். இதுவே பெண் பகுதி. செவ்வரத்தம்பூவைப் போன்றே மண்பாம்பும் அமைந்துள்ளது.

உலகில் உள்ள பொருட்கள் பல இயங்கும் ஆற்றல் உள்ளனவும், இல்லாதனவும் உண்டு. மின்குமிழ் ஒரு சடப்பொருள். மின்னாற்றல் கிடைத்ததும் வெளிச்சத்தைத் தருகின்றது. சிறிய இரும்புத் துண்டுக்குக் காந்த மேற்படுத்தியதும் அது பொருட்களைக் கவருகின்றது. மின்குமிளும், இரும்பும் சடப்பொருட்கள் (MATTER) மின்னா ற்றலும், காந்தமும் சக்திகள். இத்தன்மையில் சடப்பொருளுக்கு ஆற்றலாகிய சக்தியிருப்பின்

மதிப்புண்டு. சடப்பொருளே ஆணாகிய சிவம் என்றும், ஆற்றலே பெண்ணாகிய சக்தியென்றும் கண்டனர். பொளும் ஆற்றலும் ஒருமித்தவுடன் புதுமையுண்டாவதை உணர்ந்து செவ்வரத்தம்பூவைப்போல ஒன்றிலே பொருளாகிய சிவத்தையும் ஆற்றலாகிய சக்தியையும் இணைக்க பாதி ஆண், பாதி பெண்ணாகி ஒன்றாகிய வடிவமே அர்த்த நாரீஸ்வர வடிவமாகும். கடவுளின் சாயலாகவே படைக்கப்பட்டவன் மனிதன் அதில் அழகும் கவர்ச்சியும் படைப்புங்கொண்டது பெண். அதனாலே பொருளையும், சக்தியையும் ஒன்றாக்கினர். அப்படியானால் இறைவன் இல்லையா எனத் தோன்றலாம். மக்களின் ஆரம்ப அறிவுக்கானதே உருவ வழிபாடு. படிப்படியாகத் தியானப் பயிற்சி மூலம் அருவுருவம் பின் அருவ வழிபாட்டுக்கு முன்னேற வேண்டும். உருவ வழிபாடுகள் ஆரம்ப வகுப்பில் எண்களின் மதிப்பை அறிய எண்ணிக்கைக்குப் பயன்படும் பருப்பொருட்க ளைப் போன்றதே. ஜிவன் முத்தர்களான சித்தர்களுக்குக் “கோயிலாவதேதடா குளங்கரையாவதேதடா கோயிலும் மனத்து ள்ளே குளமும் மனத்துள்ளே” என்ற நிலைக்கு நாமும் வர முயலவேண்டும். இயற்கையின் வடிவமே இறைவன் கழலடியாகும். இதன் மூலம் விஞ்ஞானம் நிரூபிக்கும் இந்துமத உமைபங்கன் வடிவ நியதியை அறிந்து கொள்வோம்.

ஆடுகின்ற நடனமும், ஆனந்த நடனமும்

உலகில் உள்ள சகல பொருட் களுக்கும் ஆதாரமாக இருப்பது மிக நுண்ணிய அணுவே. அணுவைப் பற்றியும் அதன் அளவிறந்த சக்தியைப் பற்றியும் ஆராய்வது விஞ்ஞானமே. அணுவுக்குள்ளே மூலக்கரு எலக்றோன், புறோற்றோன் உண்டு. சூரியன் நிற்க ஏனைய கிரகங்கள் அதனைச் சுற்றி வருவது போல அணுவின் மூலக்கருவைச் சுற்றி எலக்ரோனும், புறோற் ரோனும் சுற்றிவருகின்றன. இப்படி ஒவ்வொர் அணுவும் அதன் பகுதிகளும் ஆடிக்கொண் டிருக்கிறது. மிக நுண்ணிய அணுவின் மீதுதான் பொருட்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் நுண்ணிய அணுவின் சக்தியோ அளப்பரியது. இது உலக இயக்கம் அனைத்தையும் கட்டுப்படுத்துகிறது. இதுவே அணுவின் பௌதிக தத்துவமாகின்றது. இதனை நமது வேதங்கள் சிவசக்தி தத்துவ மாக்கியுள்ளன.

சிவம் என்பது தூய்மையான உண்மை. அதில் சக்தி உள் இணக்கமா யுள்ளது, என்பது வேதத்தின் கூற்று. “சிவம் தமக்குரிய சிறப்பு நிலையில் ஊன்றி நின்று, அதன் தெய்வீக சக்தியை ஒளிபரப்பிக் காட்டுகிறது”. என சுவேதாஸ்வர உபநிஷதம் உரைக்கிறது. எல்லா மூலப்பொருட்களுக்கும், உயிர்களுக்கும் பரம்பொருளான சிவமே யாதாரம். அது எங்கும் நிறைந்து பரவி அடிப் படைச்சக்தித் தேக்கம் (Reservoir of Energies) ஆகும். சக்தியிருப்பின் சிவம் இயங்கும், சும்மா கிடக்கும் ஒருவனிடம் கேட்டுப் பாருங்கள், “சிவனே என்று கிடக்கின்றேன்” என்பான். இதிலிருந்து வெறும் பொருள் மட்டும் பௌதிக நிலையில் இயங்க முடியாது என்பதே.அணுவின் உள்ளே ஆடத் தொடங் கியதும் மூலக்கரு நடுவேநிற்க, ஆற்றலாகிய சக்தி ஆடுகின்றதே, அதுவே சக்தி நடனம்(Energy dance) ஆகும். மாபெரும் சக்தி ஆக்கவும், அழிக்கவும் வல்லது. இதற்காகவே சிவன் திருப்பெண்ணாகடத்திலே ஒரு ஊழிக்காலம் முழுவதும் ஆடினார். இதுவே அருவரத தாண்டவமாகும்.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே.

அணுக்கள் அசைகின்றன, பூமி சுற்றுகிறது, உயிரினங்கள் மாற்றம் அடைகின்றன இதனை நன்கு கற்றோர் அறிவர். விஞ்ஞான உண்மைகளைச் சிவதத்துவங்களாக்கி இறைவன் ஆடுகினறார். உயினங்களின் தோற்றம் அசைவு, வாழ்கை வட்டத்திற்கும், இன்ப துன்பங்களுக்கும் மூலகாரணம்இறைவனே “தென்னாட்டுக்குச் சிவனாகவும், எந்நாட்டவர்க்கும் இறைவனா கவும் இருக்கின்றார் கடவுள். இந்து சமயச் சிவன் இசைக்கும், தாளத்திற்கும் ஏற்ப பொன்னம்பலத்திலே ஆடுகின்றார். ஐந்தொழி லாகிய பஞ்சகிருத்திய நடனத்தால் நாம் உலகில் ஆடுகின்றோம். இவற்றை நன்கு உணர்த்தவே நித்திய பஞ்சகிருத்தியமாக ஆலயங்களிலே நித்திய பூசையும், மாக பஞ்சகிருத்தினுக்காக குறைகளைப் போக்க மகோற்சவங்களும் நடைபெறுகின்றன. இறைவன் ஆட்டுவிக்க நல்வினை தீவினைக் கேற்ப வாழ்க்கையிலே தினமும்ஆடுகின் றோம். இந்துமதக் கொள்கைகளை கோட் பாடுகளை அணுவிஞ்ஞானம் நிரூபிக்கின்றது.

சும்மாயிரு

சப்தம் என்பது அதிர்வுதான், ஒரே சக்தியில் பலவித அதிர்வுகள், பல நாதங்களை ஒலிக்கும், உயிரினங்களின் சுகவாழ்வு, உணர்வுகள் சுவாசத்திலிருந்தே தோன்றும். நமது வாழ்வின் நோக்கம் இறைவனை அடைதலே. அதற்காக நாம் பிராணயாமமூலம் மூச்சை ஒழுங்குபடுத்தினால் ஆச்சரியப்படும்படியான மாற்றம் உடலில் உண்டாகும். அந்தர்யோக பிரணாயாம முறைப்படி சுவாசத்தை நிறுத்திச் சுழுமுனை, பிங்கலை, இடைகலை நாடிகளுக்கூடாக குண்டலினி சக்தியை நமது உடலிலுள்ள மூலாதாரம், சுவதிட்டானம், மணிபூரகம், அநாதகம் விசுத்தி ஆஞ்ன ஆகிய ஆறு ஆதாரங்களினுடே செலுத்தி இறுதியில் சகஸ்ரார கமலத்தில் சேர்த்தால் ஞான ஒளி உண்டாகும். நாடிசுவாசம் நின்றால் புற்றுமூடினாலென்ன, பூமிக்கடியில் நிர்விகற்ப சமாதியிலிருந்தாலென்ன உயிர் இருக்கும். இறையோளியோடு வாழலாம். இதனையே "சும்மா விரு வென்றலும் அம்மாபொருளொன்றுமறிந்திலனே" என்றார்.

நாடிச்சுவாசத்தை ஆதாரங்களுக்கூடாகக் குண்டலினியைச் செலுத்தி ஞான ஒளி தோன்றுவது போல ஆலய ஆறு மண்டபங்களினூடே (கர்பக்கிரக) கமலவிளக்கின் வடிவம் ஞானஒளியை உணர்த்தும்.

இறுதியாக சரஸ்வதியின் தோற்றத்திலே ஏடு வீணை, மயில் முத்தமிழையும், வானவில்லின் ஏழு வர்ணங்களின் இணைப்பே தூய வெள்ளை ஆடையாகும். இவற்றிலும் கீழ்க்கையில் ஏடும் மேல்கையில் உருத்திராக்க மாலையுமுண்டு. கீழேயுள்ள அறிவியற்கலைஞான விஞ்ஞானத்திலும் பார்க்க மேலான செபமாலையால் தியானிக்கும் மெய்ஞானமே சாலச்சிறந்தது. பிறவிப்பயனைத் தந்துதவும் என்பதாகும்.

இயற்கை விஞ்ஞானம் உடல் உளநல விஞ்ஞானம். பொருளும் ஆற்றலும், அணுவும் மாபெரும் சக்திகளாகிய விஞ்ஞானம் நிரூபிக்கும் இந்துமதக் கொள்கைகள் கோட்பாடுகளை நமது சைவர்களும் ஏனையோரும் உணரச்செய்வதே நமக்கு இறைவன் இட்ட பணியாகும்.

□□□

விஞ்ஞானம் நிரூபிக்கும் இந்துமத கொள்கைகளும் கோட்பாடுகளும்

(மதம் வெளியீட்டின் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை)

திருமதி. பொ. திருஞானம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

'வைகறைத் துயிலெழு' என்னும் கொள்கையுடையது இந்துமதம். சூரியன் உதிக்குமுன் எழுந்து ஸ்ஞானஞ் செய்து சந்தி யாவந்தனஞ் செய்ய வைத்தது இந்து மதம். விடிந்த பின்பும் தூங்கினால் வீடும் விடியாது என்பது மூத்தோர் கருத்து. நேரத்தோடு விழித் தெழுந்து நேரத்தோடு படுக்கைக்கு போதல் நோயற்ற, அறிவு ஆற்றல் மிக்க நல்வாழ்வு வாழ வழியாகும் என்பது வைத்திய விஞ்ஞானம்.

நான் ஒரு இந்துமதத்தவன் என்பதைச் சொல்லாமலே எடுத்துக் காட்டும் முதற் சின்னம் விபூதி. 'நீறில்லா நெற்றி பாழ்' என்பது சான்றோர் வாக்கு. இந்துமத இறைவன் தனது திருமேனியெங்கும் திருநீறு அணிந்துள்ளான், விபூதி பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுவதாலால் உண்டாவது. இதை அணிந்தார்க்கு பிணியில்லை: இது மந்திரமும், தந்திரமும், மருந்துமாவது என்பது சைவசமயக் கொள்கை. இதையணிந்து த்ன் தீரா நோயான சூலைநோய் தீரப்பெற்றார் திருநாவுக்கரசர் என்பது வரலாறு. இந்த விபூதி உடலிலே தோன்றும் குளிர், விறைப்பு ஆகியவற்றை அகற்றி உடலை வெது வெதுப்பாக வைத்திருக்க வல்லது. பசுவின் சாணம் இந்துமதத்தினரின் ஆசார, ஆரோக்கிய வாழ்வில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. இது புனிதமானது. இதை உபயோகிக்கும் இடத்தில் இறைவன் அருள் இருக்கும் என்பது இந்துக்களின் கொள்கையும் நம்பிக்கையுமாகும். இதன் கோட்பாடாகவே நம் முன்னோர்கள் தமது வீட்டையும், சுற்றுப் புறங்களையும் ஆசாரமாகவும், துப்புரவாகவும் வைத்திருக்கப் பசுவின் சாணத்தை உபயோகித்தார்கள். நாகரீகம் வளர்ந்து கல்வீடுகள் தோன்றிவிட்ட இக்காலத்து இந்துக்கள் பலர் தம்வீட்டில் ஒரு பகுதியை மண்நிலமாகவே வைத்து அதை சாணத் தினால் மெழுகி உடல் ஆரோக்கியம் பேண என அதில் படுத்துறங்குவதை நாம் இன்றும் காணலாம். எல்லா இந்துக்களும், வீடு கல் வீடானாலும் தமது சமையல் கட்டை சாணத் தால் மெழுகியே உபயோகிக்கின்றனர். சாணம் துர்நாற்றத்தை அகற்றி நோய் நொடியணுக விடாது தடுத்து சுகத்தைப் பேணிப்பாதுகாக்கின்றது. பசுவின் சாணம் ஒரு கிருமிநாசினி: அசுத்த மணங்களைப் போக்குவது: ஒரு தொற்றுநீக்கி சாதனமும் ஆகும்.

இராக்காலங்களில் வெளியே உணவு கொண்டு போவதாயின் அதன்மேல் கரிக்கட்டி வைத்துக் கொண்டுபோவதை கடைப்பிடித்தனர் நம்முன்னோர். இரவிலே உலவும் தீய சக்திகளின் தன்மை அந்த உணவைத் தாக்காமல் இருக்க கரிக்கட்டி உதவும் என்றனர். விஞ்ஞானம் இதை மூட நம்பிக்கை யென்று நகைத்ததா? இல்லை, இரவில் வீசும் காற்றில் உள்ள இராசயன சக்திகள் சில உணவில் படும்போது அந்த உணவு பாதிப் படைந்து உண்பதற்கு ஏற்றதாகாததாகி விடுகின்றது. கரிக்கு அத்தீய சக்தியைத் தன் பால் உறிஞ்சி வைத்திருக்கும் தன்மையுண்டு: அல்லது அச்சக்தியை உணவில் படாது தடுக்கும் தன்மையுண்டு. ஆகவே உணவின் மேல் வைக்கப்படும் கரிக்கட்டி அந்த உணவை அத்தகைய தீய காற்றலையிலிருந்து பாதுகாக்கின்றது என்பது விஞ்ஞான விளக்கம்

நெற்றியில் திலகம்இடுதல் இந்துக்களின் பெரும் கொள்கை கோட்பாடு களில் ஒன்று. அதை அவர்கள் அழகுச்சின்னமாக மட்டுமல்ல ஒரு பாதுகாப்பு அணிகலனாகவுமே போற்றியணிந்தனர். நெற்றியிலே விரும்பிய ஓரிடத்தில் அணிந்து விடவில்லை. இரு புருவங்களுக்குமிடையே, மூக்கிற்கு மேலே அணிந்தனர். குழந்தைகளும், யுவதிகளும் கறுப்புத் திலகமும், மணமான பெண்கள் மங்களகரமான குங்கும திலகமும் அணிய வைத்தார்கள். இது கண்ணூ று நாத்திட்டி, போன்றவற்றிலிருந்தும், பிறனொருவனின் தீய எண்ணத்தினின்றும் காப்பாற்றும் என்றும் திட மாக நம்பினார்கள்.

'கல்லெறிக்குத் தப்பினாலும் கண்ணெறிக்குத் தப்ப இயலாது' என்ற கொள்கையுடையோராக இருந்தனர். மணமான பெண்ணின் குங்கும திலகமும், தாலியும் அரணாக நின்று அவளைக் காப்பது என்பது இந்துக்களின் தீர்க் கமான கொள்கை.இதன் பலாபலன்களை அநுபவ வாயிலாக எடுத்தியம்பினாலும் இன்று நாகரீக போர்வையில் இந்துக்களே இதை உதாசீனப் படுத்துகின்ற இவ்வேளையில் விஞ்ஞான ஆராட்சி இதை அர்த்தம் நிறைந்ததாக ஏற்கின்றது. அது என்ன சொல்கி றது? மனித உடலில் இருபுருவ நடுவேயும் உள்ளே இருப்பது பெருவெளி. மனித உடலில் மிகவும் உஷ்ணம் கூடிய இடமும் இதுவே ஆகும். இந்த இடத்தூடாக ஒருவரை பிறரொ ருவர் கூர்ந்து சிறிது நேரம் நோக்குவாராயின் அப்பார்வை நோக்கப்படுபவரைத் தாக்கி மயங் கவைக்கிறது. இதுவே ஆங்கிலத்தில் Hypnotism என்று சொல்லப்படுகின்றத.

இத்தகைய பார்வையின் தாக்கம் ஏற்படாமல் தடுக்கவோ அல்லது குறைக்கவோ அந்த இடத்தை மறைத்து இடப்படும் திலகம் உதவுகிறது என்பத விஞ்ஞான ஆராய்ச்சி. மேலும் கறுப்பு நிறமே ஒளி ஊடுருவிச் செல்வதை மிகவும்கூடுதலாக தடுக்கவல்லது. குழந்தைகளும், யுவதிகளும் மென்மையான உடலமைப்பைக் கொண்டவர்கள். எளிதில் தாக்கங்களுக்கு ஆளாகக் கூடியவர்கள். அவர் கள் மேல் இத்தாக்கம் ஏற்படுவதைத் தவிர்க்க ஒளியூடுருவலைக் குறைக்கும் கறுப்புநிறத் திலகம் உகந்ததே என்பது விஞ்ஞானிகள் கருத்து.

இரு புருவ நடுவேயும் அமிர்தமுண்டு என இந்துமத அநுட்டான விதியிலே கூறப்படுகின்றது. கூடிய உஷ்ண நிலையால் இது பாதிப்படையாமலிருக்கவும் வேறு தாக்கங்களைக் தவிர்க்கவும் ஆண்கள் அந்த இடத்தை மறைத்து குளிர்ச்சியான சந்தன மணிந்து அச்சந்தணத்தின் குளிர்ச்சியைப் பேண அதன் மேல் குங்குமம் அணிகிறார்கள். மகான்கள், வித்துவான்கள், புரோகிதர்கள் இதை என்றும் அணிந்துள்ளதை நாம் காணலாம்.

மனிதன் இராசதம், தாமசம், சாத்துவீகம் எனும் முக்குணவயப்பட்டவன் என்பதும். இக்குணங்கள் ஒருவன் உட்கொள்ளும் உணவின் தன்மையாலேயே ஏற்படுகின்றன என்பதும் இந்துக்கள் கொள்கை. இன்ன இன்ன உணவுகள் மனிதனை இன்ன இன்ன குணத்தவனாக்கும் என்பதை அநுபவத்தால் அறிந்து சாத்துவீகமே குணங்களுள் சிறந்தது என்றும், தாவர உணவே ஒருவனை அந் நிலையில் நிறுத்தும் என்னும் கொள்கை கொண்டது இந்துமதம். உளத்தூய்மை, கட்டுப் பாடு, நல்லாரோக்கியம், மன அமைதி, புலனடக்கம் ஆகியவற்றைத் தரவல்லது தாவர உணவே என்னும் தீவிரகொள்கை யுடைத்தாய் அதனை மிகவும் கோட்பாட்டுடன் பேணுவது இந்துமதம். விஞ்ஞானத்தின் கருத்தை நோக்குங்கால் உடல் உளவளர்ச்சிக் கும், மனக்கட்டுப்பாடு, பக்குவம், சகிப்புத்தன்மை ஆகியவற்றிற்கும் சிறந்தது தாவர உணவே என நிரூபிக்கின்றது. கேவலம்! இன்றைய வாழ்க்கைக்கும், நடைமுறைக்கும் வாழும் நாட்டு சீதோஷ்ணநிலைக்கும் தாவர உணவு ஒத்துவராத ஒன்று எனக்காரணம் காட்டி இந்துமதத்தினரே நிராகரித்து மாமிசபோசகராக மாறியுள்ள இதே காலத்தில் இந்துமதக் கொள்கைகள், கோட்பாடுகள் உகந்தவை என்பதை உணர்ந்து அதற்கு மதிப் ளித்து எத்தனையோ மேல்நாட்டவர்கள் இந்து மதத்தவராகவும், தாவரபோசகராகவும் மாறியு ள்ளமை உலகம் அறியும்.


இந்துமத வாழ்க்கையில் உணவுடன் விரதங்களுக்கும் முக்கிய இடம் கொடுக்கப் பட்டுள்ளது. விரதம் என்றால் என்ன? மனதை ஒருமுகப்படுத்தி உடலிச்சைகளை அடக்கி உடலையும் மனதையும் தூய்மையாக்கி இறை சிந்தனையுடன் அமைதியாக இருத்தலே விரதம். இப்படி இருப்பதற்கு உதவும் சாதனங் களில் உணவு ஒரு முக்கி பங்கை வகிக்கிறது. வேண்டாத உணவுகளை விடுத்தலும், உண்டி சுருங்குதலும் மனத்தைக் கட்டுப்படுத்த உதவுவதோடு நல்லாரோக்கியத்தைப் பேணி நோயற்ற வாழ்வு வாழவும் உதவுவது என்பது இந்துமதத்தினர் கொள்கை மட்டுமல்ல, விஞ்ஞானமும் ஏற்றுக் கொண்டதே.

விரதத்திலிருந்து விரிவடைந்த ஒரு நிலையே தியானம். ஐம்புலன்களின்றும் விலகி மனத்தையும் மூச்சையும் கட்டுப்படுத்தி ஒரு சீரான பாதையிலே இயங்கவைத்து ஆத்ம சாதனை புரிதலே தியானம். இதைச் சார்ந்ததே யோகாப்பியாசமும். ஆரோக்கிய வாழ்வுக்கு நல்லுணவு எவ்வளவு அவசியமோ அது போல் நித்திரையும் அவசியம். ஆனால் தியானத்தின் ஆற்றலால் நித்திரையால் பெறும் ஓய்வை விட அதி நிம்மதியான ஓய்வு கிடைக்கிறது.

தொடரும்

இரண்டு இடங்களில் நடைபெறும்

விஷேட பஜனைகள்

மார்க்கம் அன் எக்ளின்ரன் சந்திப்பில்

பகவத் கீதை வகுப்பு, பஜனை, தியான பயிற்சி முறைகள் இராஜயோக விளக்கங்கள், தற்கால நடைமுறைக்கு ஏற்ற சமய நடைமுறை விளக்கங்கள் நடைபெறுகின்றது.

புதன்கிழமைகளில் மாலை 6.00 இலிருந்து 8.30 மணிவரை

விபரங்களுக்கு: (416) 7697747, (416) 4315997, (416) 4292904

இடம் : யாழ் பான்ஸி இங். 272, Markham Rd, (Markham & Eglinton)

கிப்ளிங் அன் ஸ்ரீல்ஸ் சந்திப்பில்

பஜனை, தியானமுறைகள், சிறுவர்களும் பெரியோர்களும் பயனடையக்கூடிய தற்கால நடைமுறைக்கேற்ற நல்நெறிக் கதை களும் சமய விளக்கச் சொற்பொழிவுகளும் நடைபெறுகிறது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.30 இலிருந்து 11.00 மணிவரை

இடம் : **தமிழ்க் கலைக் கழகம்,**

5010 Steeles Ave West, Unit #1(Kipling & Steeles)

விபரங்களுக்கு : (416) 7487254 (416) 7697747

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் - கனடா (416) 4292904

வாழ்வின் தர்மவிதிகளை வலியுறுத்துவது இந்து மதம்

குருஷேத்திர யுத்தகளத்தில் ஒரு காட்சி பாண்டவர்களும் கௌரவர்களும் எதிரே அணிவகுத்து நிற்கிறார்கள். யுத்தம் ஆரம்பிக்கச் சிறுபொழுது இருந்தது. யுத்த நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதாக இருபகுதியினரும் வாக்குறுதி செய்கிறார்கள் நிராயுதபாணிகளை தாக்குவதில்லை. இரவில் யுத்தம் செய்வதில்லை. தூக்கத்தில் இருக்கும் எதிரிகளைத் தாக்குவதில்லை. எதிரியிடம் என்ன ஆயுதம் இருக்கிறதோ அதற்கு ஒப்பான ஆயுதத்தைக் கொண்டே தாக்குதல் வேண்டும். குதிரைவீரன் எதிர்ப் படையில் உள்ள குதிரை வீரனேயே தாக்கலாம். தரையில் நிற்பவனைத் தாக்க கூடாது. சரணடைந்தவர்களைப் பாதுகாத்தல் வேண்டும் யுத்தத்துக்குத் தயார் நிலையில் இல்லாதவனையும், ஆயுதங்களை இழந்து விட்டவனையும், பின்வாங்கி ஓடுபவனையும் கொல்லலாகாது. இவ்வாறான நேர்மையின் அடிப்படையில் வகுக்கப் பட்ட நியதிகளைக் கொண்டதே யுத்தம்.

யுத்த தர்மம்

யுத்த தர்மத்தைப் பேணுவதாக வாக்குறுதி செய்த கையோடு பாண்டவர்களின் அணியிலிருந்த யுதிஸ்டிரன் தனது தேரைவிட்டு இறங்கி நிராயுதபாணியாகச் சென்று எதிரிகளின் அணியில் இருந்த தனது பாட்டனார் பீஷ்மரையும் குரு துரோணரையும் வலம் வந்து காலில் விழுந்து வணங்கிஅவர்களது நல்லாசிகளைக் கோருகின்றான் இறங்கி நிராயுதபாணியாகச் சென்று எதிரிகளின் அணியில் இருந்த தனது பாட்டனார் பீஷ்மரையும் குரு துரோணருரையும் வலம் வந்து காலில் வணங்கி அவர்களது நல்லாசிகளைக் கோருகின்றான். தன்னை வளர்த்து ஆளாக்கிய பாட்டனாரும் பீஷ்மரையும் சகல கலைகளையும் போதித்த குரு துரோணரையும் எதிர்க்கப் போகிறோமே என்ற ஆதங்கத்தில் அவர்களை எதிர்த்து போர் புரிவதற்கு அவர்கள் அனுமதியைக் கேட்கின்றான் யுதிஷ்திரன். இது ஷத்திரிய தர்மம்.

ஆ. குமரகுரு

பீஷ்மரும் துரோணரும் நல்ல ஆசானுக்குரிய மரபுகளுக்கேற்ப தங்களால் உருவாக்கப்பட்ட யுதிஸ்திரனை மனதார வாழ்த்தி "நீ தர்மத்தைச் சார்ந்து நிற்கிறாய்! வெற்றிக்குரியவனாகுக, என்று ஆசிகூறினர்கள். இது குரு தர்மம். இவ்வாறாக வேதகாலத்தில் ஒவ்வொரு வாழ்க்கை முறைக்கும் அதற்குரிய தர்மம் வலியுறுத்தப்பட்து.

வாழ்க்கை தர்மம்

நல்ல குடும்பஸ்தர்களுக்கு கிரஹஸ்த தர்மமும் நல்ல மனைவிகளுக்கு பத்தனி தர்மமும் உணர்த்தப்பட்டன. வைத்தியர்களுக்கு ஒரு தர்மமும் சிற்பிகளுக்கொரு தர்மமும் என எல்லாத் தொழில்களில் உள்ளவர்களுக்கும் அதற்குரிய தர்மம் எது என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பிராமணர்கள் ஷத்திரியர்கள், வைசியர்களுக்கு அவரவருக்குரிய வர்ணதர்மம் நடை முறையிலிருந்தது. சாமான்ய மக்கள் எல்லோருக்கும் பொதுவான சாமான்ய தர்மம் கடைபிடிக்கப்பட்டது. அகிம்சை, சத்தியம், அஸ்தேயம், சௌச்சம், இந்திரிய நிக்கிரஹம், என்னும் ஒழுக்க நெறிகள் "சாமான்ய தர்மம்." எனப்பட்டன. நாளாந்த வாழ்க்கையின் நெறிகளையும் ஒழுக்கங்களையும் வலியுறுத்தும் தர்மவிதிகளை மனு ஸ்மிருதிகள் அல்லது யுகதர்மம் என்று அழைக்கப்பட்டன. இவைகள் கால மாறுதல்களுக்கேற்ப மாற்றம்

(**45** ம் பக்கம் பார்க்க)

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

ந்ததாக உள்ளது. தோஷங்கள் உள்ள நாளில் பிரயாணம் செய்தால் பல விதமான சிரமங்கள் ஏற்படலாம். இந்த சங்கடமான நிலையில் என்ன செய்ய வேண்டுமென்றால், தாம் பிரயாணம் புறப்படவேண்டிய நாளுக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குள்ளாக நல்ல சமயத்தில் தாம் இருக்கும் ஊரிலேயே வேறு வீட்டிற்கு தம் சாமான்களுடன் போயிருந்து (மறுபடியும் தம் வீட்டிற்குத் திரும்பி வராமல்) குறிப்பிட்ட நாளில் பிரயாணம் செய்தால் தோஷமுள்ள நாட்களில் பிரயாணம் செய்வதால் ஏறபடக்கூடிய எந்த சிரமமும் ஏற்படாமல் பிரயாணம் வெற்றிகரமாக முடியும்.

இதற்குச் சௌகரியமில்லாதவர்கள் தமது சாமான்களை, முன் கூட்டியே நல்ல நாளில் வெளியூருக்கு அனுப்பிவிட்டு தாம் மட்டும் குறிப்பிட்ட நாளில் பிரயாணம் செய்யலாம்.

இந்நாட்களில், பத்திரிகைகளில் ஆகாய விமானம், ரயில், வாகனங்கள் இவைகளால் ஏற்படும் விபத்துக்களைப்பற்றி பிரசுரமாகாத நாட்களே இல்லை எனலாம். இத்தகைய விபத்துக்களெல்லாம் காலபலத்தைப் பற்றிச் சிந்தியாமல் பிரயாணம் செய்வதால் ஏற்படுகின்றன வென்பதை சாஸ்திர அறிஞர்கள் நிரூபித்துக்காட்டி இருக்கிறார்கள்.

ஆகவே, பிரயாணச்சீட்டைப் பதிவு செய்து கொள்பவர்கள் தாம் பிரயாணம் செய்யவேண்டிய நாள் தோஷமுள்ளதாக இருந்தால் நல்ல நாளில் வீட்டை விட்டுப்புறப்பட்டு அதே ஊரில் வேறு இடத்தில் தங்கிவிட்டு, குறிப்பிட்ட நாளில் பிரயாணம் தொடங்கினால் நன்மையுண்டாகும் என்பதை இந்தப் பரஸ்தானம் என்ற நமது புராதன முறை நமக்கு அறிவுறுத்துகின்றது. இதைப் பின்பற்றுவதில் எவ்வித சிரமமோ நஷ்டமோ இல்லையன்றோ! சோதிடத்தை நம்பாத சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். "நாள்செய்வதை நல்லோர் செய்யார்" எனும் முதுமொழிக்கிணங்க நல்ல நாட்களிலே காரியங்களாற்றினால் நன்மை நிட்சயம். சோதிடம் நூற்றுக்கு நூறு உண்மை. சோதிடர் சொல் பவர்களுக்கு திறமை வேண்டும். தூய்மையுடனும் ஆழமான அறிவுடனும் இருக்கும் சோதிடர்கள் மூலம் தான் உண்மையான பலனையும் அறியமுடியும்.. எனினும் சில முக்கிய விடயங்களை நாமெல்லோரும் அறிந்து நலமடைவோமாக!

நலன்கள் பெற்று மகிழ்ந்திருப்போம்!